


# மீன்களைத் தின்ற ஆறு

சிவனு மனோஹரன்

மலையகத் தமிழ் இலக்கியம், பாட்டாளி வர்க்கச் சிந்தனை மிகுந்த இலக்கியமாகும். அந்தச் சிந்தனையில் அனைவருமே நிலைப்பாடு கொண்டிருந்த போது, சிவனு மனோஹரன் சற்று விலகி, அனைவருமே எழுத மறந்த... எழுதுவதற்கு அக்கறைப்படாத... சமூக விழுமியங்களைப் பற்றி எழுத முன் வந்தவராகின்றார்.

மு. சிவலிங்கம்

# மீன்களைத் தின்ற ஆறு

சிறுகதைகள்

சிவனு மனோஹரன்

**மீன்களைத் தின்ற ஆறு** : சிறுகதைத் தொகுப்பு • முதற்பதிப்பு : மே, 2016 • ஆசிரியர் : சிவனு மனோஹரன் • © சிவனு மனோஹரன் • பக்கங்கள் : 140 • அட்டைப்படம் : சுதர்மமகாராஜன் • கணினி வடிவமைப்பு : இரா. பிரதீபன் • வெளியீடு : பெருவிரல் கலை இலக்கிய இயக்கம்

**Meengalai Thinra Aaru** : Short Stories • First Edition : May, 2016 • Author : Sivanu Manoharan • © : Sivanu Manoharan • Pages 140 • • Cover Designed by : Sutharmamaharajan • Book Designed by : R.Pratheepan • Publication : Peruviral Kalai Ilakkiya Iyakkam.

E-mail : : sivanumanoharan@gmail.com

ISBN 978-956-43390-0-2

விலை : 400/= ரூபா

# சமர்ப்பணம்

மன அழுத்தங்களாலும் குடும்ப
நெருக்கீடுகளாலும் பாதிக்கப்பட்ட
மலையகக் குழந்தைகளுக்கு

# முன்னுரை

ஈழத்து நவீன இலக்கியப் பரப்பில் தனித்துவம்மிக்க தனது படைப்புக்களால் ஆழமாகத் தடம்பதித்த சிவனு மனோகரனின் மூன்றாவது சிறுகதைத் தொகுதி இது. ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களாக சிறுகதைகள் எழுதிவரும் இவர் ஏற்கனவே "ஒரு மணல் வீடும் சில எருமை மாடுகளும்", "கோடாங்கி" ஆகிய சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

இவரது ஆரம்பகாலப் படைப்புகளிலிருந்தே இவருடன் நெருக்கமானவன் என்ற நிலையில், இவரிடம் எழுத்து வன்மையும் இலக்கிய அழகியல் வெளிப்பாடும் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு வளர்ச்சிபெற்று வந்துள்ளமையை என்னால் அவதானிக்க முடிகிறது.

மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களை, சமூக அனுபவ விஸ்தரிப்புடன் கூடிய படைப்புகளாக இவரது எழுத்துக்கள் வெளிக்கொணர்கின்றன.

சமூக நலன் பற்றிய அக்கறையோடும் சொந்த மண்பற்றிய நேசிப்போடும் எழுதுகின்ற ஒரு மண்வாசனை படைப்பாளியாக இவர் தன்னை இனங்காட்டி வந்துள்ளார்.

இத்தொகுதியின் மகுடக் கதையாக விளங்கும் "மீன்களைத் தின்ற ஆறு", மலையகத்தில் நிலவும் குடியிருப்புப் பிரச்சினையால் ஏற்படும் சமூகச் சீரழிவை ஒரு வன்மையான முனைப்புடன் வெளிப்படுத்துகிறது.

இரண்டு நூற்றாண்டுகள் கழிந்த நிலையிலும் இன்றும் தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையாக இது விளங்குகிறது. குடும்பத்தில் தாய், தந்தை, பிள்ளைகள் என யாவரும் ஒரு சிறிய அறைக்குள் முடங்கி வாழவேண்டிய நிலையில், பலவேறு சிரமங்களை எதிர்கொள்வதையும், சிறுபிள்ளைகள் காணக்கூடாதவற்றை யெல்லாம் கண்டு அதுபோலத் தாமும் செயற்பட முனைவதையும் எவ்வித விரசமும் தோன்றாத வகையில் இக்கதையில் சொல்லி விடுகிறார் ஆசிரியர்.

"எங்கப்பா இப்பிடித்தான் அம்மாவுக்குச் செய்வாரு, நீங்க பாக்கல" என்ற அந்தச் சிறுமியின் கோப வார்த்தைகள் சமூகத்தின் முகத்தில் ஓங்கி அறைவது போலிருக்கிறது. இக்கதை வெறும் கற்பனாவாதப் பிரசவம் அல்ல. மலையக மண்ணின் வாழ்வியலின் ஒரு பாரிய அவலத்தை இது ஆழமாகப் பதிவு செய்கிறது. இத்தகைய அவலங்களில் இருந்து விடுபடவேண்டுமென்ற விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இக்கதையின் தலைப்பு குறியீடாகச் சொல்லும் விடயங்கள் தேர்ந்த வாசகனைச் சிந்திக்கவும் தேடல் செய்யவும் வைக்கின்றன.

"அமராவதியின் ஆறாம் பிரசவம்" என்ற கதை வேறோர் சமூக அவலத்தைப் பேசுகிறது. குடிகாரக் கணவனுக்கு வாழ்க்கைப் பட்டவள் அமராவதி.

"போதையில் வந்தால் ஒவ்வொரு நாளும் அவனுடன் படுத்தாக வேண்டும். கொஞ்சம் நிதானமிருந்தாலும் எரிந்து விழுவான்.

போதையோடு சேர்ந்து ஊரவர் ஊற்றி நிரப்பும் அபாண்ட வார்த்தைகளும் அன்றைய நாள், அடிக்கும் உதைக்கும் அத்திவாரமாய் அமையும்"

தோட்டத்து வெல்பயார் நோனா சொன்ன வார்த்தைகள் இன்னும் அவள் காதுக்குள்ளேயே நிக்கிறது.

"ஒழுங்கா மருவாதயா இந்த முறசரி ஒப்புரேசன் பண்ணிக்க, போன புள்ளைக்கே பண்ணிக்கனு தலபாடா அடிச்சிக்கிட்டேன் கேட்டியா? இப்ப வயித்த தள்ளிக்கிட்டு வந்து நிக்க ஒனக்கு வெக்கமா இல்லயா? பன்னீருப் புத்தி ஒனக்கு நல்லாத் தெரியும் தானே, மொரட்டுப்பய கோவக்காரன் கூட, பொறந்த பொறப்பையே சந்தேகப்படுவான். இப்பிடியே அடி ஒதனு எத்தன நாளைக்குதாண்டி மாரடிப்ப. இதுக்குமேல ஒனக்கு ஒன்னும் சொல்லுறதுக்கு இல்ல. யோசிச்சி செஞ்சுக்க" அமராவதிக்கு ஆறாவது குழந்தை வயிற்றில் உண்டாகிறது. அது எப்படி உண்டாகியது என அவளுக்கே தெரியாத நிலை. மறைக்க முயல்கிறாள். மனதுக்குள் வைத்து மறுகி மறுகி ஈற்றில் மரணத்தைத் தழுவுகிறாள்.

இக்கதையின் கட்டமைப்பில் ஆசிரியர் பல்வேறு விடயங்களைச் சொல்லிச் செல்கிறார். கொழுந்தெடுக்கும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விபரிக்கிறார். சமுதாயம் என்ற தளத்தில் நின்று மானுட நடத்தைகளை பலகோணங்களில் அலசுகின்ற ஆசிரியரது பார்வை விசாலமானது. அவர்தரும் செய்தி சமூகத்தை வழி நடத்த வல்லது.

"அழுக்கு", "ஜென்சியும் ஜேசுமணிச் சித்தப்பாவும்" ஆகிய கதைகளிலும் குடிபோதையால் ஏற்படும் வேறுவிதமான அவலங்களைப் பார்க்கிறோம்.

நகரக் குப்பைகளை அள்ளி சுத்தப்படுத்தும் தொழிலாளி மாயா. அவன் போதையில் மிதப்பான். அறுப்புச் சாப்பிலும் வேலை செய்வான். சூதாடுவான், மனைவியின் தாலியும் ஒருநாள் அவனது சூதாட்டத்துக்கு இரையாகிறது. உழைத்து உழைத்து நோய்வாய்ப்பட்ட மனைவியை அவன் கவனிப்பதே இல்லை. நோயில் கிடந்து அவள் மாண்டு போகிறாள்.

"ஜென்சியும் ஜேசுமணிச் சித்தப்பாவும்" என்ற கதையில், மதுபோதையில் சித்தப்பனே தனது மனநலமற்ற பெறாமகளை பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கும் நிலைமையைக் காண்கிறோம். இக்கதையில் வீட்டில் உள்ள பூனை, தான் ஈன்றெடுத்த குட்டிகளையே சாப்பிடுவதை குறியீடாகக் காட்டும் ஆசிரியரது சித்திரிப்புத் திறன் பாராட்டுக்குரியது.

மலையகத்தை எதிர்கொள்ளும் இன்னுமோர் பிரச்சினை பெண்கள் குடும்பத்தைப் பிரிந்து வெளிநாடு செல்வது. இதனால் பாதிக்கப்படுவது அவர்களது பிள்ளைகள்தான் என்பதைப் புரியவைக்கும் கதை "தாராவின் சப்பாத்து". "எனக்கு புதுசப்பாத்து வாங்கிட்டு வாறேனுதானே வெளிநாட்டுக்குப் போன ஏம்மா? திரும்பி வரல? சொல்லுமா? சொல்லுமா? என்று குழி மேட்டில் குவிந்துகிடக்கும் மண்ணை ஆவேசமாக அள்ளி வீசி அழத்தொடங்கினாள் தாரா" சம்பவங்களினூடாக உணர்வு நிலைகளைச் சித்திரிக்கும் பாங்கும், அந்த உணர்வு நிலைக்குப் பொருத்தமான பகைப்புல வர்ணனையும் இலக்கியத் தேடலுடன் கூடிய கலைத்துவமும் இக்கதையை ஒரு தரமான சிறுகதையாக்கி விடுகிறது. சிறுவர் உளவியல் இக்கதையின் மையப்பொருளாகிறது.

தோட்டத்துப் பெண்களைக் கிள்ளுக் கீரையாக நினைத்து அவர்களது கற்பை விலைபேசும் கண்டாக்கு, புரட்சி

பெண்ணொருத்தியால் கொலை செய்யப்படுவதைக் கூறுகிறது "மட்டக்குச்சி".மலையக பெண்களின் ஒழுக்கத்தையும் புரட்சி குணத்தையும் முறையாக பதிவு செய்திருக்கிறது.

இன்றைய இளவட்டங்கள் கொஞ்சம் படித்துவிட்டால் தோட்டத்திலே வேலை செய்வதை விரும்புவதில்லை. டவுனிலே வேலை தேடுவார்கள். இதில் பெண்களும் அடங்குவர்.

"கோகிலாவும் கோணல் வகிடும்" என்ற சிறுகதையில் வரும் பெண், "தாயின் கண்ணைக்கட்டிவிட்டு இரவு நேரங்களில் உல்லாசமாய் முதலாளியோடு சல்லாபித்துக் கிடந்ததன் விளைவு வயிற்றில் உயிராய் உருவெடுக்கும் வரை உணரப்படவில்லை. அதுவரை சிந்தித்திராத பக்கங்களையெல்லாம் சிந்தித்து, பயந்து அவனுடன் போராடிப் போராடி திராணியற்றுப் போனவளுக்கு முதலாளிக்கு இந்தியாவிலே ஒரு குடும்பம் இருப்பது அதுவரை தெரியாது" படைப்பாளி சமூக அக்கறையோடு முன்வைக்கும் இச் செய்தி. ஓர் எச்சரிக்கை அது ஆசிரியரின் இலக்கிய சிரத்தையை வெளிப்படுத்துகிறது.

இளவட்டங்களில் ஒரு சாரார் தோட்டத்தில் வேலை செய்வதை விடுத்து கொழும்பை நோக்கி வேலை தேடிச்செல்வதும் இன்று சர்வசாதாரணமாகி விட்டது. இத்தகைய சமூக பிரச்சினைகளை அக்கறையோடு பேசியிருப்பது இத்தொகுதியின் தனித்துவமாகும். தோட்டத்து மண்ணை நேசித்த கோபாலு, அந்த மண்ணிலேயே தலைசாய்க்க வேணும் என்று விரும்பிய போதிலும் காலம் செய்த கோலத்தால் கொழும்பிலே வேலைசெய்து அங்கேயே மரணித்து அடக்கம் செய்யப்பட்ட நிகழ்வை சோகத்துடன் கூறும் கதை மண். இதில் தவிர்க்க முடியாமல் மலையக மண்வாசனை கமழ்கிறது.

"வகுப்பறைக் காவியங்கள்" ஓர் அப்பாவி மாணவனின் கதை. தான்

செய்யாத குற்றத்திற்காக குற்றவாளியாக நோக்கப்படும் ஒரு மாணவன் தனது அன்புக்குப் பாத்திரமான ஆசிரியருக்கு உண்மையை விளக்கிக் கடிதம் எழுதிவிட்டு, தனது பாடசாலைப் படிப்பையும் இழந்து கொழும்புக்கு வேலைக்குப் போகிறான். இப்படி வகுப்பறைகளில் புதைந்துக்கிடக்கும் காவியங்களுக்காக உரத்து ஒலிக்கும் ஆசிரியரின் குரல் பாராட்டுக்குரியது.

"கொழும்புத்தம்பி" கதையில், பத்து வயதில் கொழும்புக்கு வேலைக்குச் சென்ற ஒரு சிறுவன் பத்துவருடம் கழித்து தோட்டத்துக்குத் திரும்பி வருகிறான். அவன் செயற்பாடுகளில் இளசுகள் ஈர்க்கப்படுவதும் அவனைப் பின்பற்றி சில இளவட்டங்கள் கொழும்பு செல்வதுமாக, இளவட்டங்களில் ஏற்படும் மாற்றங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது இக்கதை.

மலையகத்தோட்டங்கள் பலவற்றில் ஆண்டுதோறும் ஆடப்படும் காமன் கூத்தைப் பின்புலமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட "காமன்பொட்டல்" சிறுகதை தோட்டத்தில் நிலவும் சாதிக்கொடுமை பற்றிப் பேசுகிறது. "சின்னச்சாதிப்பய" என்பதால் தனது மகளின் காதலனையே சதிசெய்து கொன்றுவிடும் தோட்டத்துத் தலைவரின் கொடூரத்தைப் பார்க்கிறோம்.

இக்கதையில் மனித இன்னல், மனித அவலம் உள்ளீடாகவும் நேரடியாகவும் பேசப்படுகிறது. மனித அவல விடுவிப்புத்தான் உண்மையான கலை இலக்கியத்தின் தேடற் பொருளாகும். அதற்கான சிந்தனையை முன்வைக்கிறது இந்தக்கதை.

தோட்டத்திலே குறிசொல்வதும், விபூதி மந்திரித்துக் கொடுப்பதும், சூனியம் வெட்டுவதும் பொட்டுவின் வேலை. அவளது தாய் பாப்பாத்தியும் அதைத்தான் செய்தாள். இப்போ அவளுக்கு வயதாகிவிட்டது. தாய் தனது தொழிலுக்கு உதவியாக

அழைத்துவரப்படவன்தான் கைத்தம்பி. தாய் பாப்பாத்திக் கிழவி இறந்தபோது கைத்தம்பிதான் தலைமகனாய் எல்லாக் காரியங்களையும் செய்தான். ஆனாலும் அவன் வந்த நாள்முதல் அவனுக்கும் பொட்டுவுக்கும் இடையில் இருந்த இணக்கும் பிணக்கும் உச்ச நிலையை அடைந்தபோது அவன் அவளை விட்டு நீங்கிவிடுகிறான். காலமெல்லம் அவனைக் கரிச்சுக்கொட்டிக் கொண்டிருந்த பொட்டு அவனது பிரிவின் ஆற்றாமையால் தற்கொலை செய்துகொள்கிறாள்.

இக்கதையில், சொன்னவற்றிலும் பார்க்க சொல்லாமல் விட்டவையே அதிகம். அது கதைக்கு ஒரு கலையழகைத் தருகிறது. சிவனு மனோகரனின் எழுத்துலகம் விசாலமானது. சமூகம் பற்றிய பிரக்ஞையும் மானுடம் மேன்மையுற வேண்டும் என்ற உணர்வும் கொண்ட படைப்புக்களாக இவரது எழுத்துக்கள் மிளிர்கின்றன. இவை சமுதாய மாற்றத்துக்கு வேண்டிய வலிமையான இயக்க உணர்வை வாசகர் மனதில் ஏற்படுத்துகின்றன.

மண்வளச் சொற்கள், சிறந்த மொழி நடை, தேர்ந்தெடுக்கப்பட்ட சொல்லாடல், கலைத்துவமான உவமைகள், கருத்துச் செறிவு, சிந்தித்துப் புரிந்து கொள்ள வேண்டிய தத்துவங்கள், ஆழ்ந்த வாசிப்பு மூலம் தெரிந்து கொள்ளும் கதைப்பின்னல் போன்றவை சிவனு மனோகரனின் படைப்புகளுக்கு வலுவூட்டுகின்றன.

நல்லதொரு சிறுகதைத் தொகுதியைத் ஈழத்து தமிழிலக்கியத்துக்கு தந்த சிவனு மனோகரனை பாராட்டி மகிழ்கிறேன்.

**தி. ஞானசேகரன்**
ஞானம் பணிமனை
3-பி, 46ஆவது ஒழுங்கை,
கொழும்பு - 06

# அணிந்துரை

படைப்பாளர் சிவனு மனோஹரன் 90களுக்குப் பின் முகிழ்த்தவர்களுள் முக்கியமான ஒருவராவார். மலையகப் படைப்புக்களின் இலக்கிய காலங்களை 30 கள், 60 கள், 75 கள் என்றும், அதன் பின்னர் 1990 முதல் 2000 என்றும், 2000 த்துக்குப் பின்னர் இன்று வரையிலுமான காலமென்றும் கணிப்பிடலாம்.

இக்காலக் கணிப்பில் நான்காவது பரம்பரைக்குள் முகிழ்த்தவர் சிவனு மனோஹரன் ஆவார். தொழில் வழியில் ஆசிரியர், கல்வியியலாளர் என்றும் அறியப்பட்டிருப்பவர்.

இவருக்கு முன்னையப் படைப்பாளர்கள் சிறுகதை, கவிதை, கட்டுரைகள் எழுதி வந்தபோது, அவை அனைத்தும் சமூக எழுச்சிக்கான எழுத்துக்கள்.. சாடல் எழுத்துக்கள்.. ஆவேச எழுத்துக்கள்.. அரசியல் விவகாரங்கள்.. இனவாத எதிர்ப்புக்கள்.. எமது சமூகத்தின் மேல் ஏவி விடப்பட்ட சட்டங்களுக்கெதிரான எழுத்துக்கள்.. சொந்த சமூகத்து தொழிற்சங்க, அரசியல் ஈடுபாட்டாளர்களுக்கெதிரான எழுத்துக்கள்.. என பொரி பறந்து கிளம்பும் மன ஆக்ரோசங்கள் வெளிப்படும் எழுத்துக்களாகவிருந்தன. இன்று வரையிலும் அவ்வாறான எழுத்துக்கள் படைக்கப்பட்டு வந்த போதிலும், சிவனு மனோஹரன்

தனது முதல் தொகுப்பிலும், இரண்டாவது தொகுப்பிலும் அவர் ஏற்றுக் கொண்ட நிலைப்பாட்டினை அவதானிக்கின்ற போது, அவர் அனைத்து அம்சங்களிலும், அவர் தனித்துவமாக அடையாளம் காணப்பட்டு வருகின்றார்.

மலையகத் தமிழ் இலக்கியம், பாட்டாளி வர்க்கச் சிந்தனை மிகுந்த இலக்கியமாகும். அந்தச் சிந்தனையில் அனைவருமே நிலைப்பாடு கொண்டிருந்த போது, சிவனு மனோஹரன் சற்று விலகி, அனைவருமே எழுத மறந்த' எழுதுவதற்கு அக்கறைப் படாத' சமூக விழுமியங்களைப் பற்றி எழுத முன் வந்தவராகின்றார். அம் மக்களின் வாழ்வியலில் பின்னியிருக்கும் கலாச்சாரங்கள், சடங்கு, சம்பிரதாயங்கள், வழமை, மரபுகள் பற்றிய அனைத்து பாரம்பரியங்களையும் தொட்டு எழுதுவதற்கு முன்வந்தவர் ஆகின்றார்.

அவரது முதல் சிறுகதைத் தொகுதியான "ஒரு மணல் வீடும் சில எருமை மாடுகளும்" பல மட்டங்களிலும் பிரலாபித்துப் பேசப்பட்டது. மலையகத் தமிழர்கள், தென்னாட்டுத் தமிழர்களாவர். அவர்களது மரபு ரீதியான வாழ்வியக்கங்களை முதற் தொகுப்பிலும், இரண்டாவது தொகுப்பிலும் வலியுறுத்தி காட்டியுள்ளதை நாம் அறிவோம்.

இவரது இந்த மூன்றாவது படைப்பு, சற்று விலகி, தொழிலாளரின் உள்ளக வாழ்க்கை, தனி மனித பலவீனங்கள், கலாச்சார சீரழிவுகள் எனும் வாழ்வியக்கக் கூறுகளை மிகப் பொறுப்புடன் எடுத்துக்காட்டுவதாகவிருக்கின்றன. பெருந் தோட்டத் தொழிலாளப் பெண்கள் தொழில் வழியிலும், குடும்பத்துக்குள்ளும் முகம் கொடுத்து, போராடி மாயும் துயரங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. பாமர மனிதர்களுக்குள்ளிருக்கும் ஆணாதிக்கத் திமிர்த்தனங்களினால் ஏற்படும் விபரீதமான குடும்ப

நிகழ்வுகளை இருத்தி, 'அமராவதியின் ஆறாவது பிரசவம்' 'மாயா' போன்ற படைப்புக்கள்.. குடிகாரக் கணவன்மார்கள்' அவர்களின் குடும்ப பயங்கரவாதங்கள்' எந்தளவு தூரம் அப்பாவி மனைவிமார்களை அனுதினமும் சாகடித்துச் கொண்டிருக்கின்றன, என்பதை மானுட வலியுடன் காட்டி நிற்கின்றன.

பெருந் தோட்டங்களில் அதிகமாகவே பல எழுத்தாளர்களால் பேசப்பட்ட வாழ்விடச் சூழல் சம்பந்தப்பட்ட, கலாச்சார சீரழிவுகள் பற்றி தொகுப்பின் மகுடப் பெயராகவிருக்கும். "மீன்களைத் தின்ற ஆறு" கதை சமூக விழிப்புக்கான உணர்வுகளைத் தட்டி எழுப்புகின்றன. இங்கு கதைகளை விவரிப்பது அவசியமாகாதென எண்ணுகின்றேன். பாமரத்தனமான இரு குழந்தைகளின் அறியாத, புரியாத, தெரியாத விளையாட்டுக்கள், எமது குடும்பச் சூழல் அமைப்பின் நெருக்கடிகளை காட்டி நிற்கின்றன

சர்வதேசத் தொழிலாளர் சட்டங்கள், மனித உரிமைச் சட்டங்களாகி வேலைத்தளங்களில் பெண் தொழிலாளர்கள் பாலியல் இம்சைகளுக்குட்படும் செயல்களுக்கு எதிரான சட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதை நாம் அறிகின்றோம். பெருந்தோட்டத் தொழிலில் மட்டுமல்லாது, ஏனையத் தொழில் துறையிலும், குறிப்பாக சுதந்திர வர்த்தக வலய ஆடைத் தொழிலாளப் பெண்கள் முகம் கொடுக்கும் பாலியல் இம்சைகளுக்கும் இச்சட்டங்கள் எதிராக முன் நிற்கின்றன. *(Legal measures against sex violence in work place)*

இங்கு எழுத்தாளர் சிவனு மனோஹரன் ஒரு பாலியல் வன் புணர்ச்சிக்கெதிராகப் போராடி வென்ற ஒரு பெண் தொழிலாளியின் தீரச்செயலை "மட்டக்குச்சி" புஸ்பம் மூலமாகக் காட்டுகின்றார். இப்படி ஆயிரம் புஸ்பங்கள் மலரக்கூடாதா? என வாசகர் மனதை

இக்கதை உலுக்குகின்றது சில நாடுகளில் பெண்களுக்கு தற்பாதுகாப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுவருவதையும் நினைவு கொள்ளச் செய்கிறார்.

கதாசிரியர், பாடசாலை ஆசிரியர்களையும், அவரது தினசரி வாழ்க்கையில் அனுபவிக்கும் மாணவ, ஆசிரியர் உளவியல் முரண்பாடுகள் பற்றியும் ஆசிரியனாகவே இருந்துக் கொண்டு, விரல் நீட்டி குற்றம் கடியும் 'தாராவின் சப்பாத்து' 'வகுப்பறைக் காவியங்கள்' ஆகிய இரண்டு படைப்புக்களும் பேசப்பட வேண்டியவைகளாகும். நாடு, அரசு, கல்வி அமைச்சு ஆகிய மும்முனை சக்திகளும் கலந்து அவதானிக்க வேண்டிய சட்ட ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்பார்க்கும் படைப்புக்களாகும். இக் கதைகளை முன்னிறுத்தும் ஆசிரியரின் வாதம் புரிகிறது. பாடசாலை' வளரும் குழந்தைகளுக்கான ஒரு மனித பட்டறை.. அங்கு மனிதாபிமானம் இருக்க வேண்டுமென துணிச்சலுடன் தனது கண்டனக் குரலை எழுப்பும் சிவனு மனோஹரன், இக்கதையின் மூலம் தனது படைப்புக்களில் பெரு வெற்றி பெறுகின்றார்.

மனித இனக் காதல்கள் சாதியத்தால் அழிக்கப்படும் சம்பவங்களை, சமீப காலமாக தமிழ் நாட்டு கொலைகள் மூலம் அறிந்து வரும் நாம், காமன் பொட்டலில் வரும் மயிலு தலைவர் விதி விலக்கல்ல' என வாளாவிருந்து விட்டுப் போகலாமா..? போக முடியவில்லை..

இன்னும் நான்கு கதைகள் தனி மனித காம உணர்ச்சிகள் மதங்கொண்ட வெறிகள் அதன் விபரீதங்கள் பற்றி உரத்துப் பேசுகின்றன. மனித காமம், பாலியல் வன்முறைகள், பாலியல் கொலைகள் யாவும் இன்றைய எரியும் சர்வதேச பிரச்சினைகளாகும்.

உள் நாட்டில் சமீப காலமாக செய்திப் பத்திரிகைகள்,

இலத்திரணியல் ஊடகங்கள் யாவும் பல பல அதிர்ச்சியான தகவல்களை வழங்கிய வண்ணம் இருக்கின்றன.

தகப்பன்மார்கள், பெற்றப் பிள்ளைகளை' மூன்றாம் பேர்வழிகள் சிறுவர், சிறுமிகளை, குழந்தைகளை, மனம் பேதலித்தவர்களை, ஊனமுற்றவர்களை இன்னும் இவைகளைக் கடந்து, மிகக் கொடூரமாக, பெண்ணுடல் என்பதற்காக பிணங்களைக் கூட சம்போகித்து சீரழிக்கும், ஆறறிவு கொண்ட ஆணினங்களின் விபரீத நடவடிக்கைகளுக்கு இன்று வரை உரிய தண்டனை வழங்காதிருப்பதை நாம் அறிந்து வருகின்றோம்.

இவ்வாறாக தனி மனித உளம் சார்ந்து பேசும் தனது படைப்புக்களின் ஊடாக நவீன மனித இனங்களின் மனப் போக்குகளுக்கான காரணிகளை ஆராய வேண்டியது, தண்டனை வழங்குவது அரசின் கடமை என்பதையும் இந்தப் பக்கங்கள் மன வலியுடன் கூறி நிற்கின்றன.

படைப்பாளர் சிவனு மனோஹரன் தனது மூன்றாவது சிறு கதைத் தொகுப்பில்' தனது மனம் விசாலித்தப் பார்வையை பதித்திருப்பது பாராட்டுக்குரிய எழுத்துப் பணியாகும்.

**மு. சிவலிங்கம்,**
56, ரொசிட்டா வீடமைப்புத் திட்டம்,
கொட்டகலை.

# என்னுரை

சமூக அசைவியக்கத்துக்கான என் படைப்பு நிலத்தில் விளைந்த மூன்றாம் அறுவடையே "மீன்களைத் தின்ற ஆறு" எனும் இத்தொகுதியாகும். "ஒரு மணல் வீடும் சில எருமை மாடுகளும்", "கோடாங்கி" ஆகிய தொகுதிகள் திறந்து விட்ட படைப்பு சாளரத்தின் ஊடே விரிந்த என் படைப்பு வெளி ஏனைய இரு தொகுப்புகளில் இருந்து தன் பார்வையை இன்னும் விசாலித்திருப்பதாக நம்புகிறேன்.

ஒரு படைப்பாளன் சமூக அக்கறையும், அவதானமும் கொண்டு இயங்கும் போதுதான் மக்கள் இலக்கியங்களை படைக்க முடியும் என நம்புபவன் நான் ஏனெனில் தன் சமூகத்தை அக்கறையோடு, கூர்மையாக அவதானிக்கும் போதுதான் யதார்த்த பூர்வமான படைப்புகளை வெளிக்கொணர முடிகிறது என்பது உறுதி. இத்தொகுப்பில் வரும் கதை மாந்தர்கள் அதியற்புதங்களை நிகழ்த்தும் சாகசகாரர்களாய் இல்லை சமூக யதார்த்தங்களை மீறிக் கொண்டு, புரட்சி நெருப்பை தன் தலையில் சுமப்பவர்களாகவும் இல்லை மாயக்கண்ணாடியும், அரிதாரமும் பூசிக்கொண்டு சமூகத்தில் உலவித்திரியும் வேடதாரிகளாயும் இல்லை. தன் அரசியல் உரிமைகளை புரிந்துக் கொள்ளும் திராணி யற்றவர்களாயும், வாழ்வாங்கு வாழ்வதற்கான வழிகளை

இதுவரையும் கண்டடையாதவர்களாயும் நெறிபிறழ்வின் காரணமாக தன் வன்மங்களை அத்துமீறி பிறர் மீது திணிப்பவர்களாயும் உள்ளனர். இத்தகைய தனி மனித உள நெருக்கீடுகளையும், அதன் சமூக விளைவுகளையுமே பேசு பொருளாக்கியிருக்கிறது இத்தொகுப்பு.

தனி மனித உளவியலையும், விளிம்பு நிலையில் வாழும் மக்கள் வாழ்வுக்காய் போராடும் நிலையையும், அகிலமயமாக்கல் சூழ்நிலையால் சிதைந்துப் போகும் எம் விழுமியங்களையும் பேச வேண்டிய தேவை என்ன? என்றொரு வினா எழும் போது மலையக தமிழ் இலக்கியம் இத்தனை கால வரலாற்றில் தொழிலாளர்களின் பொதுப் பிரச்சினைகளான அரசியல், வீட்டுரிமை, போராட்ட குணாம்சங்களை பேசியளவிற்கு தனி மனித உளவியலை அவ்வளவாய் பேசவில்லை. அக்குறையை மீன்களைத் தின்ற ஆறு ஓரளவிற்கேனும் நிவர்திக்கும் என்று நினைக்கிறேன்.

"மாணவனுக்கு கற்பிப்பதற்கு முன் மாணவனை கல்" என்பதை என் தொழில் தர்மமாகக் கொள்வதால் மாணவர்களிடம் கேட்டறிந்த விடயங்களையும், சமூக நெறிப்பிறழ்வின் காரணமாக சீரழிந்த சிறுவர்களும், உள நெருக்கீடுகளோடு வகுப்பறைகளில் வந்தமரும் மாணவர்களும், சமூக பொருத்தபாடின்றி பாடசாலைகள் வெளியேற்றும் மாணவர்களும் தான் என் கதைமாந்தர்கள் ஆயினர். தனி மனித வலிகளை ஆற்றும் வடிகாலலென ஒவ்வொரு ஆசிரியரும் மாறும் போது பாலில் கலந்த நீரென ஆகியிருக்கும் சமூக பிறழ்வுகளில் இருந்து புத்தெழுச்சி மிக்க மாணவ சமூகமொன்றை கட்டியெழுப்ப முடியும் என்பதனால் இப்பிரச்சினைகளைத் தாண்டி என்னால் புதிதாய் எதையும் எழுத முடியவில்லை என்பதுதான் உண்மை அதன் விளைவாகவே பெரும்பாலான படைப்புகள் மாணவர்களை மையப்படுத்தியதாக உருவாகின.

"எந்தவொரு மனிதனும் எவ்வளவு ஈடுபாட்டுடன் உண்மையாகவும், அழகாகவும் தன் எண்ணங்களை வெளியிட விரும்பினாலும் அவனால் தன் ஓட்டத்தின் ஒரு சிறு பகுதியை மட்டுமே வெளிபடுத்த முடியும் அதனால் எல்லா படைப்பாளிகளும் மழலை மொழி பேசும் குழந்தைகளே" என்கிறார் மிகெய்ல்நைமி இக்கூற்றுடன் நானும் உடன்படுகிறேன். ஏனெனில் என் மூன்றாவது தொகுப்பின் வருகையும் கூட இன்னும் இன்னும் சிறுகதை இலக்கியத்தில் பயணிக்க வேண்டிய தூரத்தையும் அதன் காத்திரத்திற்காக உழைக்க வேண்டிய நிலையையும் எனக்கு சொல்லிக் கொண்டே இருக்கிறது.

மேலெழுந்த நோக்குகையோடு என் சமூகத்தில் ஆங்காங்கு தலைகாட்டும் வளர்ச்சி நிலைகளையும், இருநூறு வருட வரலாற்று பரிமாணங்களையும் என் படைப்புகளில் பதிவு செய்யவில்லை என்பதை பலர் குற்றச்சாட்டாக முன்வைத்திருக்கின்றனர். உண்மைதான் தோட்டத் தொழிலாளியின் பிள்ளையாகப் பிறந்து ஓர் ஆசிரியராகி என் தனிப்பட்ட வாழ்வை கொண்டு நடாத்துவதற்கு முடியுமாகியிருக்கிறது என்பதை மட்டும் கொண்டு என் சமூகத்தை பூரணத்துவமுடைய சமூகமென மார்தட்டிக் கொள்ள முடியவில்லை. இப்படி பல ஆசிரியர்களையும் விரல் விட்டு எண்ணக்கூடிய வைத்தியர்களையும், பொறியிலாளர்களையும் கண்டு விட்டதால் என் சமூகம் வளர்ந்து விட்டதாய் என்னால் எண்ணிப்பார்க்க முடியவில்லை. படித்து உயர்து விட்டதாய் சொல்லிக் கொள்ளும் ஆசிரியர்களும், புத்தி ஜீவிகளும் தோட்டங்களை விட்டு வெளியேறி நீண்ட நாட்களாகி விட்டதால் வெளியில் இருந்துக் கொண்டு தோட்டங்கள் வளர்ச்சி கண்டு விட்டதாய் சொல்லிக் கொள்வதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

தன் சமூகத்தை நிராகரித்து விட்டு நகரங்களை நோக்கி இடம் பெயர்ந்த புத்தி ஜீவிகள் தோட்டத் திருவிழாவிற்கும் வேண்டும்

பண்டிகைகளுக்கும் மட்டும் பிரசன்னமாவதால் தோட்டங்களின் இயல்பு வாழ்வை அறிய முடியாமல் போய் விடுகிறது. என்னைப் பொறுத்தவரையில் தோட்டங்களில் மலிந்து போயிருக்கும் கைதொலைபேசிகள், நடுவீட்டை நாடக கொட்டகைகள் ஆக்கியிருக்கும் டிஷ் என்டனாக்கள், தலை நகரம் நோக்கிய நகர்வு, அதனால் சீரழிந்து போகும் கலாசாரம், மரண வீட்டையும் மதுக்கடையாய் மாற்றும் நவீனத்துவம் போன்றனவும் மாற வேண்டும் இவை மாறுவதற்கு மக்களின் சிந்தனை மாற வேண்டும. "சிந்தனை மாற்றம் ஏற்படும் போதுதான் பூரணமான சமூக மாற்றம் ஏற்படும்" என்பதுதான் என்னுடைய நிலைப்பாடாகும்.

இத்தொகுப்பில் உள்ள பன்னிரு கதைகளும் சமகாலத்தில் என் அவதானத்தில் விழுந்தவைகள் ஆனால் இவை மட்டும் என் சமூகல்ல என்பதையும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். இக்கதைகளில் வரும் கதை மாந்தர்களை வலையென மூடிக்கிடக்கும் வலிகளில் உழன்று பங்கேற்ற திருப்தி இப்படைப்புகளை வெளிக்கொணர்ந்த போது கிட்டியது. இனி இதை தலை மீது வைத்துக் கொண்டாடுவதற்கும் இல்லை தூவென தூரத்தள்ளி விமர்சிப்பதற்கும் வாசகர்களுக்கு உரிமையுண்டு.

மீன்களைத் தின்ற ஆறு தொகுதியாவதற்கு முன்னுரை வழங்கிய மரியாதைக்குரிய எழுத்தாளர் திரு. தி.ஞானசேகரன் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய திரு மு.சிவலிங்கம் அவர்களுக்கும் நண்பர் சுதர்மமகாராஜனுக்கும் நன்றிகள் மேலும் சரவை நோக்குநர் செல்வி சசிரேகாவிற்கும் நண்பர் சண்முகம் சிவகுமாருக்கும் நன்றி கூற கடமைபட்டிருக்கிறேன். மேலும் நண்பர் அந்தனி ஸ்டீவன், அஜித்சிங் போன்றோருக்கும் என் நன்றிகள் என் படைப்புகளுக்கு முதல் வாசகியாய் நின்று என்னை உற்சாகப்படுத்தும் மனைவி லோசனாவுக்கும், பெருவிரல் கலை இலக்கிய இயக்கத்தின் நண்பர்களுக்கும், தம்பி பிரதீபனுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

**தொழிலாளர் கட்டிய**
**மணல் வீடும்**
**உணர்வு பிரலயமாய்**
**கொட்டிய கோடாங்கியும்**
**மீன்களைத் தின்ற ஆற்றோடு**
**கரையொதுங்காது.**
**அது உழைக்கும் மக்களுக்காய்**
**என்றும் உரத்தொலிக்கும்.**

**சிவனு மனோஹரன்,**
ஸ்ரீ மஹா இல்லம்,
தரவளை மேற்பிரிவு,
டிக்கோயா.
*071 298 5552*
sivanumanoharan@gmail.com

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அமராவதியின் ஆறாம் பிரசவம் | *23* |
| மீன்களைத் தின்ற ஆறு | *35* |
| மட்டக்குச்சி | *43* |
| மண் | *56* |
| அழுக்கு | *64* |
| தாராவின் சப்பாத்து | *72* |
| ஜென்சியும் ஜேசுமணி சித்தப்பாவும் | *78* |
| காமன் பொட்டல் | *88* |
| கோகிலாவும் கோணல் வகிடும் | *97* |
| பொட்டு | *110* |
| கொழும்புத்தம்பி | *120* |
| வகுப்பறைக் காவியங்கள் | *131* |

# அமராவதியின் ஆறாம் பிரசவம்

ஆனத்தோட்டத்தை சுற்றிலும் உயர்ந்து நிற்கும் மலைகளுக்கு இடையில், பள்ளத்தில் விரிந்துக் கிடக்கும் டபள் சைட் லயன்கள் இருளில் உறைந்திருந்தன. தொங்கல் காம்பராவில் மட்டும் மெல்லிய மினுக்கு வெளிச்சம் ஒளியூட்டிக் கொண்டிருந்தது. மெல்லியதாய் எழுந்திருக்கும் அமராவதியின் விம்மலுடன் கலந்து, பன்னீரின் குறட்டையும் கோடியை எட்டியிருந்தது.

அடி வயிற்றில் இருந்து எழுந்திருந்த விம்மல் உதடுகளை நடுக்கி, துடிக்கச் செய்திருந்தது. உள்ளுக்குள்ளேயே மறுவி மறுவி குடைந்துக் கொண்டிருந்த பயம் மெதுமெதுவாய் வெளிவரத் தொடங்கியிருந்தது. அமராவதியினுள் குழப்பம் கும்மியடித்துக் கொண்டிருந்தது.

இது எப்படி? சாத்தியமாகும். பிரமையாய் இருக்குமோ? பிரமையாய் இருந்தால் எப்படி உடல் இப்படியான அறிகுறிகளை காட்டுகின்றன என்றெல்லாம் குழம்பினாலும் பின்னர் ஏதோவொரு நம்பிக்கையில் மனசு சமாதானம் அடைந்தது. ஆனால் அமைதி மட்டும் கிடைக்கவில்லை.

சந்தேகத்துக்கு இடமில்லாமல் உடம்பு காட்டும் அறிகுறிகள் அவளின் பயத்தின் தீவிரத்தை இன்னும் அதிகமாக்கியிருந்தது.

இருளில் கவிழ்ந்திருந்த லயம் முழுமையாய் தூக்கத்தில் தொலைந்திருந்தப்போதும் தொங்கல் காம்பராவில் அமராவதி மட்டும் தூக்கம் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது வானில் மின்னிக் கொண்டிருந்த நட்சத்திரங்கள் மறைந்து வானம் இன்னும் இருண்டுக்கொண்டிருந்தது.

லயம் அமராவதியின் மனசைப் போலவே இருண்டுக் கிடந்தது. சில வருடங்களாகவே தூக்கமின்றி தொலையும் இரவுகள் அவளது காயங்களை இன்னும் இன்னும் கீறி வடுவாக்கியிருந்தது.

பன்னீரும் தன் பங்குக்கு அக்காயங்களை கீறி ஆழமாக்குவது வழமை.

எல்லா நாட்களுமே முழு போதையில் வீட்டுக்கு வருவதால் அவனுடன் மனம் விட்டுப் பேசி பல வருடங்கள் ஆயிற்று. அப்படியே பேச நினைத்தாலும் அதை காது கொடுத்து கேட்பதற்கு அவன் தயாரில்லை. காலையில் இருந்து மாடாய் மலையில் நின்று உழைப்பான். ஆனால் எதையும் மிச்சப்படுத்துவதில்லை. போதை உள்ளுக்குள் ஏறி விட்டால் மனுஷனாய் இருக்க மாட்டான். வார்த்தைகளும் தடம் புரண்டு விடும்.

அமராவதியைக் காயப்படுத்துவதில் பன்னீரின் வார்த்தைகளுக்கு இருக்கும் வீரியம் வேறொன்றுக்கும் கிடையாது.

இப்படித்தான் இன்றும் காலையிலேயே மலைக்கு வந்து வார்த்தைகளால் வதைத்து விட்டான். அது முள்ளாய் கிடந்து உள்ளத்தை தைத்துக் கொண்டிருக்கிறது. அத்தனை பேருக்கு மத்தியில் நாக்கு மேல் பல்லைப் போட்டு கூசாமல் அபாண்டமாய்

பழி சுமத்தி பேசியது உள்ளத்தை கிழித்து காயப்படுத்தியிருந்தது. அதுமட்டுமல்ல குற்றவாளி கணக்காய் நிற்க வைத்து கேள்வி கேட்டதும், ஊரே கூடி நின்று வேடிக்கைப் பார்த்ததும் பெருத்த அவமானமாக இருந்தது.

"எதுனாலும் வீட்டுல போயி பேசிக்கலாம் போங்க ஆளுங்க எல்லாரும் பாக்குறாங்க" என்று கூனி குறுகி நின்றவளை,

"என்னாடி புதுசா ஆளுங்கப் பாக்குறாங்க? ஊரு சிரிச்ச ஓங் கதத்தான் எல்லாருக்கும் தெரியுமே"

"என்ன என்னாப் பொட்டப்பயனு நெனச்சியா?"
"ஊரு ஒலகத்துல ஒன்ன போல பொம்பளய நான் பாத்ததே கெடையாது. ஊரு மேஞ்ச சிறுக்கி"
"இன்னைக்கு ஒன்ன உண்டு இல்லனு பண்ணுறேன் பா்ரு"

"ஒனக்கு நான் ஒருத்தன் பத்தலனுதானே இப்பிடி ஊரு மேயிற?" என்று வாய்க் கூசாமல் வார்த்தைகளை அள்ளி வீசினான் பன்னீர்.

"இங்க பாருயா மருவாதயா பேசு இல்லனா மானங்கெட்டு போயிருவ சொல்லிப்புட்டேன்"

"இப்ப என்னா நடந்துரிச்சுனு இப்பிடி எகிறி குதிக்கிற? ஊரே வேடிக்கை பாக்குதுய்யா பேசாம வீட்டுக்கு போ"

"ஒனக்குத்தான் ஈன மானம் ஒன்னுமில்லயே என்னயும் அப்பிடியே நெனச்சியா?" என்று அமராவதியும் மல்லுக்கு நின்றாள்.

"பாக்கட்டும்டி பாக்கட்டும் நல்லா பாக்கட்டும் அப்பத்தான் ஒன் லெச்சணம் ஊரு ஒலகத்துக்கு தெரியும். பெரிய பத்தினி வேஷம்

போடுவியே இப்ப ஒன்னோட குட்டு எல்லாம் தெரிஞ்சிப் போச்சி பாத்தியா?" என்று குரலை உயர்த்தினான் பன்னீர்.

"ஐயோ கடவுளே மானம் போவுதே நாளைக்கு நான் எப்பிடி இந்த ரோட்டுல நடக்குறது?" என்று தலையில் அடித்துக் கொண்டு அமராவதி அழத் தொடங்கினாள்.

"அட நீ கூட மானத்த பத்தி பேசுவியா இத்தன பொம்பளைக ஒழுங்காத்தானே வேலய பாக்குறாளுக ஒனக்கு மட்டும் என்னாடி தனியா இங்க வேல? கண்டாக்கு கொஞ்சம் செவப்பா இருந்தா நாயி மாதிரி அவென் பின்னுக்கே சுத்துவியா?"

"இப்ப போயி வயித்துல வாங்கிட்ட இல்ல? நீ நாசமாத்தான் போவ எனக்கு துரோகம் பண்ணிட்டு நல்லாவே இருக்க மாட்டடி தோட்டத்துல உள்ள கண்டாக்கு பயலுகளுக்கு எல்லாம் ஓம் மேலத்தானே கண்ணா இருக்கு என்னாத்தான் செய்யிறது சொல்லுப் பாப்பம்? இங்க பாருடி ஒன்னு மட்டும் நல்லா நெனவுல வச்சிக்க நான் நெனச்சா சுண்டி விட்டு ஆயிரம் பொம்பள எடுப்பேன் ஆனா ஒனக்கு இருக்கும் நாயி புத்தி எனக்கில்ல"

"மதம் புடிச்சவ மதம் புடிச்சவ ஒன்ன சொல்லி குத்தமில்லடி ஒங்க ஆயி அப்பனோட வளப்பு அப்பிடி நீயெல்லாம் ஆயிசுக்கும் திருந்த மாட்ட இன்னைக்கு வீட்டுக்கு வா சூடு போடுறேன்"

"தோலு கொஞ்சம் செகப்பா இருந்தாலே பொம்பள புத்தி நாயி புத்தினு சொன்னது நெசமாத்தான் இருக்கும் போல" என்று கூறிக் கொண்டே நெத்திக் காண் வழியே பித்துப் பிடித்தவன் போல இறங்கி ஓடினான் பன்னீர்.

அழுகையும் ஆத்திரமும் பொங்கி எழ இனியும் அங்கிருப்பது

அழகில்லை என்பதால் அழுது புலம்பிக் கொண்டே வீட்டுக்கு ஓடி வந்தவள்தான் இரண்டு நாட்களாய் மலைப் பக்கமே தலை வைத்து படுக்கவில்லை. அழுது அழுது ஓய்ந்தாலும் மீண்டும் மீண்டும் அவ்வார்த்தை அம்புகள் அவளை வதைக்கத்தான் செய்தது.

ஒவ்வொரு இரவும் அமருக்கு ரணமானவை என்றாலும் காலையில் வார்த்தைகளாலும் செயல்களாலும் எவ்வளவு காயப்படுத்த முடியுமோ அவ்வளவு காயப்படுத்தி விட்டு இரவில் மட்டும் குலையும் அவனுடன் சேர்ந்து நான்கு பிள்ளைகளை பெற்றெடுத்திருந்தப் போதும் அவளால் புரிந்துக் கொள்ளமுடியாத ஜீவன் பன்னீர். போதையில் வந்தால் ஒவ்வொரு நாளும் அவனுடன் படுத்தாக வேண்டும் கொஞ்சம் நிதானமிருந்தாலும் எரிந்து விழுவான். போதையோடு சேர்ந்து ஊரவர் ஊற்றி நிரப்பும் அபாண்ட வார்த்தைகளும் அன்றைய நாள் அடிக்கும் உதைக்கும் அத்திவாரமாய் அமைந்துவிடும்.

நாளுக்கு நாள் வாழ்க்கை நரகமாகிக் கொண்டே இருந்தது. வாழ்க்கை பிடிப்பற்று ஒவ்வொரு நாளும் மரண வேதனையைப் தந்துக் கொண்டிருந்தது. இப்போது உளவாளியைப் போல அவளுக்கு பின்னே சென்று வேவு பார்ப்பதே பன்னீருக்கு வேலையாகியிருந்தது. மலைக்குப் போனாலும் மடுவத்துக்கு வந்தாலும் அமராவதிக்கு தெரியாமல் அவளை பின்தொடர்வான்.

அவனின் வார்த்தைகளுக்கு பயந்து தோட்டத்தில் கங்காணியும் கண்டாக்கும் அவளுக்கு வேலை சொல்வதும் இல்லை பழைய மலையிலேயே அவளுக்கு நிரை ஒதுக்குவதால் பன்னீருக்கு இன்னும் சந்தேகம் எழுந்திருந்தது. ஒதுக்கு மலையில் அவள் தனிமைப்படுத்தப்படுவதை அவன் விரும்பவில்லை. அதனால் பன்னீர் ஒழுங்காக வேலைக்கும் செல்வதில்லை. அங்கும் இங்கும் ஒழிந்திருந்து அவளை நோட்டமிடுவதையே வேலையாக செய்துக்

கொண்டிருந்தான்.

அப்படி காணில், தேரியில் ஒழிந்திருந்து நோட்டமிடும் போது தப்பித் தவறி கங்காணியிடமோ ,கண்டாக்கிடமோ கொஞ்சம் சிரித்துக் கதைத்து விட்டால் போதும் இடத்தை பொருட்படுத்தாமல் வார்த்தைகளை வாரி இரைத்து அசிங்கப்படுத்தி விடுவான். இப்படித்தான் நேற்று நாட்டுக்கு சென்று மூக்கு முட்டக் கள்ளைக் குடித்துவிட்டு வந்து சிறிசேன கண்டாக்கையும் அமராவதியையும் சேர்த்து வைத்து அசிங்க அசிங்கமாய் பேசி லயத்தையே சிரிக்கடித்து விட்டான். எத்தனையோ முறை அவள் இப்படியாக அவமானப்பட்டிருக்கிறாள் என்றாலும் பிள்ளைகளுக்காய் எல்லாவற்றையும் சகித்துக் கொள்வாள்.

இப்படித்தான் அமராவதி ஐந்தாவது குழந்தைக்கு தயாராகியிருந்தப்போது

"என்னா அமரு திரும்பவும் ரெடியாயிட்டப் போல வருசம் போயி வருசம் வர தவறுதோ இல்லையோ நீ தவற மாட்டேன்கிற என்னா?"
"ஒனக்கெல்லாம் எவ்வளவு சொன்னாலும் புரியாது இப்பவே நாய் படாத பாடு படுற இதுல இன்னோரு புள்ளய பெத்துக்கிட்டு சீரழியப் போறியா?"

"ஒழுங்கு மருவாதயா இந்த முற சரி ஒப்புரேசன் பண்ணிக்க போன புள்ளைக்கே பண்ணிக்கனு தலபாடா அடிச்சிக்கிட்டேன் கேட்டியா? இப்ப வயித்த தள்ளிக்கிட்டு வந்து நிக்க ஒனக்கு வெக்கமா இல்லயா? பன்னீருப் புத்தி ஒனக்கு நல்லாத் தெரியும் தானே மொரட்டுப்பய, கோவக்காரன்கூட பொறந்த பொறப்பையே சந்தேகப்படுவான். இப்பிடியே அடி ஒதனு எத்தன நாளைக்குதாண்டி மாரடிப்ப? இதுக்கு மேல ஒனக்கு ஒன்னும் சொல்லுறதுக்கு இல்ல யோசிச்சி செஞ்சுக்க" என்று வெல்பெயார்

நோனா சொன்ன வார்த்தைகள் இன்னும் காதுக்குள்ளேயே நிற்கிறது. ஆனால் எத்தனையோ வலிகளுக்கு பின்னரும் கூட நாளுக்கு நாள் வளரும் வயிறு இனம் புரியாத ஒரு சந்தோஷத்தையும் ஆறுதலையும் அவளுக்கு தந்துக் கொண்டிருந்தது.

காலம் வெகுவாய் ஓடியடைந்திருந்தது.

அமராவதி அழகான ஆண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்ததோடு இனியும் பன்னீருக்கு பிள்ளைகளை பெற்று சீரழிக்க கூடாது என்ற வைராக்கியத்தை வைரமாய் வளர்த்திருந்தாள் அப்போது சதா அடியும் உதையும் வாங்கிய உடலும் மனசும் கூட இன்னொரு பிள்ளையைப் பெற முடியாத படிக்கு தளர்ந்துப் போயிருந்தது.

காலம் எவ்வளவோ மாறியிருந்தப் போதும் பன்னீரு மட்டும் மாறவே இல்லை. அன்றும் பழைய மலையில் தான் உண்டு தன் வேலை உண்டு என்று மட்டம் ஒடித்துக் கொண்டிருந்த அமராவதி ரெட்டைப் பாலத்துக்கு கீழே ஒதுக்கிப் போட்டிருந்த துண்டில் கண்டாக்கோடு சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டு பொங்கி விட்டான். மறுகணமே பித்துப் பிடித்தவன் போல நிரையை பிரித்துக் கொண்டு மின்னல் வேகத்தில் வந்தவன் சிறிசேன கண்டாக்கின் சட்டையை பிடித்து உழுக்கி சரமாரியாகத் தாக்கிவிட்டான் ஆத்திரத்தில் கண்டாக்கு மீது கையை வைத்துவிட்டிருந்ததால் சிறிசேன கண்டாக்கின் மண்டை பிளந்து ரத்தம் பீறிட்டு பாய்ந்துக் கொண்டிருந்தது. அப்போது தோட்டமே பன்னீருக்கு எதிராக திரும்பி இருந்தது. அது மட்டுமல்ல கண்டாக்கின் கமே சொந்தங்கள் வேறு கத்தி கம்புகளோடு தோட்டத்தை முற்றுகையிட்டிருந்தனர். இத்தனை குழப்பங்களை ஏற்படுத்தி விட்டு பதினான்கு நாட்களை பொலிஸ்சிலும் கழித்து திரும்பியிருந்தான் பன்னீர். அத்தோடு அமராவதிக்கும் வேலை நிறுத்தப்பட்டிருந்தது.

இத்தனை குழப்பங்களுக்கு மத்தியில் தான் அமருக்கு அடுத்த அடி விழுந்தது.

இரவு வேறு நீண்டு அவளின் பயத்தின் தீவிரத்தை இன்னும் அதிகமாக்கியிருந்தது. இதைப்பற்றி யாரிடம் பேசுவது, எப்படி பேசுவது? சொன்னாலும் அதை எப்படி எடுத்துக் கொள்வார்கள், இதை கேள்விப்பட்டால் பன்னீரு... என்றெல்லாம் மனசு அல்லாடி உடல் வெடவெடத்து வியர்வை அரும்பியிருந்தது.

ஆனால் வயிறு மட்டும் நாளுக்கு நாள் மீண்டும் வளரத் தொடங்கியிருந்தது. இனி பிள்ளையே பெற்றுக் கொள்ளக் கூடாது என்று உள்ளுக்குள் வளர்த்திருந்த வைராக்கியம் உடைந்து தவிடு பொடியாகியிருந்தது. வெறும் வாயையே சுவைத்து மென்றுக் கொண்டிருக்கும் பன்னீருக்கு இந்த விடயம் தெரிந்தால் சொல்லவும் வேண்டுமா? வெறும் வாயில் கொட்டிய அவலாய் மென்றுத் தீர்த்து துப்பி விடுவானே என்று அதிகமாய் பயந்தாள். அப்போதெல்லாம் அப்பாவி கண்டாக்கு சிறிசேனவின் முகம் மனக்கண்ணில் தோன்றித் தோன்றி மறைந்தது.

மனசுக்குள் பலவிதமான போராட்டங்கள் கிடந்து மருண்டன.

அதனால் இதைப்பற்றி யாரிடமும் சொல்லாமல் எல்லாவற்றையும் தனக்குள்ளேயே போட்டு புதைத்துக் கொண்டாள். கர்பத்தை அழிப்பதற்கு அவளுக்கு தெரிந்த கைவைத்தியங்கள் எல்லாவற்றையும் செய்து பார்த்தாள் பலனில்லை. வயிறு மெதுமெதுவாய் வெளிவரத் தொடங்கியிருந்தது. தன்னையும் சிறிசேன கண்டாக்கையும் சேர்த்து வைத்து,பன்னீர் பேசிய வார்த்தைகள் ஈட்டியாய் இதயத்தை கிழிக்கவே பன்னீரை நினைத்து பயந்தாள். தனியனாய் மலைமேடுகளில் சுற்றித்திரியும்

போதெல்லாம் யாருமே தன்னை பின் தொடராத போதும் அடிக்கடி ஒரு பீதியோடு திரும்பி பார்த்து மிரண்டுப் போவாள். அப்போதெல்லாம் பன்னீரின் கோரமுகம் மனக்கண்ணில் அசுரத்தனமாய் கைகொட்டி சிரிப்பது போல ஓர் உணர்வுத் தோன்றும்.

அப்போதைக்கு வயிறை மறைத்துவிட வேண்டும் என்பதை மட்டுமே எண்ணி அல்லாடியதால் வயிறை மறைப்பதற்கு இடுப்புக்கட்டி படங்குதான் துணைபுரிந்தது. இடுப்புகட்டி படங்கைப் போட்டு வயிற்றை நன்றாக சுற்றி இறுக்கமாய் கட்டிக்கொண்டு மலையில் சகஜமாக வந்துலாவத் தொடங்கியிருந்தாள் யாரும் தன்னை பார்த்து சந்தேகப்பட்டுவிடக் கூடாது என்பதில் உறுதியாக நின்றாள்.

எப்போதும் ஆசுவாசமாய் மூச்செடுக்கக் கூட முடியாமல் இறுக்கி கட்டப்பட்டிருந்த வயிறு ஊதி முடியாமல் போகும் போதெல்லாம் இறுக்கி கட்டிய படங்கை தளர்த்தி, விறகு காடுகளில் யாருக்கும் தெரியாமல் ஆசுவாசப்படுவாள். அப்போதெல்லாம் தேம்பித் தேம்பி அழுவாள். தன் இரத்தமும் சதையும் தன்னாலே வதைக்கப்படும் வன்மம் அவள் பிறப்பை அசிங்கப்படுத்தி இருந்ததால் அடிவயிற்றில் இரண்டு கைகளையும் பொருத்தி மானசீகமாய் மன்னிப்பு கேட்டழுவாள். அப்போது உள்ளுக்குள் பிரவாகம் எடுக்கும் ஈரம் பன்னீரை நினைத்த மாத்திரத்தில் வரண்டு காய்ந்துப் போகும்.

அந்திவரை விறகு காடுகளில் சுற்றித் திரிந்து விட்டு இலேசாய் இருள் கவிழும் போதே வீடு வந்து சேர்வதால் அதிகமான குழப்பங்களில் இருந்து தப்பித்திருந்தாள். பொது இடங்களில் இருந்தெல்லாம் விலகி நிற்கும் அமர் கொஞ்ச காலமாக தனக்கென ஒரு புதிய உலகத்தை சிருஸ்டித்திருந்தாள்.

மறுநாள் விடாது கொட்டிக் கொண்டிருந்த தூறல் உடல் அசதிக்கு இன்னும் தெம்பூட்டியப் போதும் மலைக்கு போவதற்கு பரபரப்பாய் தயாராகிக் கொண்டிருந்த அமராவதி தலையை வாரிக் கொண்டே கண்ணாடியில் தன் முகத்தை நிறுத்தியப் போதுதான் உணர்ந்தாள் முகம் பழையப் பொலிவை இழந்து வெளிறியிருந்தது. உடல் அடிக்கடி சோர்ந்துப் போவதோடு, இருந்தாற் போல தலை கிறுகிறுத்து கண்கள் நீலம் பூத்து இருண்டு அவளுக்கான பயத்தை அதிகப்படுத்தியிருந்தது. கடந்த சில நாட்களாய் கை, காலில் உள்ள பச்சை நரம்புகள் நீலம் பூத்து புடைத்து நிற்பது அவளுள் ஆயிரம் கேள்விகளை விட்டுச் சென்றது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக கூடையை மாட்டிக் கொண்டு மழைத்தூறலுக்கிடையில் தேவதையாய் பயணித்திருந்தாள்.

வனத்து துண்டில் பெண்கள் நிரை பிடித்து கொழுந்து எடுக்கத் தொடங்கியிருந்தார்கள். அப்போதுதான் படியேறிய கலைப்போடு தன் நிரைக்குள் நுழைந்தாள். காற்று சீறி சீறி அடித்துக் கொண்டிருந்தது. நாலைந்து தேயிலைகள்தான் கொழுந்தைப் பறித்து கூடையில் போட்டிருப்பாள் குளிரில் கைகள் விறைத்துக் கொண்டன செயலற்று விறைத்துப் போயிருக்கும் கைகளை நீவிக் கொண்டே விம்மிய அமர் அண்ணாந்து வானத்தை வெறித்துப் பார்க்கிறாள் வானம் இன்னும் இருண்டுக் கொண்டிருந்தது. அப்போது உடலுக்குள் பெரிய பிரளயமே ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

கண்கள் இருண்டுக் கொண்டு வரவே தேயிலை வாதைப்பிடித்துக் கொண்டு வயிற்றை பிசைந்துக் வலிக்கு ஒத்தடமிட்டுக் கொண்டிருந்தவளை

"ஏம்புள்ள அமரு இப்பிடி மசமசனு நின்னா ஒங்கப்பனா வந்து பேரு போடுவான்? வேலய பாப்பியா சும்மா இப்பிடி நின்னு உசிர

எடுப்பியா? புள்ளதாச்சி பொம்பளைகளே விறுவிறுனு பிச்சிகிட்டுப் போறாங்க நீ என்னமோ தடவிக்கிட்டு நிக்குற" என்று கங்காணி கர்ஜிக்கவும் கொழுந்தைப் பறித்து கூடையில் போட்டு விட்டு அடுத்த தேயிலைக்கு செல்ல முனைந்தப் போதுதான் கால்கள் எடுத்தடி வைக்க முடியாதபடி மறத்துப் போயிருந்தது புரிந்தது. கால்களை அசைக்கவே முடியவில்லை.இடுப்புக்கு கீழ் முழுமையாய் மறத்துப் போயிருந்தது.

மழை இப்போது சோவெனப் பெய்யத் தொடங்கியிருந்தது.

அப்படியே நிரைக்குள் சப்பளித்து உட்கார்ந்து படங்கை விலக்கியப் போது காலில் அட்டைகள் இரத்தத்தை உறிஞ்சி உப்பியிருந்தன அவற்றை உப்பு பொட்டலத்தை கொண்டு வலித்து தள்ளி விட்டு தூணாய் மறத்திருக்கும் காலை நீவி விடத் தொடங்கினாள். ஆனால் பலனில்லை இடுப்புக்கு கீழே இரத்த ஓட்டம் நின்றுப் போனது போல செயலற்றுப் போகவே எழுந்து நிரைக்கு வெளியில் வருவதற்கு முயன்றாள். அப்போது இறுக்கிப் பிடித்திருந்த தேயிலைவாதுகள் ஒடிந்து சரியவே அப்படியே சரிக்கி கொண்டு வந்து உயர்ந்த வங்கிப்பகுதியில் இருந்து கீழே கருத்த ரோட்டில் விழுந்த வலி, தாளாமல் அமராவதி இட்ட கூச்சல் மலையை ஒரு உழுக்கு உழுக்கி ஸ்தம்பிக்கச் செய்தது.

அப்போது இத்தனை நேரம் சீறி சீறி பெய்துக் கொண்டிருந்த மழை ஓய்ந்து வானம் வெளுத்திருந்தது.

தேயிலை வாதுகள் அமராவதியின் உடலில் ஏற்படுத்தியிருந்த சிறாய்ப்புகளில் இருந்து ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. யாருமே எதிர்பாராத நேரத்தில் அமர் ரத்த வெள்ளத்தில் தேயிலைக்குள் இருந்து வந்து வீழ்ந்த அகோர காட்சி எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருந்தது.

அரைப் பிணமாய் கிடந்த அமராவதியை தோட்டம் ஆஸ்பத்திரிக்கு அள்ளி எடுத்துச் சென்றிருந்தது.

நா கூசாமல் பலதையும் பேசி அடங்கிய தோட்டம் சில மாதங்களுக்கு முன்னமே மரணித்திருந்தவளை அன்றுதான் மரணித்து விட்டதாக தன் அறியாமையால் பேசிக் கொண்டிருந்தது.

****

---

மலைநாட்டு எழுத்தாளர் மன்ற சிறுகதை போட்டியில் முதற்பரிசு பெற்ற கதை (தாய் வீடு)

# மீன்களைத் தின்ற ஆறு

ஆத்துப் பீலிக்கு குளிக்கப் போவதென்றால் உள்ளம் பூத்து விடும் சிங்க மலையடிவாரத்தில் இருந்து கீழிறங்கும் ஆறு, அதன் ஆழம், சலனமின்றிப்பாயும் தனித்துவம் வார்த்தைகளில் அடங்காது. குளிர்ந்துக் கிடக்கும் ஆற்று நீரை அள்ளி முகத்தில் அறைந்தால் போதும் எல்லா அசதியும் இருந்த இடம் தெரியாமல் ஓடி விடும்.

சிறு நதியாய் பாய்ந்து வரும் ஆறு சில இடங்களில் குட்டையாய் தேங்கி நிற்கும். நதியின் பாதையில் குறுக்கிட்டு கிடக்கும் கருங்கற்கள் தெளிந்த ஆற்று நீரில் தன் முகம் காட்டும் போது அதை ரசிப்பதற்கு இரண்டு கண்கள் போதாது. நதியின் இரு மருங்கும் வளர்ந்து நிற்கும் கருபந்தேயிலை மரங்கள் நதிக்கு இன்னும் பலமூட்டின.

சனி ஞாயிற்றுக் கிழமைகளில் என்றால் ஆத்துப் பீலியில் கூட்டத்துக்கு குறைவிருக்காது. கொலனி சனம் கூடி விட்டால் ஆறு

தன் அமைதியை இழந்து விடும். ஆங்காங்கு உள்ள கிடங்குகளில் அவரவர் தம் அழுக்குகளை கரைத்துப் போனாலும் ஒருபோதும் அழுக்காகாத நதி எத்தனை யதார்தப் பாடங்களைச் சொல்லித்தருகிறது என்று நினைக்கும் போதெல்லாம் அதன் மீது மரியாதை கூடும்.

பருவத்தில் பெய்யும் மழை எப்போதாவது பெரு வெள்ளமாய் பெருக்கெடுத்துப் பாயும் நாட்களில் நதி காவிச் செல்லும் அழுக்குகளை கண்டால் நெஞ்சு கணக்கும். எவ்வளவு சுலபமாய் நம் அழுக்குகளை நதியின் தலையில் சுமத்தி விடுகிறோம்.

மழை வெள்ளத்துக்கு மறுநாள் ஆத்துப்பீலிக்கு போகவில்லை என்றால் சிவாவுக்கும் ராசுவுக்கும் தலையே வெடித்து விடும். மறுநாள் ஆறு வெள்ளையடிக்கப்பட்ட வீடு போல அவ்வளவு சுத்தமாக இருக்கும் அன்று வழமைக்கு மாறாக அதிகமான நேரத்தை ஆற்றில் கழிப்பது இருவருக்கும் புதிதல்ல பால்யத்தில் இருந்து வளர்ந்த நெருக்கம் இருவரையும் இணைபிரியாமல் இணைத்திருந்தது. பேசிக்கடந்த தூரத்தை விடவும் பேசாமல் கிடக்கும் பாலியல் ரகசியங்களை எல்லாம் ஆத்துப்பீலியில் ஆதங்கமாய் கொட்டித் தீர்த்துக் கொள்வர்.

ஆண் பெண் உறவுப் பற்றி பேசுவதற்கும் கதைப்பதற்கும் ராசு பேரார்வமாய் இருப்பான் நாளுக்கு நாள் பூக்கும் சந்தேகங்களை கேட்டுத்துறுவி எடுத்துவிடுவான். சிவாவும் மாத்ரபூதம் டொக்டர் கணக்காய் அவன் சந்தேகங்களை அவப்போது தீர்த்து வைப்பான். சில நேரங்களில் பேசுவதற்கும் கேட்பதற்கும் கூச்சப்படுகின்ற விடயங்களைக் கூட நாகூசாமல் கேட்டுவிட்டு அசடு வழிய நிற்பான் ராசு. அப்போதெல்லாம் சிவாவுக்கு தெரியாது ராசு கௌரியோடு காதலில் ஆழ்ந்திருப்பது.

பெண்ணுடல் பற்றிய ரகசியங்களை எல்லாம் கேட்டறிவதிலும் தேடி வாசிப்பதிலும் ராசு மும்முரமாய் இருப்பான். அது பற்றி என்னக் கேட்டாலும் லெக்ஷர் பண்ண சிவா ரெடியாக இருப்பான்.

பாடப்புத்தகங்களை வாசிக்கிறார்களோ இல்லையோ பலான விடயங்களை வாசிப்பதில் குறை வைக்க மாட்டார்கள் எல்லோரும் ஓ.எல். பாஸ் பண்ணி ஏ.எல் போக தயாராகிக் கொண்டிருந்தப் போதுதான் ராசு கௌரியை இழுத்துக் கொண்டு ஓடியது தோட்டத்தில் எல்லோருக்கும் பெருமதிர்ச்சியை தந்தது.
அதன் பின்பு காலம் தன் இயல்பில் ஓடிக் பத்து வருடங்களை கடந்திருந்தது.

ஆத்துப்பீலிக்கு போகும் வழியில் உள்ள புல்லுக்காணில்தான் வரிச்சிசுவரால் ஏறிநிற்கும் ஒற்றை அறையொன்றை அமைத்திருந்தான் ராசு. அருகில் சலசலத்துப்பாயும் ஆறும் ஒற்றையறை மண் குடிசையும் அதைச் சுற்றி வளர்ந்துக்கிடக்கும் கோரைப்புற்களும் உள்ளத்தில் படிந்த ஒப்பற்ற ஓவியமாய் மனசை நிறைக்கும்.

ஒவ்வொரு முறையும் ராசு வீட்டைத்தாண்டி ஆத்துப்பீலிக்கு போகும் போதெல்லாம் சிவாவின் தலையைக் கண்டால் போதும் அம்மாளும் அப்புக்குட்டியும் பழைய பெயிண்ட் வாளிகளோடு ஆத்துக்குகிளம்பி விடுவார்கள். அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை பாறை இடுக்குகளில் ஒழிந்து வாழும் மீன்களை பிடித்து விளையாடுவதில் அவர்களுக்கு அப்படியொரு மகிழ்ச்சி மீன் கிடைக்காதப் போது கோலாட்டம் பிடிப்பதும் இல்லையென்றால் சேற்றுப்பகுதியில் கிடக்கும் கொரத்தை மீன்களைப்பிடித்து மகிழ்வதும் வழமையாகி இருந்தது.

ராசுவுக்கு பின் அவர்கள்தான் பழைய உறவை மீண்டும் புதுப்பித்து

தந்தார்கள். அப்புக்குட்டி அசப்பில் அப்படியே ராசுவை உரித்து வைத்துக் கொண்டு வந்திருந்தான். தோற்றத்தில் மட்டுமல்ல பேச்சிலும் கூட நறுக்கு தெரித்தாற்போல வெட்டு ஒன்று துண்டு இரண்டெனப் பேசிவிடுவான்.

ஆத்துப்பீலிக்கு வந்து விட்டால் மீன்பிடிக்கும் ஆர்வம் சிவாவையும் தொற்றிக் கொள்ளும். அப்போதெல்லாம் அப்புக்குட்டியும் அம்மாளும் அவனின் சகநண்பர்களாகி விடுவார்கள். சாரத்தை விரித்து பிடித்து ஒரு பக்கத்தை நீரினுள் அமிழ்த்தி மறுபக்கத்தை உயர்த்திப் பிடித்துக் கொள்ள வேண்டும் அப்புக்குட்டிதான் மேலிருந்து மீன்களை விரட்டி வருவான்.

மீன்கள் சரியாக சாரத்துக்குள் வந்து விழுந்ததும் சாரத்தை சுருட்டி தூக்கி எடுத்து விட வேண்டும் கண்ணில் எண்ணையை ஊற்றிக்கொண்டு மீன்களை விரட்டிவரும் அப்புக்குட்டி சாரத்தை விரித்துப் பார்க்காமலே அதற்குள் எத்தனை மீன்கள் இருக்கின்றன என்று சொல்லி விடுவது சிவாவுக்கு வியப்பாக இருக்கும்.

தோட்டத்தில் இருந்து விலகிக் கிடக்கும் ராசு வீட்டை அம்மாளு, அப்புக்குட்டியின் சத்தங்கள் மட்டுமே நிறைக்கும். ராசு பொழப்புத் தேடி கொழும்பில் கிடந்தான். மாதமொருமுறை வந்துப் போகும் போதெல்லாம் அம்மாளு அப்பாவின் பிரிவுக்காய் அதிகம் அழுவாள். அப்போதெல்லாம் அதிகமான நாட்கள் அவள் தன் துக்கத்தை மீன் பிடித்துத்தான் தீர்த்துக் கொள்வாள்.

அங்கு பிடிக்கப்படும் மீன்களை அப்புக்குட்டி தன் வீட்டு கிணற்றில் கொண்டு வந்து விட்டு விடுவதால் இப்போது அவன் வீட்டு கிணற்றில் அதிகமான மீன்கள் பரவியிருந்தன.

கொழும்பில் சில்லறைக் கடையொன்றில் வேலை பார்க்கும்

ராசுவுக்கு மாதமொரு முறை வீட்டுக்கு வராவிட்டால் தலை வெடித்து விடுமாற் போலிருக்கும். ஒரு மாதமாய் சிறுகச் சிறுக சேமிக்கும் கனவுகளோடுதான் கொழும்பில் இருந்து பஸ் ஏறுவான். கொழும்பில் பஸ் ஏறி விட்டான் என்றால் அவனுள் கிளர்ந்தெழும் பட்டாம் பூச்சிகளை அவனால் கணக்கிட்டுக் கொள்ள முடியாது. இளமை பொலிவோடு இருக்கும் கௌரியை நினைத்து விட்டாலே மனசு நெகிழ்ந்து விடும். பிரிவு தரும் துயரம் வளர்க்கும் தீக்கு கௌரி வார்க்கும் நீர் பாலைவன கானலென அமைந்து விடுவதால் ராசு உள்ளுக்குள் புழுங்குவான். ஒவ்வொரு முறையும் நடுச்சாமத்தில் வீட்டுக்கு வருவதும் மறுநாள் நடுச்சாமத்தில் கொழும்புக்கு ஓடுவதும் அவனுள் விரக்தியை விதைத்திருந்தது.

கொழும்பில் இருந்து வீட்டுக்கு வந்தால் ஒற்றையறையில் எல்லோரும் ஒன்னுமன்னாய் இருப்பதை பெரும் அசௌகரியமாய் உணர்வான். கழுத்தை இறுகக் கட்டிகொண்டு பல்லி போல் அவன் மார்போடு துாங்கிக் கிடக்கும் அப்புக்குட்டியும் அப்பாவோடு யார் தூங்குவது என்று போராடி களைத்து ஒருபுறம் தூங்கிக் கிடக்கும் அம்மாளுவையும் சமாளிப்பதற்கே அரையிரவை செலவழிக்க வேண்டிவரும் அப்போதெல்லாம் சிறுகச் சிறுக சேமித்து வருவதைக் கொண்டு வீட்டைக் கொஞ்சம் இழுத்துக் கட்டிவிட்டால் அம்மாளுக்கு தனியறை கொடுக்க வேண்டும் என்பது அவனது நீண்ட நாள் கனவாக வளர்ந்திருந்தது.

ராசு குடும்பம் தோட்டத்தில் பேர் போன குடும்பம் சீனி கங்காணி குடும்பம் என்றால் தோட்டத்தில் தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். சீனி கங்காணியின் வாரிசுகள் ஒவ்வொருவராய் குடும்பமாகி வம்சம் தழைத்தளவுக்கு வீடு தழைக்க வில்லை கடைக்குட்டிதான் ராசு. இது இப்படி இருக்கும் போதுதான் கௌரியோடு காதலில் கிடந்து அவளை கைப்பிடித்தான்.லயத்தின் சரி நடுமத்தியில் அமைந்து விட்ட வீட்டை விசாலப்படுத்த முடியாத

வலியை சீனி கங்காணி தோட்ட நிர்வாகத்தை வசவுகளால் தாக்கி சமாதானமடைந்ததோடு தன் காலத்தை கழித்திருந்தார்.

ராசுவின் வேகம் பற்றி சொல்லவும் வேண்டுமா? குடும்பமான நாளில் இருந்து ஆங்காங்கு தலைகாட்டிய முரண்பாடுகள், உள்ளுக்குள் வைரமாய் விழுந்த ஆக்ரோசம் ஒரு நாள் தீர்க்க முடியாத முரண்பாடாய் குடும்பத்தின் பிணைப்பை சிதைத்தெறிந்தது. அது உள்ளுக்குள் வளர்த்த வைராக்கியம் ஒரு இரவில் வரிச்சி சுவராய் ஏறி ஒற்றை அறையுடன் உரு கொண்டெழுந்தது.அன்று முதல் அவ் ஒற்றையறையே அவர்களின் தாம்பத்தியத்திற்கு நிழல் இரைக்கத் தொடங்கியது.

ஒற்றை அறையின் அறுவடையே அம்மாளும் அப்புக்குட்டியும்.

கண்ணில் காணும் தின்பண்டங்களை எல்லாம் வாங்கிக் கட்டிக் கொண்டு தோள் கணக்க ஹட்டனில் வந்து இறங்கினாலும் உள்ளத்தில் பூத்துக் கிடக்கும் சந்தோசங்களால் எல்லாவற்றையும் மறந்து அவன் கால்கள் வீட்டை நோக்கி நகரும். அப்போதெல்லாம் விறுவிறுவென வளர்ந்து நிற்கும் அம்மாள் பற்றி நினைத்தால் உள்ளுக்குள் பயம் சூழும்.

கொழும்பில் இருந்து வீட்டுக்கு வரும் போதெல்லாம் வீட்டு வளவுகளில் மண்டிக்கிடக்கும் புல் பூண்டுகளை அழித்து சுத்தப்படுத்துவதும் அந்தி சாயும் நேரத்தில் ஆத்துப் பீலிக்கு குளிக்கப் போவதும் வழமையாகி இருந்தது. ராசுவும் கௌரியும் பேசிப் பேசிப் தீராத எல்லா கதைகளையும் ஆத்துப்பீலி அறிந்திருந்தது.

ஆத்துப்பீலிக்கு போகும் வழியில் உதிர்ந்துக் கிடக்கும் ஒடி விறகுகளை பொறுக்கிக் கொண்டே வந்து எல்லாவற்றையும் ஒரு

இடத்தில் நிறைத்து விட்டுத்தான் உடுப்புகளை கழுவத் தொடங்குவார்கள். அப்போது அம்மாளும் அப்புக்குட்டியும் வேறொரு உலகில் சஞ்சரித்திருப்பர். அது வண்ண மீன்களால் வடிவமைக்கப்பட்ட உலகம்.

ஆனப் பாறையைச் சுற்றி கீழிறங்கும் நதி சற்று உயரத்தில் இருந்து இறங்கிப் பாய்வதால் பாறை இடுக்கில் செருகப்பட்டிருக்கும் வாழை மட்டையின் வழி இறங்கும் நீர் சோவென இரையும். ஆத்துப் பீலிக்கு அந்தப் பக்கம் மீன் பிடித்து திரியும் அம்மாளும் அப்புக்குட்டியும் கூப்பிடும் வரை இந்தப் பக்கம் வரார் என்பது அவர்களின் நம்பிக்கையாய் இருந்தது.

மீன்களின் உலகம் அம்மாளு அப்புக்குட்டியினுள் மிக விசாலமாகப் பரவியிருந்தது. அன்றும் மற்றொரு மழைநாளுக்கு மறுநாள் வழமை போலவே சிவாவும் குளிக்க கிளம்பி இருந்தான். அம்மாளும் அப்புக்குட்டியும் அவனுக்கு முன்னால் ஆற்றை நோக்கி ஓடிக் கொண்டிருந்தனர். ஆனால் வழமைக்கு மாறாக அவர்களின் கைகளில் மீன்களைத் தாங்கும் வாளிகளை காணவில்லை.

நேற்று பெய்த மழை ஆத்துப்பீலியின் அழுக்குகளை அழகாய் கழுவியிருந்தது. தெளிந்தோடும் நீரில் நீந்தித் திரியும் மீன்கள் சிவாவின் ஆர்வத்தை தூண்டி விட்டுக் கொண்டிருந்தன. அம்மாளுவையும் அப்புக்குட்டியையும் அப்போது அங்கு காணவில்லை.

ஆத்துப்பீலி கிடங்கை விட்டால் அதிக மீன்கள் கிடைக்கும் கிடங்கு ஆனப்பாறை கிடங்குதான். என்பது எல்லோருக்கும் தெரியும். பாறையின் ஒரு அந்தத்தில் இருந்து மறு அந்தத்தை அடைந்து ஆனப்பாறை பள்ளத்துக்கு தாவிக் குதித்தப் போது சிவா அதிர்ச்சியில் உறைந்துப் போனான்.

அப்புக்குட்டியை கீழே போட்டு அவன் மீதேறி படுத்துக் கொண்டு தன் பிட்டத்தை தீவிரமாய் இயக்கிக் கொண்டிருந்தாள் அம்மாள் உடல் நடுங்கி வெலவெலத்துப் போக குப்பென வியர்த்துக் கொட்டியது அவனுக்கு அவனை சற்றும் எதிர்பார்த்திராத அம்மாளின் கண்ணில் பயம் வழிந்துக் கொண்டிருந்தது. அப்புக்குட்டி அவள் பாவாடைக்கு பின்னால் ஒழிந்து நின்றான்.

அதிர்ச்சியில் தொண்டை விக்கித்துப் போய் நின்ற அம்மாளுவின் காது சிவாவின் விரல்களில் சிக்கி நசுங்கிக் கொண்டிருந்தது. வலி தாளா அவள் கண்களில் நீர் கசிந்திருந்தது. ஆவேசமாய் அவன் கையை விலத்தி "எங்கப்பா இப்பிடித்தான் அம்மாவுக்கு செய்வாரு நீங்க பாக்கல" என்று கோபமாய் கூறி விட்டு அப்புக்குட்டியை கூட்டிக் கொண்டு ஆத்துப்பீலியை கடந்து ஓடிக் கொண்டிருந்தாள். ஆனப்பாறை கிடங்கில் உடலை லேசாக்கி கைகளை அகல விரித்து மிதந்துக்கிடந்தான் சிவா. சில்லென கிடக்கும் ஆற்று நீர் வழமைக்கு மாறாக சுட்டது.

சலசலத்துப்பாயும் ஆறும் ஒற்றையறை மண் குடிசையும் அதைச் சுற்றி வளர்ந்துக் கிடக்கும் கோரைப்புற்களும் நிறம் மங்கிய ஓவியமென அவன் உள்ளத்தை அரித்தது.

இத்தனைக்காலம் ஆறு வளர்த்து வந்த மீன்களை தின்று விட்டதாய் மனசு கனத்தது.

****

# மட்டக்குச்சி

கிவாலமலை அதிர்ச்சியில் உறைந்துக் கிடந்தது.

இதுவரை காலம் தோட்டம் சந்தித்திராத பெருமதிர்ச்சி என்பதனால் இதனை சாதாரணமாய் எடுத்துக்கொள்ள முடியவில்லை.

இடிவிழுந்தான் பள்ளத்தில் தோட்ட மக்கள் அனைவரும் திரண்டிருந்தனர்.

தோட்டத்து பெண்கள் தங்கள் கொங்காணிகளை இழுத்து வாயை மூடிக்கொண்டு விக்கித்து நின்றிருந்தனர்.

எல்லோரிடமும் அதிர்ச்சி உறைந்திருந்தது.

நெத்திக்காணில் வெள்ளக்கண்டாக்கு உப்பி ஊறி பிணமாய்க் கிடந்தான்.

அட்டைகள் அவனது உடல் ரத்தத்தை உறிஞ்சி உப்பியிருந்தன. கண்டாக்கின் உடல் முழுவதும் சிறு சிறு ரத்த காயங்களும் சிறாய்ப்புகளும் பதிந்திருந்தன. தொடைகளில் ரத்தம் வடிந்து காய்ந்திருந்தது. உதடு ஒரு பக்கமாய் வீங்கி கிழிந்திருந்தது. இரவு முழுவதும் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்துவரப்பட்ட குப்பைகளோடு குப்பையாய் கிடந்தான். யூகத்தின்படி அவன் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறான் என்பதைத் ததான் எல்லோரும் பேசிக்கொண்டிருந்தனர்.

கைதூத்தலாய் பெய்யும் மழை நய்நய்யென பெய்துக் கொண்டிருந்தது. பள்ளத்தில் திரண்டிருந்த மக்களில் அநேகர் தம் உடல்களில் ஒட்டிக்கிடந்த அட்டைகளை மழித்து தள்ளிக் கொண்டிருந்தனர். யாருமே எதிர்பாராத நேரத்தில் விழுந்திருந்த பேரிடி எல்லோரையும் குழப்பத்தில் ஆழ்த்தியிருந்தது. கண்டாக்கை கண்டாலே காததூரம் ஓடிவிடும் தோட்டத்து சனங்களில் யாருக்கு இத்துணிச்சல் ஏற்பட்டது என்பதுதான் மர்மமாகவே இருந்தது.

வெள்ளைக் காற்சட்டையும் கட்டக்கம்பும் கண்டாக்கின் அடையாளங்கள். மிடுக்கு நடைநடந்து வந்தானென்றால் பார்த்து ரசிக்காதவர்களே இல்லையென்று சொல்லுமளவுக்கு அவனின் கம்பீரம் இருக்கும். சிவந்து பருத்த தன் தொடைகளை காட்டுவதிலும் அதனை எல்லோரும் பார்த்து ரசிக்கிறார்கள் என்பதிலும் அவனுக்குள் ஒரு பெருமையிருக்கும். உரோமங்கள் வளர்ந்து சாய்ந்திருக்கும் தொடையை தட்டித் தட்டி அவன் காட்டும் சண்டித்தனங்களுக்கு தோட்டத்து பெண்கள் அதிகமாய் பயந்துப் போவர். வார்த்தைகளால் தோட்டத்து பெண்களை இம்சிப்பதில் மகா புத்திசாலி மைனர் கணக்காய் தோட்டத்தில் சுற்றித்திரிந்த கண்டாக்குக்கு தோட்ட நிர்வாகமும் அடிபணியும் சின்னச் சின்ன தகறாறுகளுக்கு கூட கொலனி மக்களை ஒன்று திரட்டி கலவரமாக்கி

விடுவதால் அவனுக்கு அனைவரும் அடங்கிப் போவர். ஒட்டு மொத்தத்தில் தோட்ட துரை மாதிரி தோட்டத்தை ஆட்டிப் படைப்பான். அதனால் நிகழ்ந்திருக்கும் கொடூரமான மரணத்துக்காக தோட்டம் கலங்கவில்லை. இவ்வளவு தைரியமாய் காதும் காதும் வைத்தாற் போல் காய் நகர்த்தியிருக்கும் அந்த தைரியசாலி யாரென்று அறிவதில்தான் பலரும் ஆர்வமாயிருந்தனர்.

"குருவிக்கூட்டுக்குள்ள குண்டு வைக்கிறாப்புல குடும்பத்த கெடுத்த பயசிறுக்கிக்கெல்லாம் இதுதான் கெதி"

"ஐயோனு அள்ளி வெச்ச மண்ணெல்லாம் சும்மா உடுமா? அடுத்தவங்க வாயில போட்ட மண்ணு இன்னைக்கு தான் வாயிலயே விழுந்திருச்சி பாத்தியா?" என்றொரு குரல் கூட்டத்தில் இருந்து எழுந்ததும்

"வல்லவனுக்கு வல்லவென் பொறக்காமலா இருப்பான்"

"மத்தவங்க வயித்தெரிச்சல்ல எத்தன நாளைக்குத்தான் ஆடுறது சொல்லுப் பாப்பம்" என்று இன்னொரு குரல் துணை சேர்ந்தது.
"தோட்டத்துக்கு வந்த நாள்ல இருந்து கொஞ்ச அட்டகாசமா? கொறஞ்ச அட்டகாசமா பண்ணுனான் அது தான் கடவுளா பாத்து இப்பிடி செஞ்சிட்டான்." என்று தோட்டம் வாயில் வந்தவற்றையெல்லாம் பேசி கொண்டிருந்தது.

தோட்டத்துக்கு பொலிஸ் வருவதும் போவதுமாய் இருந்தது. மர்மமாய் பலரும் பலவிதமாய் கிடந்து மறுவினர். இரவு ஏழு மணியானால் போதும் எல்லா வீடுகளிலும் விளக்குகள் துண்டிக்கப்பட்டு விடும். யாரும் சத்தமாய் கூட பேசுவது இல்லை அந்தளவுக்கு மக்களிடையே பீதி பரவியிருந்தது. தோட்டம் தந்த தகவலின் படி ஒட்டுலயத்து லெட்சிமி வீட்டை நோட்டமிடுவதில்

பொலிசார் தீவிரம் காட்டியிருந்தனர்.

மலைமேடுகளில் கண்டாக்கோடு சல்லாபித்து திரிந்தவளுக்கு உறவென்று சொல்வதற்கு யாருமில்லை. வாழ்நாட்களில் பாதி நாட்களை போதையோடு கழித்திருந்த முனுசாமியும் அற்ப ஆயுளோடு சென்று சேர்ந்து விட்டான். அதன் பின்னர் ஒத்த மரமாய் நின்ற லெச்சுமிக்கு வெள்ளக்கண்டாக்கு துணையானான். மாதத்தில் பத்து நாள் பேர் போட்டால் போதும் முழு சம்பளம் வாங்கிவிடுவாள். மலை இடுக்குகளில் அவனோடு இணங்கிப் போவதோடு நின்று விடாமல் கொஞ்ச நாட்களாய் இரவில் வீடு வரை கண்டாக்கு வந்துப் போவது பற்றியும் தோட்டத்தில் பேசிக்கொண்டனர். ஆனால் கடந்த ஒரு மாத காலமாய் தோட்டத்து பதிவுக்காக இரண்டு அல்லது மூன்று நாள் பேர் போட்டுவிட்டு டவுனை ரோந்தடிப்பதற்கு பழகியிருந்தாள் லெச்சுமி.

எது எப்படி என்றாலும் அந்தி சாயும் நேரத்தில் தோட்டத்துக்கு வந்துவிடும் அவளை கடந்த சில நாட்களாய் தோட்டத்தில் காணாதது இன்னும் குழப்பமாகியிருந்தது.

இடி விழுந்தான் பள்ளத்தை பொலிஸார் அலசி ஆராய்ந்து துப்பு துலக்கிக் கொண்டிருந்தனர். ஏதாவது தடயங்கள் அங்கு கிடைக்குமா? என்பது அவர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு அங்கு தீனி கிடைக்கவில்லை. வெள்ளக்கண்டாக்கு ரத்தவெள்ளத்தில் கிடந்த நிரையில் இருந்து ஐந்து ஆறு தேயிலை மரங்களைத் தாண்டி ஒடிந்து நொருங்கிப்போன மட்டக்குச்சிகளைத் தவிர துப்புதுலக்கிய பொலிஸாருக்கு வேறு தடயங்கள் கிடைக்கவில்லை.

சுமார் பத்துவருடங்களுக்கு முன்னர் ஆடிக்காற்றும் மழையும் சேர்ந்து அசுரமாய் வீசியடிக்க கிளைபரப்பி சடைத்து நின்ற பெரிய

ஆலமரத்தில் விழுந்த இடி மரத்தை இரண்டாக பிளந்து வீழ்த்தியிருந்தது. அன்று முதல் ஆலமரத்தோப்பு இடிவிழுந்தான் பள்ளமாகியிருந்தது. இடியதிர்ச்சியில் விழுந்த மரம் ஒரு குறிப்பிட்ட பரப்பை பள்ளமாக்கியிருந்தது. அதனால் அகோரப்பட்டுக் கிடக்கும் பள்ளத்தை சொல்லித்தான் தோட்டத்து குழந்தைகளைக் கூட பயமுறுத்துவர்.

இடி இடித்து மரம் விழுந்த பிறகு யாரும் விறகு பொறுக்குவதற்கு கூட அந்தப்பக்கம் போவதில்லை.

ஆள்நடமாட்டம் இல்லாமல் போனதால் தேயிலை செடிகளுக்கு மேல் புற்கள் வளர்ந்திருந்தன. யாரும் அந்தப்பக்கம் போவதற்கு பயப்படுவதால் ஒதுக்குகாடாக அது மாறியிருந்தது. அதனால் காடாய்கிடந்த இடிவிழுந்தான் பள்ளத்தில் பன்றிகளின் நடமாட்டம் அதிகரித்திருந்தது. சம்முகு மட்டும்தான் பன்றிக்கு வலை கட்டுவதற்கு போவான் வருவான். மழை நேரத்தில் வலை கட்டுவான் என்றால் சொல்லவே வேண்டாம் விடியற்காலையில் அவனுக்கு பன்றி விழுந்திருக்கும். அன்றைய நாள் அவனுக்கு கொண்டாட்டமாய் அமைந்துவிடும். காட்டுப் பன்றி என்றால் வெட்டிக் கூறு போடும் முன்னமே தோட்ட நிர்வாகத்திடம் விற்று தீர்க்கப்படும். அதனாலேயே வெறும் சம்முகை எல்லோரும் "பன்டி சம்முகு" என்றுதான் அழைப்பார்கள்.

தோட்டத்தில் யாராவது பன்டி சம்முகு என்று கூறி விட்டால் போதும் புஸ்பம் வரிந்துக் கட்டிக் கொண்டு அவர்களோடு சண்டைக்கு கிளம்பி விடுவாள். அதனால் சண்முகத்துக்கும் புஸ்பத்துக்கும் சண்டை மூளும் "இப்பிடி கொலவுயிரும் குத்துயிருமா அடிச்சி கொல்லுறியே புள்ளகுட்டிகள நாங்க எப்பிடி வளக்கிறது?" என்று ஆதங்கப்படுவாள்.

"அடியே பொஸ்பம் கொன்னா பாவம் தின்னாப்பேச்சிடி இதுக்கெல்லாம் போயி புராணம் படிப்பியா?" என்று உதட்டை பிதுக்கி சேட்டை காட்டும் போதெல்லாம் புஸ்பமும் தன்னை மறந்து சிரித்துவிடுவாள்.

சண்முகத்துக்கு பதினைந்து வயசு இருக்கும் போதுதான் புஸ்பம் பூப்படைந்தாள் அன்று முதலே அவளின் மனசில் சண்முகு ஏறி இருந்து விட்டிருந்தான். நெஞ்சுக்குழிக்குள் சண்முகே உலகமாகியிருந்தான். முத்தாலம்மாள் கோயில் தோப்பில் காதல் வார்தைத்தைகளை பேசி பேசி மயக்கிய போதெல்லாம் கிரக்கத்தில் ஆழ்ந்திருந்த தருணங்களை புஸ்பம் அடிக்கடி அசைபோடுவாள். செல்லக் குறும்பும் சில்மிசங்களும் திருமணத்திற்கு பிறகும் தொடர்வதை புஸ்பம் பெரிதும் ரசிப்பாள். அந்நியோன்யமாய் வாழும் வாழ்க்கைக்கு அடையாளமாய் அழகிய பெண்குழந்தைக்கு தாயாகி இருந்தப் போதும் புஸ்பத்தின் இளமைப் பொலிவு இன்னும் மெருகேறியிருந்தது.

காதலில் திளைத்திருந்த காலங்களில் சண்முகு அடிக்கடி புஸ்பத்துக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பான். இப்படித்தான் ஒரு வருசம் பிறந்தநாளுக்கு அவனளித்த பரிசால் அவள் பூரித்துப் போனாள். சிங்க மலை மேடுகளில் எல்லாம் அலைந்து திரிந்து தேடிக் கண்டடைந்த காட்டுத் திப்பிலி கம்பை காதலோடு பதமாக சீவி மோட்டுவாளையில் காயவைத்து நேராக்கி பின்னர் மட்டம் பார்த்து மஞ்சள் பெயிண்ட் பூசி எடுத்தான்.காதலோடு உருவான மட்டக்குச்சி வழமையான மட்டக்குச்சியை விடவும் கொஞ்சம் தடிப்பமாய் இருந்ததாலோ என்னவோ கம்பீரமாய் இருந்தது.

மறுநாள் வழமையாக சந்திக்கும் முத்தாள் அம்மாள் கோயில் தோப்புக்கு புஸ்பத்தை வரச்சொல்லிவிட்டு காத்திருந்தான் அந்தி நிறுவைக்கு பின்னர் யாருக்கும் தெரியாமல் கோயில் தோப்புக்கு

அவளும் வந்து சேர்ந்தாள் மெல்லிய இருள் தோப்பெங்கும் பரவியிருந்தது தோப்பின் நிசப்தத்தில் சில நிமிடங்கள் காதலில் மூழ்கியிருந்தனர். இப்போது தோப்பு நன்றாகவே இருண்டிருந்தது. சண்முகு புஸ்பத்தை நன்றாக இறுகக் கட்டி நெற்றியில் அழுத்தமாய் முத்தம் பதித்து விட்டு நிரையில் சொருகியிருந்த தன் காதல் பரிசை உருவி எடுத்து நீட்டினான். மட்டக்குச்சி மெல்லிய இருட்டில் தங்கத் தகடாய் ஜொலித்தது. புஸ்பத்தின் கண்களில் நீர் முட்டியது மட்டக்குச்சியை தன் மார்போடு பொருத்தி இறுக அணைத்துக் கொண்டாள்.

அன்று முதல் மட்டக்குச்சி அவர்களின் காதல் சின்னமானது.

புஸ்பம் மலை மேடுகளில் கூடையோடு மாரடித்தாலும் முகத்தில் களைப்பிருக்காது. அன்றலர்ந்த ரோஜாவாய் வந்துப் போவாள். துடுக்குப் பேச்சும் உண்மைக்கு கட்டுப்படும் விசுவாசமும் புஸ்பத்திடம் குறையாது. மலையில் ஏதாவது தகராறுகள் வந்தால் கூட அதை நிர்வாகத்திடம் கொண்டு செல்லாமல் முடித்துவிடுவாள் எல்லோரும் அவள் வார்த்தைகளுக்கு செவிசாய்ப்பர்.

இடுப்பை சுற்றி இறுக்கமாய் கனுக்கால் வரைக்கும் கட்டப்பட்டிருக்கும் படங்கோடு அவளைப் பார்க்கும் போது தவிர்க்க முடியாமல் சீன பெண்மணிகள் நினைவுக்கு வந்துப் போவார்கள். கையில் இறுகப்பிடித்திருக்கும் மட்டக்குச்சி அவளை இன்னும் அழகாக காட்டும். வேட்டியை நேத்தியாய் மடித்து தலையில் போடப்பட்டிருக்கும் கொங்காணியோடு அவளைப் பார்த்தாள் தேவதையாய் தோன்றுவாள். கொஞ்சம் வெயில் பட்டாலும் முகம் கன்னி போன தக்காளியாய் சிவந்துவிடும் மட்டக்குச்சாட்டம் ஒல்லியாய் நிற்கும் புஸ்பத்திடம் தோட்டத்தில் எல்லோருக்கும் ஒரு மரியாதையிருக்கும்.

இந்தக் காவிய காதலில் யார் கண் பட்டதோ தெரியாது இடையிலோர் மறிப்பு விழுந்தது.

பனி இறங்கிய காலை பொழுது அரக்க பரக்க மலைக்கு ஓடி நிரையில் இறங்கி நாலு கொழுந்து கிள்ளி கூடையில் போட்ட போதுதான் ஒதுக்கு மலைக்கு தூக்கிப் போட்டிருக்கும் செய்தியை அறிந்தாள் புஸ்பம்.

"ஏம்மா பொஸ்பம் ஒன்ன தூக்கி ஒதுக்கு மலையில போட்டிருக்காங்க நீ அங்கப் போயி மட்டம் ஒடிக்கட்டாம். தோட்டத்துல உள்ள பயசிறுக்கிகளுக்கு கண்ண உறுத்திகிட்டே இருந்திச்சிப் போல என்னால ஒன்னும் செய்ய முடியல தாயி நல்லா இருக்கிற குடும்பத்துல கொழப்பத்த உண்டுப் பண்ணுறதையே பொழப்பா பண்ணிகிட்டு இருந்தா இப்பித்தான் நடக்கும் நீ போம்மா" என்று கங்காணி தன் ஆதங்கத்தை கொட்டித்தீர்த்தப்போது

"அட இது என்னாங்கய்யா அநியாயமா இருக்கு? கேட்டுக் கேள்வி இல்லாம இப்பிடி ஆள மாத்திப் போடுறதுக்கு என்னா நடந்திருச்சி?"

"நான் என் வேலயில எப்பயும் சுத்தமாத்தானே இருந்திருக்கேன்?"

"ராத்தலுக்கு மேல கொழுந்தெடுத்து நாலு காசு சம்பாதிக்கிறது கண்ணக் குத்திருச்சிப் போல"

"வயசுப் போன எத்தனயோ பேரு ராத்தலுக்கு மேல கொழுந்தெடுக்க முடியாம புது மலயில கெடந்து மாரடிக்குறாங்க எனக்கு என்னா ஆச்சுனு இப்பிடி மாத்திப் போட்டுட்டீங்க?"
என குழம்பியப் போதுதான் "எதுனாலும் போயி நம்ம வெள்ளக்

கண்டாக்க கேஞ்"

"எங்கள கேட்டுகிட்டா தோட்டத்துல எல்லாம் நடக்குது" என்று வாயடைத்து நின்றார் கங்காணி.

"தோட்டத்துல அவரு வச்சதுதானே சட்டமா இருக்கு" என்றதும் புஸ்பத்துக்கு சுருக்கென்று தைத்தது. சுதாகரித்துக் கொண்டு ஒதுக்கு மலைக்கு கிளம்பி விட்டாள்.

பல நாள் திட்டம் நிறைவேறிவிட்ட இறுமாப்பில் இறைச்சி துண்டைக் கண்ட நாயாய் புஸ்பத்தை கண்டு பல்லிளித்த கண்டாக்கு மலை மேட்டில் அவளை கண்டவுடன் விரசப் பார்வையால் சேட்டை காட்டியப் போது புஸ்பத்துக்கு உள்ளுக்குள் கோபம் பொங்கி வெடித்தது. பற்களை நறுநறுவெனக் கடித்துக் கொண்டாள்.

"ரோதமுனியப்பா இந்த மாதிரி பாவிபயலுகள பாத்துக்கிட்டு இன்னுமா அமைதியா இருக்க? ஒன்னோட ஆக்ரோசத்துல கொல்லிக்கண்ண பொசுக்கிப்புடு பொசுக்கிப்புடு" என்று முனுமுனுத்துக் கொண்டாள்.

கையில் கிடந்த கத்தியை கோப ஆவேசத்தோடு வீசி வீசி மேடு பள்ளமாய் வளர்ந்திருந்த வங்கிகளை வெட்டி மட்டம் ஒடித்துக் கொண்டிருந்தாள். கைகளை வீசி வீசி கத்தியால் மட்டம் ஒடித்துக் கொண்டிருந்வளின் கம்முகூட்டில் இருந்து வழிந்த வியர்வை ரவிக்கையை ஈரமாக்கியிருந்ததால் தன் கழுகு கண்ணால் அதனை பார்த்துக் கொண்டிருந்தான் கண்டாக்கு கோபத்தோடு முத்தானையை இழுத்து அடிவயிற்றில் சொருகிக் கொண்டு அவனை முறைத்தப் போதும் விரசமாய் நாக்கை துருத்தி நாக்கால் கன்னத்தை உப்பி சேட்டைக் காட்டியது அறுவருப்பாக இருந்தது.

"புது மலயில ராத்தலுக்கு மேல கொழுந்து எடுக்க நீ படுற கஸ்டத்த பாத்தா மனசு தாங்கல புஸ்பம் அதுதான் தொரைக்கி சொல்லி இங்கப் போட்டது நீ கஸ்டப்படாம வேல செய்யலாம் கொஞ்சம் ஒத்துழைச்சா சரி" என்று குழைந்தான் கண்டாக்கு.

"கொங்காணிய சரியாப் போடு வெயில்ல கெடந்து மொகம் செவந்திருச்சி" என்று நெருங்கி வந்தவன் "இப்பிடி மாடா கெடந்து ஒழைச்சு என்னாத்த வச்சிருக்க சொல்லுப் பாப்பம்?"என்று பேசிக்கொண்டே மீண்டும் நான்கு தேயிலை மரங்களைக் கடந்து பக்கத்துக்கு வந்திருந்தான். நெருங்கி வந்தவனிடம் இருந்து மணந்த சிகரட் நெடி அடி வயிற்றை குமட்டியது. அப்போது அவன் உதிர்த்த வார்த்தைகளில் பரவியிருந்த விரசம் அனல் தெறிக்கும் அவளின் கோபப் பார்வையால் சுட்டெரிந்துப்போனது ஆனால் கண்டாக்கின் கண்களில் மட்டும் கலவரத்தை காணமுடியவில்லை.

நேரம் பன்னிரெண்டு மணியைத் தாண்டியிருந்தது.

எல்லோரும் நிறுவைக்கு சென்றிருந்தார்கள்.மலையில் புஸ்பமும் கண்டாக்கும் மட்டும் தனிமை பட்டப் போது மனசு கிடந்து படபடத்தது. நெத்திக்காணில் இறங்கி ரோட்டுக்கு வந்தாள். அவன் அவளை மோப்பநாயாய் பின்தொடர்துக் கொண்டிருக்கிறான் என்பதை அவனோடு சேர்ந்து பயணிக்கும் சிகரட் நெடி ஊர்ஜிதப்படுத்திக் கொண்டிருந்தது. ஓட்டமும் நடையுமாய் கருத்தரோட்டுக்கு வந்து சேர்ந்ததும் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

திடீரென பழைய மலையில் இவளை தூக்கிப் போட்டது பற்றி தோட்டத்தில் கண் காது மூக்கு வைத்து பேசத் தொடங்கியிருந்தனர். சண்முகு கோபக்காரன் மட்டுமில்லை முரட்டு சுபாவமும் கூட

அதனால் பயந்துக் கொண்டே அவனிடம் இது பற்றி வாய் திறக்காமல் இருந்து விட்டாள்.

நாட்கள் ஓடியடைந்திருந்தன. கண்டாக்கின் சேட்டைகள் எல்லை மீறிப் போய்க்கொண்டிருந்தன.

அன்று மழை இலேசாய் தூறிக் கொண்டிருந்தது. பழைய மலையில் பாதிக்கு மேல் புள்ளதாச்சிகளே வேலை பார்ப்பதால் அரை நேரத்தோடு மலை சோபை இழந்து விடும். அதற்கு பின்னர் கண்டாக்கின் அட்டகாசம் தாங்க முடியாது. வலிந்து வலிந்து வந்து கதையளப்பான்.

பச்சை வார்த்தைகளால் பேசிப் பேசி அவளை இம்சித்துக் கொண்டிருந்தான். அப்போதெல்லாம் சண்முகின் முகமும் காதலும் அவளின் கோபத்தை தணிக்கும் மருந்துகளாகின. எல்லாவற்றையும் பல்லைக் கடித்துக் கொண்டு சகித்துக் கொள்ளும் புஸ்பத்தின் இயல்பு பேச்சும் கனிவும் மறைந்து இறுக்கமும் பயமும் குடிகொண்டிருந்தன. ராட்டினமாய் சுழலும் மனப்போராட்டத்தில் அவளது எண்ண அலைகளும் சுழன்றன.

குட்டிப் போட்ட நாயாய் கண்டாக்கு புஸ்பத்தை சுத்தத் தொடங்கியிருந்தான். அன்று அரை நாள் லீவு கேட்டுக் கொண்டு நின்றவளை குறுக்கு விசாரனை செய்வதாக சொல்லி ஏதேதோ கேட்டு அலம்பிக் கொண்டிருந்தவனிடம் "ஐயா வீட்டுல பொட்டுக்கூட வெறகு இல்ல அதுனால அடுப்பெரிக்க முடியல அதுதான் போயி கொஞ்சம் வெறகு பொறுக்கனும்" என்றதும் என்ன நினைத்தானோ தெரியாது

"சரி நீ போ" என்றதும் புஸ்பம் கிளம்பி விட்டாள்.
வானம் கருகருவென இருண்டிருந்தது. காய்ந்து கிடந்த சுள்ளிகளை

எல்லாம் பொறுக்கி ஒன்று சேர்த்து கயிறை குறுக்காக போட்டு கட்டாக கட்டிவிட்டு நிமிர்ந்தப் போது புஸ்பம் திடுக்கிட்டுப் போனாள்.

நெத்திக் காணுக்கு கீழே பள்ளத்தில் பாம்பொன்று கீரியிடம் மாட்டிக் கொண்டிருந்தது. புஸ்பத்துக்கு நெஞ்சு படபடக்கத் தொடங்கியிருந்தது. விறகு கட்டை தூக்கி தலையில் வைத்துக் கொண்டு திரும்பியவளுக்கு இதயமே நின்றுவிடுமாற் போலிருந்தது. பக்கத்தில் கண்டாக்கு நின்றிருந்தான்.

வழியை மறித்து நின்றவனிடம் "ஐயா இது எல்லாம் நல்லதுக்கு இல்ல வழிய விடுங்க சண்முகுக்கு பன்டி குத்த மட்டுமில்ல மனுசன குத்தவும் தெரியும்"

நீ நெனைக்கிற மாதிரி பல்லு இழிக்கிற பொம்பள நான் இல்ல" என்றவளை தன் முரட்டு கரங்களால் அவளின் தலையில் இருந்த விறகு கட்டை திடுமென தள்ளிவிட்டான். புஸ்பம் நிலை தடுமாறிப் போனாள். விறகோடு சேர்ந்து விழுந்ததில் பிட்டத்தில் விழுந்த அடி வலியெடுத்தது. அவள் எதிர்பாராத நேரத்தில் மேலே விழுந்த கண்டாக்கு அவளை இறுக கட்டியப் போது திமிறிக் கொண்டு எழுந்தாள் புஸ்பம்.

வாரி சொருகியிருந்த கூந்தல் கலைந்து முகத்தை மறைத்திருந்தது. மேல்மூச்சும் கீழ்மூச்சும் வெப்பத்தை வாரி இரைக்க புலியெனப் பாய்ந்து மட்டக்குச்சியை கையில் எடுத்தாள் புஸ்பம்.

கண்டாக்கு மிரண்டுப் போனான். அப்போதுதான் அவன் கண்ணில் ஒரு கலவரத்தை காண முடிந்தது.

பள்ளத்தின் அடிவாரத்தில் கீரியிடம் இருந்து தப்புவதற்கு பாம்பு

போராடிக் கொண்டிருந்தது. தன் வாலால் கீரியை அங்கிங்கு அசைய முடியாதபடி அமுக்கி பிடித்திருந்த பாம்பின் உடலில் கீரியின் பல் பட்ட காயங்கள் பதிந்திருந்தன. மரணத்தின் கோரப்பிடியில் கிடந்த பாம்பு திடுமென தன் வாலை சுருட்டி ஓங்கியடித்தில் கீரிக்கு வலியெடுத்திருந்தது. கீரியின் கோரப்பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட பாம்பு 'அசுர வேகத்தில் வெகுண்டெழுவதற்கும் வங்கியில் கிடந்த கருங்கல் சரிந்து விழுவதற்கும் சரியாக இருந்தது. சரிந்து விழுந்த கருங்கல்லால் கீரியின் தலை சிதற பாம்பு நிதானமாய் சென்றோடி பற்றையில் மறைந்தது.

பற்றை காடுகளுக்கு அப்பால் வளர்ந்து கிடந்த தேயிலை நிரையில் ரத்தம் தோய்ந்த மட்டக்குச்சிகள் ஒடிந்துக் கிடந்தன.

****

# மணி

*01*

வாசலில் நிற்கும் ஆணைக் கொய்யாமரம் குளிர்ச்சியான காற்றை வீடு முழுவதும் இறைத்திருந்தது. முற்றத்தை அலங்கரிக்கும் மலர்ச்செடிகளுக்கிடையே ஒற்றைக் கருங்குருவி சோககீதம் இசைப்பதைக் கண்டமாத்திரத்தில் மனம் சட்டென சஞ்சலப்பட்டது. கைகளை உதறி சீச்சீ சூ சூ... என அதை விரட்டுவதற்கும் என் கைப்பேசி சிணுங்குவதற்கும் சரியாக இருந்தது.

நேரம் காலை 6.45 வீட்டில் இறைந்துக் கிடந்த குளிர் காற்றில் தொலைபேசியில் வந்த செய்தி வெப்பத்தை வாரியிறைத்தது. இரண்டொரு நாட்களாய் எதிர்பார்த்திருந்த செய்தி என்றாலும் "நண்பனின்" மரணச் செய்தி உள்ளத்தை உழுக்கிப் போனது. காலன் எவ்வளவுகர்ணக் கொடூரமாய் தன் நாடகத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறான் என்று நினைக்கும்போதே துக்கம் தொண்டையை அடைத்தது.

மரணச் செய்தியை சுதாகரித்துக் கொள்வதற்காக வாசலுக்கு வருகிறேன். பளபளவென ஒளிர்ந்த விடியல் வானம் நண்பனின் மறைவு தாளாது மெதுமெதுவாய் இருளத் தொடங்கியிருந்தது.

தாழிட்டுக் கிடக்கும் நண்பன் வீட்டுக்கதவும் வெறிச்சோடிக் கிடக்கும் வாசலும் அவனின் முகத்தை மனக்கண்ணில் நிழலாடச் செய்தது.

*02*

நினைவுகள் என்னை 40 வருடங்கள் பின்னோக்கி இழுத்துச் சென்றது. தரவளையில் காளகாரர் கோபாலுவைத் தெரியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். தோட்டந் தோட்டமாக காளைகளுடன் சுற்றித்திரிந்து நேரங்காலங் பாராது உழைத்துழைத்து ஓடாய் தேய்ந்த அந்தக்கால்களில் ஒட்டிக் கிடக்கும் மண்ணும் தரவளையின் வரலாறு பேசும். தோட்டந் தோட்டமாய் காளை ஓட்டி மாடுகளை செனையாக்குவதில் கைதேர்ந்தவன் கோபால். காளையோட்டி மாடுகளை செனையாக்குவதால் அவனை இளம் பெண்கள் செல்லமாய் செவலகார கோபாலு என்று நக்கல் பண்ணுவதுண்டு.

பாடமாத்திக்கு பக்கத்தில் கேட்ரோட் சந்தியில்தான் வழமையாவே மாடுகளை பட்டிக்கு போடுவார்கள் அண்டை அயல் தோட்டங்களில் உள்ள மாடுகள் எல்லாம் அங்குதான் கொண்டு வரப்படும் மாடுகள் பட்டிக்கு விடப்படும் நாட்களில் சின்னஞ் சிறுசுகளை கேட்ரோட் பக்கம் விடமாட்டார்கள் ஆனால் தோட்டத்து குஞ்சு கொலவான்களை அடக்கமுடியாது. மலை மேடுகளிலும் பாறை இடுக்குகளிலும் ஒழிந்திருந்து மாடுகள் புணர்வதைப் பார்த்துவிட்டு எதோ சிதம்பரரகசியத்தை அறிந்து விட்டதிருப்தியில் அதைப் பற்றியே பேசித்திரிவர்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் நானும் அவனுடன் தோட்டந் தோட்டமாய் சுற்றியிருக்கிறேன். சிலநேரங்களில் அவனுக்கும்

காளைக்கும் இருக்கும் சிநேகம் கண்டு வியந்திருக்கிறேன். கோபாலுவின் கழுத்துவரை விஸ்வரூபமாய் வளர்ந்து நின்றாலும் நில்லென்றால் நிற்பதையும் போவென்றால் போவதையும் கண்டால் வியப்பாக இருக்கும். பல சந்தர்பங்களில் பெற்ற பிள்ளையைப் போல் செல்லமாய் கொஞ்சுவதும் கண்டால் உடல் புல்லரித்துப் போகும்.

வழமையாகவே அந்திநேரங்களில் தோட்டத்தை விட்டு கிளம்பிச் செல்வதால்  வீடுதிரும்பும் நேரம் நடுச்சாமமாய் தான் இருக்கும். காளையின் கால்களில் கட்டப்பட்டிருக்கும் மணிதான் தோட்டத்தில் காளகாரரை அடையாளப்படுத்தும் சிம்பொனி மணியொலியை தூரத்தில் கேட்ட மாத்திரத்தில் குழந்தைகளும் கூட கப்சிப்பென்று அடங்கி விடுவர். வீட்டில் அடங்காப் பிடாரியாகத் திரியும் குழந்தைகளுக்கும் காளக்கார கோபாலுதான் பூச்சாண்டி கட்டைக்கம்பும், கோட்டும் முறுக்கு மீசையும் பார்த்தாலே குழந்தைகள் பயம் கொள்வர். ஆனால் அவனுள் எப்போதும் மலர்ந்துக் கிடக்கும் குழந்தை உள்ளத்தை என்னைப் போல் அளந்தார் எவரும் இல்லை.

வீடு திரும்புவதென்னவோ நடுச்சாமமாய் இருந்தாலும் அவன் வருடத்துக்கொன்றென 5 பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளதவறவில்லை.

தோட்டத்து பொது வேலைகளைகளில் அவன் காட்டும் அக்கறை இருக்கிறதே அதை வார்த்தைகளில் அளக்க முடியாது. தோட்டத்தில் மையம் விழுந்தால் பொணத்தை ரெண்டாம் நம்பரில் கொண்டு சேர்க்கும் வரை ஓயமாட்டான். அப்போதெல்லாம் அசட்டுத்தனமாய் என் காதுகளில்

"ஏன்டா ராசு நாளைக்கு நாங்க போனாலும் இந்த மண்ணுலதான்

தலசாய்க்கணும்"

"சொந்தங்க கூடி தூக்கிப் போடுற பாக்கியம் எத்தன பேருக்குத்தான் கெடைக்குது.

"அப்பிடி போனாத்தான் நிம்மதியா தூங்க முடியும்"

"வாழுற காலத்துலத்தான் நமக்கு நெலம் கெடைக்கல செத்தோன சரி சொந்த மண்ணுல தலசாய்க்கத்தானே வேணும்"

"இப்பவே நமக்கும் எடம் போட்டுவப்பமா?" என்று அவன் கேட்ட வார்த்தைகள் என் உள்ளத்தை அம்பெனத் தைத்கிறது.

*03*

உள்ளம் புழுங்கிகிடந்ததாலோ என்னவோ கொழும்பு காலநிலையில் மனசு இன்னும் புழுங்கியது. பேருந்து பெட்டாவில் இருந்து ஊர்ந்து கல்கிசையில் வந்து நின்றது. கொழும்பு அவ்வளவாய் பரீட்சையம் இல்லாத நகரம் என்பதால் நண்பனின் மையத்தை சுமந்துக் கிடக்கும் மலர்சாலையைத் தேடிக் கண்டுப் பிடிக்க முடியவில்லை. கடைசியில் ஆட்டோக்காரனின் அதீதகரிசனையோடு மலர்சாலையைக் கண்டடைந்தப் போது அவனுடன் பேரம் பேசுவதற்கு மனமின்றி கேட்டப் பணத்தை கையில் திணித்து விட்டு உள்ளே போகிறேன்.

பட்டுவேட்டியும் மாலையுமாய் புதுமாப்பிளையென நீட்டி நிமிர்ந்து கிடந்த கோபாலுவைக் கண்டமாத்திரத்தில் அழுகை பொங்கிக்கொண்டெழுந்தது. மலர்சாலை அதீத அமைதியில் திளைத்திருந்ததால் உள்ளக் குமைச்சல்களை உள்ளுக்குள் போட்டு புழுங்கிக் கொண்டு பாப்பக்கா மட்டும் சத்தமில்லாமல் அழுதுக்

கொண்டிருந்தார். இத்தனைக் காலவாழ்க்கை, அனுபவங்களை சொல்லியழ முடியா துயரம் அவர் முகமெங்கும் அப்பிக்கிடந்தது. மரண அறிவித்தலில் கூட அவனின் பிறப்பிடத்தின் அடையாளம் அழிக்கப்பட்டிருந்தது. தான் பெற்ற பிள்ளைகளின் முகங்களில் மட்டும் எதையோ பெரிதாய் சாதித்து விட்ட இறுமாப்பு மிக இறுக்கமாய் படர்ந்திருந்தது.

பாப்பக்கா என்னனைக் கண்ட மாத்திரத்தில் பொங்கி அழுதார்.

"ஐயோ ராசு இந்த மனுசென் என்ன ஏமாத்திட்டு போயிட்டது பாத்திங்களா?"

"ஊருக்கு போயிறணும்முணு கெடந்து துடிச்சதே"

"இப்பிடி என்னெ தனிமரமா தவிக்க விட்டுட்டு போயிட்டதே" என்று விம்மி வெடித்தார் பாப்பக்கா.

"ஆயிரந்தான் சொல்லுங்க பொணத்த ஊருக்கு கொண்டு வராம விட்டது சரியில்ல"

"எத்தன பேருக்குத்தான் பதில் சொல்லுறது சொல்லுங்கப் பாப்பம்" என்று துக்கத்தை பகிர்ந்துக் கொண்ட போது

"நானும் எவ்வளவோ போராடி பாத்துட்டேன் ராசு பயலுங்க கேட்க மாட்டேனுட்டானுங்க பத்துவருசமா பொழங்குன எடம் அதுத்தான் இங்கையே செய்யனும்னு முடிவு எடுத்துட்டானுங்க" என்று புடவை முந்தானையால் வாயை மூடிக் கொண்டு மீண்டும் அழத் தொடங்கினார் பாப்பக்கா.

அறிமுகமில்லா மனிதர்கள், அர்த்தமற்ற சம்பிரதாயங்கள் எதையும்

மனசு ஏற்றுக் கொள்ளவில்லை. என் மண் அதன் மகத்துவம் பற்றி சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும் அங்கு யாருமே இருக்கவில்லை. பாவம் பஞ்சம் பிழைக்க வந்த இடம் வெகுவாய் அவர்களை மாற்றியிருந்தது. மலையென சாய்ந்துக் கிடந்த கோபாலுவின் உடல் என் மனசை விட்டு அகலவில்லை.

மரண கிரியைகளில் கலந்துக் கொண்ட திருப்தியை தவிர மனசு வெறுமையாகவே கிடந்தது. ஹட்டன் பஸ்சில் ஏறி அமர்ந்துக் கொள்கிறேன். உடல் கொழும்பு வெப்பத்தை தாங்கிக் கொள்ள முடியாது தகித்துக் கிடந்தது. பஸ் மெதுவாய் நகரத் தொடங்கியதும் யன்னலின் ஊடே பரவும் காற்று உள்ளத்துக்கும் உடலுக்கும் தெம்பளிக்க அப்படியே கண்ணயர்ந்துப் போகிறேன்.

*04*

"என்ன கோபாலு சின்னப் புள்ள மாதிரி யோசிக்காம எடுத்தேன் கவுத்தேனு பேசுற? நல்லா யோசிச்சித்தான் இந்த முடிவ எடுத்தியா?

"அட நீவேறடா தோட்டங்கள எல்லாம் கம்பனிகளுக்கு தாரவாத்தாச்சி இனி இங்க இருந்தா பஞ்சம் பொழைக்கவும் முடியாது. போயி புள்ளைங்கள அண்டி பொழச்சிகிட்டாத்தான் உண்டு"

"நாங்க என்னா தோட்டத்த விட்டுட்டாப் போறம் கொஞ்ச நாளைக்கு போயி இருந்துப் பாப்பம்" என்று பொய்யாய் ஒரு சமாதான வாரத்தையை ஒப்புவித்தான்.

"அப்ப எல்லாரும் கொழும்புக்கு போவனுமுனு முடிவே பண்ணீட்டீங்க?"

"ஒனக்கே தெரியும் ராசு முன்ன எல்லாம் தோட்டத்துல பேரு

போட்டதோட அந்திக்கு காள ஓட்டுனா நாலுகாசு தேடலாம் இப்பத்தான் அதுலயும் மண்ணு விழுந்திருச்சி மாடுகளுக்கு ஊசிப் போடதொடங்குனதோட பொழப்பு படுத்துக்குச்சி அப்பொறம் எப்பிடி பொழைக்கிறது"

"நீ ஆயிரந்தான் சொல்லு நம்ம மண்ண விட்டுட்டு போறது மனச போட்டு கொடையுது புள்ளைகள எதுக்க முடியல என்று அன்று அவன் கண்களை கசக்கிக் கொண்டே என்னிடம் பயணம் சொன்னது நினைவில் வந்து நெருஞ்சி முள்ளாய் குத்தியது.

*05*

பஸ் வட்டளை வளைவுகளில் என்னை அங்குமிங்கும் உழுக்கி திடுக்கிட்டு எழச் செய்தது. அப்போது அடிவயிற்றில் ஏதோ கல்லைக்கட்டி போட்டாற் போல் ஒருணர்வு உறைந்துக் கிடந்தது. உடல் குப்பென வியர்த்துக் கொட்டியது. வயிற்றுக்கும் தொண்டைக்கும் இடையில் இனம் புரியாத நெருடல் என்னை பாடாய் படுத்தியது.

பஸ் ஹட்டனை வந்தடைய நள்ளிரவு 01.00 ஆகியிருந்தது. பேரக்குழந்தைகளுக்காக வாங்கிய ஓரஞ்ச் காய்கள் அடங்கிய பையை கையில் பிடித்துக் கொண்டு காமினிபுர பாதையூடாக இறங்கி தரவளை மண்ணில் கால் பதிக்கிறேன் நிலவொளியில் ரெண்டாம் நம்பர் மலை என்னை வரவேற்றது.

நிலவொளியில் ரெண்டாம் நம்பர் இன்னும் மெருகேறியிருந்தது. மெல்லிய இருளில் தலையசைத்துக் கிடக்கும் காட்டுமரங்கள் சலசலத்துக் கிடந்தன. எழுபது வருடமாய் மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் உறுதியாய் நிற்கும் பூச்சி பெரியங்கங்காணியின் கல்லறையில் அன்று பெய்த மழையின் ஈரம் இன்னும் ஒட்டிக்

கொண்டிருந்தது. கல்லறையின் நுழைவாயிலில் உடைந்துத் தொங்கும் தகரம் மெல்லிய காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது. மலையெங்கும் அமைதி திளைத்திருந்தது.

சரக் சரக்கென சத்தமிடும் என் பாதவொலி அங்கு பரவியியிருந்த அமைதியை சிதைக்க ஆத்துலயத்தின் தொங்கல் காம்பராவைத் தாண்டி நடந்துக் கொண்டிருக்கிறேன். நேரம் இப்போது நள்ளிரவு ஆகியிருந்தது. அப்போது அங்கிருந்து குப்பென வந்து முகத்தில் அறைத்த அந்த மனித நெடி மிகவும் நெருக்கமாகி என்னை ஆட்கொண்டது. அதனால் சட்டென நெஞ்சு பதற திரும்பி ஒருமுறை கோபால் வீட்டை நோட்டமிடுகிறேன். வீட்டினுள் இருந்து வெளிவந்த அழுகையோடு கலந்த விம்மல் அங்கு பரவியிருந்த நிசப்தத்தை சிதைத்தது.

குளிரில் விறைத்துக் கிடந்த உடலில் பயம் மெதுமெதுவாய் பரவத் தொடங்கியிருந்தது.

இத்தனைநேரம் உள்ளத்தை அரித்துக் கிடந்த துக்கம் பொங்கி வெடித்துச் சிதறியது. என்னை என்னால் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியவில்லை. ஓவென கத்தி அழுகிறேன் நான் இட்ட கூச்சல் காற்றை கிழித்துக் கொண்டு ஒலித்தது இது நண்பனின் மறைவுக்கான அழுகை மட்டுமல்ல அவனின் ஆத்மாசாந்திக்கான பிராத்தனையும் கூட

****

# அழுக்கு

இருள் எங்கும் வியாபித்திருந்தது. ஊசிப்பனி உடலை குத்தி வதைத்துக் கொண்டிருந்தது ஆங்காங்கு சிதறிக் கிடக்கும் குப்பைகளை ஈர்க்கியினால் கூட்டி ஒன்று திரட்டிக் கொண்டிருந்தான் மாயா. குவிந்திருந்த குப்பைகள் துர்நாற்றத்தைப் கிளப்பிக் கொண்டிருந்தன விடிந்தும் விடியாமலும் கிடந்த இருள் மெதுமெதுவாய் வெளுக்கத் தொடங்கியிருந்தது.

தொடை வரைக்கும் தூக்கிக் கட்டியிருந்த சாரத்தின் பிட்டப்பகுதியில் கைகளில் பிசுபிசுக்கும் அழுக்குகளை மீண்டும் மீண்டும் தேய்த்தபடியும் இடையிடையே பிட்டத்தினுள் கையை விட்டு சொறிந்துக் கொண்டும் நின்ற மாயா குப்பை வண்டியை இழுத்து அருகிலே வைத்துவிட்டு மளமளவென குப்பைகளை அள்ளி வண்டியில் நிறைக்கலானான்.

அவன் ஒவ்வொரு முறையும் குனிந்து குப்பைகளை அள்ளும் போதெல்லாம் வீங்கிப் புடைக்கும் அவனது பருத்த தொடைகள் அவனின் உழைப்பாற்றலை படம் பிடித்துக் காட்டியது. நாசியை அறுக்கும் குப்பை நாற்றத்தால் நம நமக்கும் மூக்கினுள் சுண்டு விரலைப் விட்டு நோண்டிக் கொண்டே மழைக்கு மருந்தாய் காது மடலில் பத்திரப்படுத்தி இருந்த பீடித் துண்டொன்றை உதட்டில்

பொருத்தி பற்ற வைத்தான் மாயா. அடி வயிறுவரை புகையை உள்ளிழுத்து ஆசுவாசப்பட்டுக் கொண்டப்போது கணிசமாய் குளிர் குறைந்து விட்டதாய் உணர்ந்தான்.

அப்போதும் மழை இடைவிடாமல் கொட்டிக் கொண்டிருந்தது. குவிக்கப்பட்டிருந்த குப்பைகளில் இருந்து வரும் துர்நாற்றம் அவன் மூக்கை அறுத்தது. ஆனால் அதை எல்லாம் பொருட்படுத்தாமல் அழுக்குகள் படிந்து நிறம் மாறிப் போயிருந்த தோள் துண்டை தலையில் கட்டிக்கொண்டு, குப்பைகளை மளமளவென அள்ளி வண்டியை நிறைத்துக் கொண்டிருந்தான்.

அதிகாலை நான்கு மணிக்கு தொடங்கி விட்டால் காலை ஆறு மணியளவில் நகரக் குப்பைகளை அள்ளி சுத்தப்படுத்தி விடுவான். அத்துடன் அன்றைய நாள் பணி முடிந்து விடும். அதற்கு பின் அவனை கையில் பிடிக்க முடியாது.

மீன் மார்க்கட்டுக்கு பின்னுள்ள முடுக்கு சந்தில் நண்பர்களோடு சூதாடுவதற்கு தொடங்கி விட்டான் என்றால் உலகத்தையே மறந்து விடுவான். இடையிடையே ஆங்காங்கு கிடைக்கும் சில்லறை வேலைகளுக்கான கூலிகள் பகல் நேர போதைக்கு இரையாகும். போதையில் வெறியேறிப் போயிருக்கும் கண்களில் சூதாட்டத்தின் தீவிரம் படிந்திருக்கும் இப்படித்தான் ஒருநாள் சூதாட்டக் களம் அவனை இன்னும் இன்னும் உசுப்பேத்திவிட்டதால் கையில் இருந்த காசெல்லாம் கரைந்த நிலையில் போதையோடு விறுவிறுவென வீட்டுக்கு வந்தவன் ருக்குவின் கழுத்தில் கிடக்கும் தாலியில் கை வைத்தப் போது ஆடித்தான் போனாள் அவள்.

"என்னாய்யா ஒனக்கு பைத்தியமா புடிச்சிருக்கு காது கையினு கையவச்சி வச்சிதான் இப்பிடி மூளி மாதிரி நிக்கிறேன் இப்ப இதுலயும் கையவெக்க வாறியா?" என்று புலம்பிக் கொண்டே ல்

எழுந்து அருகில் கிடந்த எச்சில் பணிக்கத்தில் இத்தனை நேரம் வாயிற் குதப்பிக் கொண்டிருந்த சலியை துப்பி விட்டு

"ஒன்னயெல்லாம் அந்தக் கடவுளே வந்தாலும் திருத்த முடியாது ஒழுங்கு மருவாதயா போயிரு இல்லனா நான் பொம்பளயா இருக்க மாட்டேன்" என கூறி முடிக்கும் முன்னமே தன் முரட்டுக் கையால் அவள் கூந்தலை கொத்தாகப் பிடித்து இழுத்து சரமாரியாகத் தாக்கினான் மாயா.

"ஆமா ஒங்கப்பன் வீட்டுல இருந்து அள்ளிக்கிட்டு வந்ததுபாரு அதுனால போட்டுக்கிட்டு லாத்துறதுக்கு குடுடி" என்று தாலியை உருவிக் கொண்டுப் போனபோது அவள் கழுத்தில் விழுந்த சிராய்ப்பில் ரத்தம் கசிந்து விட்டது. அப்போது ருக்கு தன் உயிரையே உருவிச் சென்றதாக உணர்ந்தழுதாள்.

அன்று சூதாட்டத்திற்கு ருக்குவின் தாலி இரையானது.

அன்றைய நாள் இழப்புக்கு இன்னும் இன்னும் போதை தேவையாகப்பட்டது போலும் மூச்சுமுட்டும் வரை குடித்துவிட்டு கள்ளுக்கடையில் ஊர் வம்பு இழுத்ததால் அன்றைய நாள் இரவை ஜெயிலில் கழித்திருந்தான் என்பது பழையக் கதை

பொழுது நன்றாகப் புலர்ந்திருந்தது கூட தெரியாமல் தொடைக்கு மேல் விலகிக் கிடந்த சாரத்தையும் கவனியாது தூங்கிக் கிடந்தான் மாயா. சில நாட்களில் டவுனில் வேலை முடிந்தக் கையோடு நேரே அறுப்புசாப்புக்கு சென்று விடுவான் எப்போதாவது இப்படி வந்துப் படுத்தானென்றால் எழுப்புவதற்கு மாறடிக்க வேண்டியிருக்கும்.

"இஞ்சே இஞ்சே என்னாய்யா இப்பிடி மாடு மாதிரி தூங்கிற அறுப்பு சாப்புல இருந்து ஆளு வந்துருக்கு ஒன்ன கையோட

கூட்டிக்கிட்டு வரசொல்லியிருக்காங்க" என்று அவன் முதுகுத் தண்டில் கையை வைத்து நெம்பிக்கொண்டே "எழும்புயா எழும்பி போய் தொல" என்றதும் மயிர்கள் அடர்ந்த தனது மார்பின் வலது பக்கத்தை தேய்த்து விட்டுக் கொண்டே

"அட இவ எவடி மனுசன நிம்மதியா தூங்க விட மாட்டிக்கிறா" என்று மீண்டும் குப்புறப்படுத்தவன் சில நிமிடங்களுக்குப் பின் என்ன நினைத்தானோ தெரியாது விலகிக் கிடந்த சாரத்தை கையில் பிடித்துக் கொண்டே எழுந்தோடி தயாரானான்.

"என்னடா மாயா நாளைக்கு அறுப்புக்கு ரெண்டு மாடு நிக்குது காலையில வெல்லனே வந்துரு"

"போய் தண்ணியப் போட்டுட்டு மாடாட்டம் கெடக்காத செல்லிட்டேன்" என்று மரிக்கார் நானா கூறியது இரவு ஏற்றிய போதையில் மறந்தே போயிருந்தது.

எழுந்த மாதிரியே ஓட்டமும் நடையுமாக அறுப்புசாப்பை வந்தடைந்தான் மாயா அப்போது

"என்னடா மசமசனு நிக்கிறெ துணியமாத்தி கிட்டு எறங்கி கூறப் போடு" என்றதும் சாரத்தை கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு காற்சட்டை பையினுள் கிடந்த என்ஸி டப்பாவில் இருந்தெடுத்த என்ஸிப் பொடியை நாக்கை உயர்த்தி அதன் அடியில் வைத்த கையோடு வெள்ளமென பாய்ந்தோடும் ரத்தத்தை விலத்திக் கொண்டு வந்து இறைச்சியை கூறு போடத் தொடங்கினான்.

பளபளக்கும் சூரிக்கத்தி இறைச்சியை கூறுபோட்டுக் கொண்டிருந்தது.

வழமையாகவே அறுப்பு சாப்பில் வேலை முடிந்த கையோடு கூலியையும் சேமன் இலையில் பத்திரப்படுத்தப்படும் இறைச்சி துண்டங்களையும் வாங்கிக் கொண்டு கிளம்பி விடுவான். அறுப்புசாப்பில் இருந்து ஒருபோதும் நேரடியாக வீடு சென்றதில்லை சந்தியில் உள்ள கள்ளுக்கடைக்குச் சென்று கழுத்துவரை போதை ஏற்றிக் கொண்டு சென்றால்தான் வீட்டில் ருக்குவிடம் ஆம்பிளைத் திமிரைக் காட்ட முடியும் என்று நினைத்துக் கொள்வான். மாயாவின் காலம் இப்படித்தான் ஓடிக் கொண்டிருந்தது.

எத்தனை மணியானாலும் கொண்டு வந்த இறைச்சியை வெறுமனே உப்பு போட்டேனும் அவித்துக் கொடுத்து விட வேண்டும் இல்லையென்றால் அதில் இருந்துதான் சண்டையை ஆரம்பிப்பான் .ருக்குவையும் சும்மா சொல்லக் கூடாது எது கேட்டாலும் செய்து கொடுத்து விடுவாள்.

கொஞ்ச நாட்களாகவே அடிவயிறு வின்வின்னென வலித்துக் கொண்டிருந்தது தன் இடக்கையில் இறுக்கமாய் அடிவயிற்றைப் பிசைவதும் விடுவதுமாய் இருந்தாள் ருக்கு வெளிய தெருவுக்கு கலாருனு போக முடியாத வலி ருக்குவின் இயல்புகளை பெரிதும் மாற்றியிருந்தது.

இத்தனை வலிகளோடும் கூட வேலைக்கு சென்று விடுவதால் உடல் இன்னும் பலவீனமாகியிருந்தது. நகர குடியிருப்பு பாதைகளை எல்லாம் கூட்டி சுத்தப்படுத்துவதோடு வீடுகளிலும் மிகுதி நேரங்களில் பத்துபாத்திரங்களை தேய்த்து வேலை செய்வதால் அடித்துப் போட்டாற் போல் உடலில் எப்போதும் அசதியிருக்கும் அந்த அசதியோடு வீடு வந்தாலும் மாயாவின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவள் பின் நின்றதில்லை நேரம் செல்ல செல்ல வயிற்றுவலி தன் தீவிரத்தைக் காட்டத் தொடங்கியிருந்தது மூன்று மாதமாய் தனக்கு தெரிந்த கை மருந்துகள் எல்லாவற்றையும் தின்று

தீர்த்தாள் ருக்கு வலி மட்டும் குறைவதாய் இல்லை சீரகப் பருக்கைகள் சிலவற்றை வாயில் போட்டு சுடுநீரை ஊற்றிக் கொண்டப் போதும் உடல் சோர்ந்துப் போனதோடு மனசும் தளர்ந்திருந்தது.

தூர்ந்துக் கிடந்த அடுப்பை மூட்டியதோடு கேத்தலை அடுப்பில் வைத்துவிட்டு கால்களை அகலவிரித்து குளிர்காயத் தொடங்கினாள் ருக்கு அப்போதுதான் முழு போதையோடு வீடுவந்து சேர்ந்தான் மாயா. வெந்ததை தின்றுவிட்டு வந்ததைப் பாடும் அவனுக்கு பணிவிடைகள் செய்வதைக் காட்டிலும் அவனோடு படுத்து எழும்பும் வாதையைதான் பெரிதும் அசௌகரியமாய் உணர்ந்தாள் ருக்கு. அவள் அனுமதிக்கிறாளோ இல்லையோ மாயா தயாராகிவிட்டால் இணங்கிப் போகவேண்டும் முழு போதையில் வந்தாலும் ருக்கு அவனுடன் படுத்தாக வேண்டும் இல்லையென்றால் போதையின் கோரப்பிடி உடலில் தழும்புகளைப் பதித்துவிடும் அதனால் மாயாவின் ஆம்பிளைத் தனத்திற்கு அதிகமாய் பயந்துப் போவாள்.

அன்று அவளுக்கு அடிவயிற்றில் புளிக் கரைந்துக் கொண்டிருந்தது போதை தந்த அசதியில் அப்படியே தூங்கி விடுவானானால் பரவாயில்லை என்று தோன்றியது

காலையில் பீலிக்கரையில் ராக்கு சொன்ன வார்த்தைகள் ருக்குவின் உள்ளத்தை அரித்துக் கொண்டே இருந்தது.

"ஏன்டி இப்பிடி சீக்கு கோழி மாதிரி இருக்கியே போயி மருந்து மாத்திர வாங்கி திங்கிறதுக்கு என்னா கேடா?"

"அட நீ வேற ஏன் என் வயித்தெரிச்சல கிண்டுற நானே புலி வால புடிச்ச எலி மாதிரி கெடந்து மாயுறேன்" என்றுக் கூறிக்கொண்டே

தூரத்தில் பார்வையை நிலைகுத்தி நின்றவளுக்கு நிரம்பி வழியும் குடமும் கவனத்தில் விழவில்லை.

"இப்பிடியே கெடந்து வெனய இழுத்துக்காதடி"

"குடிகாரப் பயலுகளுக்கு வாக்கப் பட்டா இப்பிடித்தான் நாய் படாத பாடு படனும்"

"அடி பட்டே செத்துப் போயிறாத சொல்லிப்புட்டேன்"

"ஊருற உதிரமெல்லாம் இப்பிடி ஊத்தாப் பெருகுனா ஒடம்பு எப்பிடித் தேறும் போயி ஒழுங்கு மருவாதையா மருந்து எடு" என்று எச்சரித்தாள் ராக்கு.

நேரம் கரைந்துக் கொண்டிருந்தது

போதையோடு கழுத்துவரை உண்ட மயக்கமும் கலந்துவிடவே அதிரும் குறட்டையோடு நீட்டி நிமிர்ந்து .ஆறடி உயரத்தில் அரைப் பிணமாய் கிடந்தான் மாயா.

அடிவயிற்றில் கத்தி வைத்தாற் போல் வலி தீவிரமாகி இருந்தது வயிற்றைப் பிசைந்து பிசைந்து விடும் ருக்குவால் வலியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. குளிர்ந்த தரையில் வயிற்றை வைத்தழுத்தி குப்புறப் படுத்துக் கிடந்தாள் கை கால்களை அகலவிரித்து நீட்டிநிமிர்த்தி நெட்டை முறித்தாள். சுருண்டு படுத்து முழங்கால்களை மடித்து அடிவயிற்றுப் பகுதியில் அழுத்தியும் பார்த்தாள். அப்போதும் வலி குறைவதாய் இல்லை. வலியை தாங்கமுடியாதவளாகி கேவிகேவி அவள் அழுதது இரவின் நிசப்தத்தில் தெளிவாகக் கேட்டப் போதும் மாயாவின் காதுகளுக்கு மட்டும் அது எட்டவில்லை.

சுருட்டி சுருட்டி வலிக்கத் தொடங்கிய வயிற்றுக்குள் அப்படி என்னத்தான் இருக்கிறதோ என்று அழுதோய்ந்தப் போது வயிற்றுக்குள் கிடந்தவைகள் எல்லாம் இரத்தத்துடன் கலந்து வாந்தியாகப் வெளியேறத் தொடங்கியிருந்தது. எழுந்து சென்று வாந்தி எடுப்பதற்கான திராணியை இழந்திருந்த ருக்கு படுக்கையோடு படுக்கையானாள். படுக்கையில் பரவியிருந்த வாந்தி வீச்சமெடுத்திருந்தது. இரவு முழுவதும் வலியால் துடித்தவள் விடியற்காலையில் அசந்து மயங்கியிருந்தாள்.

விடியலில் மலைபோல் குவிக்கப்பட்டிருந்த நகரக் குப்பைகளோடு போராடிக் கொண்டிருந்தான் மாயா. வண்டி நிரம்பிய மகிழ்ச்சி உதட்டில் புகையாய் கரைந்துக் கொண்டிருந்தது. நகரின் அன்றைய நாள் அழுக்குகள் அவனால் அள்ளி முடிக்கப்பட்டிருந்தன. அவன் எண்ணங்கள் முழுவதும் 6.00 மணிக்குள் குப்பைகளை அள்ளி முடித்துவிட்டு அறுப்புசாப்புக்கு சென்று விடவேண்டும் என்பதாகவே இருந்தது.

அன்றும் பொழுது புலர்ந்திருந்தது.

போர்வைக்குள் ருக்கு உடல் விறைத்து கிடந்தாள்.

****

# தாராவின் சப்பாத்து

நேரம் அதிகாலை 5 மணி

கருபந்தேயிலை ஒடி விறகுகள் எரிந்து கருகி, ஸ்தோப்பை புகைமண்டலமாக்கியிருந்தது. அடுப்பில் கரி படிந்து அமர்ந்திருக்கும் அண்டாபானையில் கொதிக்கும் நீரை மாட்டுவாளிக்கு மாற்றிக் கொண்டிருந்தாள் தாரா அடுப்பை ஊதி ஊதி பறந்திருந்த சாம்பல் துகள்கள் அவள் தலையெங்கும் வெண்பஞ்சென படிந்திருந்தன அதனிடையே

"ஏம்மா தாரா அப்பிடியே அந்த தண்ணியில கொஞ்சம் புண்ணாக்கையும் அள்ளிப் போடு ஊறட்டும் மாடுக கத்தி தொலையுதுக" என்று அப்பாவின் கட்டளையும் சேர்ந்துக் கொண்டது. அதிகாலை 5 மணியில் இருந்து அலாரம் வைத்த கடிகாரமென இயங்கத் தொடங்கினால் பள்ளியில் வந்து அமரும் வரையில் அவளுக்கு ஓய்வென்பது கிடையாது.

நேரம் காலை 08 மணி 15 நிமிடம்.

பள்ளி வளாகமெங்கும் சிட்டெனப் பறந்துத் திரிந்த மாணவர்கள் தங்கள் வகுப்பறைகளில் வந்தடங்கியதும் பள்ளி அமைதியில்

திளைத்தது.

பாடசாலையின் எல்லைகளில் சடைத்திருந்த வாகை மரங்கள் படர்த்தும் சில்லென்ற காற்று வகுப்பறைகளை நிறைத்திருந்தது. குளிரில் நடுங்கியப்படி உடலை சுருக்கி, கூனிக் குறுகி அமர்ந்திருந்த மாணவர்களிடம் ஒர் அழகிருந்தது.

ஐந்தாம் வகுப்பு கதவு அரைவாசியளவில் திறந்துக் கிடந்தது. காற்று அசைத்துக் கொண்டிருந்த கதவை மூடி தாழிட்டு விட்டு பாடத்தை தொடங்கலாம் என்று எழுந்து வந்த கஸ்தூரி டீச்சர், மேல் மூச்சும் கீழ் மூச்சும் வாங்கியப்படி வாசலில் வந்து நிற்கும் தாராவைக் கண்ட மாத்திரத்தில்

"சனியனே சனியனே ஒன்னோட பெரிய அக்கப்போறாப் போச்சி"

"எந்த நாளும் இப்பிடி லேட்டா வந்து, ஏன்? என் உயிர வாங்குற"

"நீயெல்லாம் படிக்கலனு யாரு அடிச்சா?"

"எப்பிடியும் மலையில போயித்தான் சாகப்போற அப்பொறம் என்னாத்துக்கு இங்க வந்து ஏன் உசிர வாங்குற?" என்று பற்களை நறுநறுவென கடித்துக் கொண்டார். கண்களில் இருந்து பாய்ந்த கோபக்கணைகள் தன் விரல் இடுக்கில் சிக்கிய தாராவின் காதுகளை நசுக்கியப்படி தணிந்தது.

"எரும மாடே போ போயி ஒங்கப்பன கூட்டிக்கிட்டு வா பெற்றோர் கூட்டம் போட்டா மூச்சப்புடிச்சிட்டு பெரிய சட்டம் பேசுவாரு போயி வரச் சொல்லு நானும் என்னோட சட்டத்த காட்டுறேன்" என்று வார்த்தைகளை அள்ளி வீசினாள் கஸ்தூரி டீச்சர்.

வழமைப் போலவே சுவரோடு சுவராகி, மௌனம் காத்து, சிலையென நின்று விட்டாள் தாரா.

காவி படிந்த சட்டையும், எண்ணெய் வழிந்த முகமும், வாய் பிளந்த சப்பாத்தும் மட்டுமல்ல கிழிந்து நாராகிப் போன டையும் தாராவின் அடையாளங்கள். வேகமாக வகுப்பு வாசலுக்கு ஓடி வந்தவளுக்கு திடுமென டீச்சரைக்கண்டதும் கண்களில் உறைந்த அதிர்ச்சி அவரின் கடூர வார்தைகளில் மூழ்கி மூச்சித் திணறிக் கிடந்தது.

சுவரில் கிடந்த கடிகாரத்தில் நேரத்தை பார்த்துவிட்டு மீண்டும் ஒருமுறை தாராவை பார்த்த டீச்சர்

"மக்கு மக்கு ஒன்னால நேரமே போச்சி"

"இதுத்தான் ஒனக்கு கடசி மன்னிப்பு இனிமேலயும் லேட்டா வந்தனு வச்சிக்க அப்பறம் நான் மனுசியா இருக்க மாட்டேன் சொல்லிட்டேன்." என்று வாத்தைகளை இரைத்துவிட்டு சமாதானம் அடைந்தார்.

ஒவ்வொரு நாளும் படபடத்துப் போகும் தாராவின் இதயம் கஸ்துாரி டீச்சரின் கைகளில் சிக்குவதும் பின்னர் ஆசுவாசப்படுவதும் இயல்பாகி போயிருந்தது.

கண்ணீரோடு வகுப்பறையினுள் வந்தமர்ந்தவளுக்கு, டீச்சர் மாணவர் சுகாதார பதிவு அட்டவணையை கையில் எடுத்ததும் வயிற்றில் புளி கரையத் தொடங்கியது. வரவு டாப்பு ஒழுங்கில் மாணவர்கள் வரிசை கட்டி நின்றனர். தொண்டை வழி கீழிறங்கிய பயம் தாராவின் கால்களை நடுக்கி இருந்தது. தன் தோழிக்கு பின்னால் நிற்கிறோம் என்ற நம்பிக்கையைத் தவிர அவளிடம் ஒன்றும் இருக்கவில்லை.

மாணவரின் தலைமயிர் தொடங்கி சப்பாத்து வரை டீச்சர் ஸ்கேன் செய்துக் கொண்டிருந்தார். தன் சட்டையில் ஒட்டிக்கிடக்கும் புழுதியை கைகளால் துடைத்து விடுவதோடு, பிளந்த வாயின் ஊடே வெளியே வந்து கிடக்கும் காலுறைகளை உள்ளே திணித்து விட்டுக் கொண்டு நின்றவளை "அடுத்தது தாரா" என்ற வார்த்தை திடுக்கிடச் செய்தது.

"மக்கு மக்கு ஒனக்கு எத்தன மொற சொன்னாலும் புரியாது"

"நாறி நாத்தமெடுத்த இந்த சப்பாத்த வீசுனு சொன்னா கேக்கிறியா?"

"ஒங்களுக்காகத்தான் தீவாளி சேல்ல நல்ல சப்பாத்து போட்டு விக்கிறானுங்க அந்தி ஆனா ஒங்கப்பனுக்கு நல்லா வாங்கி ஊத்திக்க தெரியுது தானே? என்று வார்தகைகளை அடுக்கி கொண்டே போனார்.

"இங்க வா இன்னக்கி ஒன்ன ரெண்டுல ஒன்னு பாக்கிறேன்" என்று நாற்காலியை தூரத்தள்ளி விட்டு கோபமாய் எழுந்தப்போது தாரா மிரண்டுப் போனாள். கண்களில் தேங்கிக்கிடந்த கண்ணீர் மளமளவென கொட்ட

"இங்க வாடி கோவத்த கிண்டாத வந்திரு"

"என்னா சொன்னாலும் காதுல வாங்கிக்காம நிக்கிறியே ஒனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்கும்"

"போடுற விதத்துல போட்டா நீயெல்லாம் தானா அடங்கிடுவ" என்று தலை மயிரை கொத்தாய் பிடித்திழுத்த வேகத்தில் கத்தி அழத்தொடங்கினாள் தாரா.

"இங்கப்பாரு நல்ல கொணத்தோட சொல்லுறேன் சப்பாத்த கழற்றிரு இல்லனா அடிப்பட்டே செத்துப் போவ" என்றுதும் தயங்கித் தயங்கி பின்வாங்கி மெதுமெதுவாய் நகரத் தொடங்கியவளை பிடித்திழுத்து, நாறாய் கிழிந்துக் கிடந்த சப்பாத்துளைக் கழற்றியப் போது தாரா மருண்டுப் போனாள்.

நாறென நைந்துக் கிடந்த சப்பாத்துகளை காட்சி பொருளாக்கி, தன்னை ஏளனப்படுத்துவதை தாங்க முடியாமல் ஓவென ஓலமிட்டப்படி வகுப்பு கதவை விருட்டெனத் திறந்துக் கொண்டு ஓடத்தொடங்கினாள் தாரா. கஸ்தூரி டீச்சருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை தாராவைத் தொடர்ந்து டீச்சரும் ஓடத்தொடங்கினார்.

காற்றைக் கிழித்துக் கொண்டு தாரா, மைதானத்தைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தாள். அப்போதும் தன் சப்பாத்துகளை நெஞ்சோடு சேர்த்து இறுக்கி அணைத்திருந்தாள். அவளுக்கு பின்னே

"அடியேய் தாரா நில்லுடி நில்லு கையில மாட்டுன அடிப்பட்டே செத்துப் போவ நில்லுடி" என்று கஸ்தூரி டீச்சர் ஓடிக்கொண்டிருந்தார். டீச்சரை தொடர்ந்து மாணவர்களும் தாராவுக்கு பின்னால் ஓடிக் கொண்டிருந்தனர்.

பாடசாலையின் முகப்பில் ஆழமாய் கீழிறங்கும் நெத்திக்காணில் கண் இமைக்கும் பொழுதில் இறங்கி மறைந்த தாராவை பின்தொடர்ந்து ஓடிய டீச்சருக்கு மேல் மூச்சும் கீழ் மூச்சும் வாங்கியது. கால்கள் உலைந்தன. இருப்பினும் தாராவை தொடந்து வந்த டீச்சருக்கு அங்கு மிகப்பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

காட்டுச் செடிகள் வளர்ந்து கிடக்கும் சுடுகாட்டில் ஆங்காங்கு பூத்துக்கிடக்கும் சிந்தாக்கட்டிப் பூக்கள் அங்குள்ள கல்லறைகளில்

உதிர்ந்துக் கிடந்தன.

கல்லறைகளுக்கு நடுவே, ஈரம் காயாத குழிமேட்டில் வந்த வேகத்தில் விழுந்து, தாரா ஓவென அழத்தொடங்கினாள்.

"அம்..மா அம்..மா அம்..மா"

"அம்..மா அம்..மா அம்..மா"

"ம்மா' என்ன மட்டும் ஏம்மா? தனியா வுட்டுட்டு போன?"

"நானும் ஒங் கூடவே வாறேம்மா"

"எனக்கு புது சப்பாத்து வாங்கிட்டு வாறேனுதானே வெளிநாட்டுக்குப் போன ஏம்மா? திரும்பி வரல?" "சொல்லுமா? சொல்லுமா?" என்று குழிமேட்டில் குவிந்துக்கிடக்கும் மண்ணை ஆவேசமாய் அள்ளி வீசி அழத்தொடங்கினாள் தாரா.

கஸ்தூரி டீச்சர் சிலையென உறைந்துப் போனார்.

அவர் கண்களில் நீர் முட்டியது.

தன் கனவுகள் உதிர்ந்த வலிகளோடு, பூவெனக் கிடந்தாள் தாரா.

"தாராவுக்கு கற்பிப்பதற்கு முன் தாராவை கல்" எனும் உளவியல் அப்போதேனும் அவரை சுட்டதோ நானறியேன் பராபரனே

****

---

ஊற்று

# ஜென்சியும் ஜேசுமணி சித்தப்பாவும்

பூனை, குட்டிப் போட்டு விட்டால் அம்மாவின் நச்சரிப்பு அடங்காது. அங்கேயும் இங்கேயும் குட்டிகளை கவ்விக் கொண்டுத் திரியும் பூனையைக் கண்டாலே எரிந்து விழுவார் அதற்கு ஏற்றாற் போல் பூனையும் அம்மாவை வெறுப்பேற்றி பார்க்கும்.

வீடு முழுவதும் குட்டிகளை இழுத்தும், சில நேரங்களில் கூரை வழியில் இறங்கி அட்டாலில் குட்டிகளை தூக்கிப் போட்டுக் கொண்டு தூக்கத்தை கலைத்தும் விடுவதால் பூனைகளை எப்போதும் திட்டிக் கொண்டே இருப்பார். ஆனால் எனக்கு மட்டும் பூனையை ஏசுவதற்கோ வதைப்பதற்கோ ஒருபோதும் மனம் ஒப்பாது அது தன்பாட்டில் இருந்து விடும் போது நாம் ஏன் அதை வதைக்க வேண்டும் என்றிருந்திடுவேன். அதனால் என்னிடம் பூனை கொஞ்சம் நெருக்கமாகத்தான் இருக்கும் அதன் மிருதுவான உடலை என் கால்களில் உரசி உராயும் போதெல்லாம் எனக்குள் ஆயிரம் ஒளிக்கீற்றுக்கள் தோன்றி மறையும். மெல்லியத் தொனியில் குரல் எழுப்பி என்னுடன் மட்டும் உரிமை பாராட்டும் பூனையை ஒருபோதும் இம்சையாக எண்ணியதே கிடையாது.

பூனையின் வயிறு இன்னும் வீங்கி புடைத்திருந்தது. சில நேரங்களில் இம்முறை ஐந்துக் குட்டிகளாய் கூட இருக்கலாம் என்று எண்ணத்

தோன்றியது. இன்னும் ஓரிரு நாட்களில் பிரசவத்திற்காய் காத்திருக்கும் பூனை, தன்னை மறந்த நிலையில் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தப் போது வயிறு மேலும் கீழுமாய் வீங்கிப் புடைத்து அசைந்துக் கொண்டிருந்தது.

ஜென்சி கண்களை மேலும் கீழும் உருட்டிக் கதவிடுக்கின் ஊடே தலையை வெளியே நீட்டிச் சிரித்தப்போது வாயில் இருந்து வழியும் வாணி அவளது பருத்த மார்பகங்களின் ஊடே கீழிறங்கிக் கொண்டிருந்தது. அது சட்டையின் அரைவாசிப்பகுதியை நனைத்து ஈரமாகியிருந்தது.

காற்சட்டையின் ஒரு காலினுள் இருகால்களையும் நுழைத்திருந்த இறுக்கம் அவளை அங்கிங்கு அசைக்கமுடியாதபடி தடுத்திருந்தது. மிக நெருக்கமாய் திணிக்கப்பட்டிருந்த கால்களால் பிட்டம் வீங்கிப்புடைத்திருந்தது. வழமையாகவே ஜென்சி ஒரு காலின் பகுதிக்குள் இரண்டுக் கால்களையும் திணித்து அவஸ்தைப்படுவதுண்டு கோணல்மானலாய் பூட்டப்பட்டிருந்த சட்டைப் பொத்தான்களில் கடைசிப் பொத்தானோடு சட்டையின் அரைவாசிப்பகுதியை வாயினுள் போட்டுக் குதப்பியதால் ஆடை விலகி அவளது தொப்புள் பளிச்சென வெளிப்பட்டதையும் கண்டுக்கொள்ளாமல் பராக்கு பார்ப்பதில் தீவிரமாய் இருந்தாள். அப்போது சகாயம் அந்தி நிறுவையை முடித்த அசதியோடு வந்து ஆணியில் கூடையை மாட்டி விட்டு ஸ்தோப்புக்குள் நுழைந்தாள்.
"ஜென்சி கண்ணா என்னாப் பண்ணுறீங்க" என்றுக் கேட்டுக் கொண்டே மடியில் கிடந்த மலைத்தக்காளி பழங்களை எடுத்தப்போதுதான் பார்த்தாள்

"ஐயையோ இப்பிடியா கால்சட்டப் போடுவீங்க"

"அம்மாக்கிட்ட வாங்க செல்லம் வாங்க" என்று கூப்பிட்டாள்.

அசைந்தாடி வந்து கழுத்தை இறுக கட்டி எச்சில் வடிந்திருந்த வாயாலே தாயின் முகத்தை தேய்த்து ஆசுவாகப்பட்டுக் கொள்ளும் அவளைக் கட்டித்தழுவி உச்சி முகர்ந்தாள் சகாயம்.

பத்து வருடத் தவத்தின் பயனாய் பெற்றெடுத்த பொக்கிசம்தான் ஜென்சி. சகாயம் அவளை வயிற்றில் வாங்கியப் போது அடைந்த ஆனந்தத்தை விடவும் உருவமாய் பெற்று கையில் ஏந்தியப் போது அடைந்த ஆனந்தத்திற்கு அளவென்பதே கிடையாது. ஊரார் என்னவோ அவளை குறைப்பிரசவமாய் பார்த்தபோதும் டேவிட்டின் மறைவுக்குப் பின்னர் சகாயத்திற்கு கிடைத்த பெரும் நிறைவு ஜென்சி மட்டுமே. ஆனால் ஜென்சி வந்துதித்த சகாயத்தின் வயிற்றில் மீண்டும் ஈரம் துளிக்கவேயில்லை.

ஆரம்பத்தில் பூனைக்குட்டியை வீட்டிற்கு கொண்டு வந்தப்போது அம்மாதான் முதலில் அதன் மீது அக்கறைக் காட்டினார் பூனை முதல்தடவையாய் குட்டிப்போடயிருந்தப்போது அதற்கு கிடைத்த ராஜமரியாதை பற்றி பலருடன் பெருமையாகப் பேசியிருக்கிறேன் கருவாடும் மாசியும் இருந்தால்தான் பூனை சாப்பாட்டையே திரும்பி பார்க்கும் அப்போதெல்லாம் அம்மா முகம் சுளியாமல் அதற்காக காட்டிய அக்கறை கண்டு வியந்திருக்கிறேன் பூனையின் முதல் பிரசவ நாளன்று ஆடிக்காற்றுடன் பெய்த பலத்த மழை அம்மாவினுள் சுரந்த கழிவிரக்கத்தால் பூனை வீட்டினுள் கதகதப்பான கம்பளிப் போர்வைக்குள் முடங்கிக் கொண்டது.

குரலைத் தாழ்த்தி இரவு முழுவதும் கதறியப் பூனை விடியலில் அழகிய மூன்று குட்டிகளை ஈன்றிருந்தது பட்டுப் போன்ற மிருதுவான உடலமைப்பைக் கொண்டிருந்த குட்டிகளை தன் நாக்கினால் வருடிக் கொண்டிருந்தது. மூன்றுக் குட்டிகளும் பூனையின் மார்பில் வாய் வைத்தப்படி ஆழ்ந்திருந்தன ஓரிரு நாட்களுக்குப் பின்புதான் யாருமே எதிர்பாராத நேரத்தில் பூனை

அதை நிகழ்தியிருந்தது.

பூனைக்கென ஒழுங்கமைக்கப்பட்டிருந்த கார்ட்போர்ட் பெட்டியில் ஆங்காங்கே ரத்தம் படிந்திருந்ததோடு சில மாமிசத்துண்டுகளும் சிதறிக்கிடந்தமையால் அம்மா பதறிப்போனார் அப்போது மூன்று குட்டிகளில் ஒருக்குட்டியைக் காணவில்லை அப்பாவை விட்டு சந்துப் பொந்துகளையும் கூரை இடுக்குகளையும் தேடித்துலாவிய போதும் குட்டியை காணவில்லை. எல்லோரும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தப் போதுதான் எச்சமாய் பூனைக்குட்டியின் வால் மட்டும் கிடைத்ததால் அதிர்ந்துப் போனோம் நாம் தான் ஈன்ற குட்டிகளை தானே சுவைத்து விட்ட பெருமிதம் பூனையின் கண்களில் குரூரமாய் பரவியிருந்தது.

அப்போது அம்மாவின் கண்களில் பரவிய கோபம் பூனையின் மீது மரண அடியாய் விழுந்தது. மூன்று நான்கு நாட்களாய் வீட்டுப்பக்கமே தலைவைத்துப் படுக்காத பூனையின் பிரிவு குட்டிகளை வெகுவாய் பாதித்திருந்தது பாலுக்காக ஏங்கியவைகளுக்கு புட்டிப்பாலை கரைத்து கரைத்து ஊற்றியப் போதும் அவற்றை சமாதானப்படுத்தும் திராணியை அம்மா இழந்திருந்தார் ஓரிரு நாட்களில் கூரை வழியில் தலைகாட்டத் தொடங்கிய பூனையை குட்டிகளின் நலன் கருதி அம்மா அதன் போக்கில் விட்டு விட்டார் இயல்பாய் வந்துப் போகத் தொடங்கியது பூனை. குட்டிகளும் இயல்பாய் பெட்டிக்குள்ளும் பெட்டிகளுக்கு வெளியேயும் உலாவத் தொடங்கியிருந்தன.

மறுபடியும் பூனை இயல்புக்கு திரும்பி இருந்தது அம்மாவும் தான் பூனைக்கு சாப்பாடு வைப்பதற்கும் அதை பராமரிப்பதற்கும் அம்மா தவறியதே இல்லை இது இவ்வாறு இருக்கின்ற தருணத்தில் தான் பூனை இப்போது மறு பிரசவத்திற்கு தயாராகியிருக்கிறது.

இருள் கவிழும் பொழுதுகளில் கள்ளு நெடியோடு வீட்டுக்கு வரும் ஜேசுமணி சித்தப்பாவைக் கண்டு விட்டால் கதவிடுக்கிலும் கட்டில் அடியிலும் ஒளிந்துக் கொள்ளும் ஜென்சியை சமாதானப் படுத்துவதற்கு போதும் போதுமென்றாகி விடும் போதையால் சிவந்த கண்களும் முரட்டுச் சுபாவமும் அவளை அச்சத்தில் ஆழ்த்திவிடும் அது மட்டுமல்ல ஒரு நாள் முழு போதையில் தள்ளாடியவன் வீட்டில் அராஜகமாய் சட்டிப் பானைகளை எல்லாம் உடைத்து நாசப்படுத்தியப் போது அவற்றைத் தடுக்கும் திராணியற்றுத் ஜென்சியை ஆரத் தழுவி சிலையாய் அப்படியே கூனி குறுகி இருந்து விட்டாள் சகாயம் அப்போது யாருமே எதிர்பாராத நேரத்தில் செறா விறகில் அப்பாயி தலையில் போட்ட அடியால் ரத்தம் பீறிட்டுப் பாயவே கத்தி ஆர்பரித்து விழுந்த ஜென்சி சில மணி நேரங்களாய் எழுந்திருக்கவே இல்லை.

அன்றிலிருந்து ஜேசுமணி சித்தப்பாவின் முகத்தை அவள் பார்ப்பதே இல்லை

பொழுது புலர்ந்துக் கிடந்தது

பத்தேக்கருக்கு வேலைக்கு போவதென்றால் வீட்டில் இருந்து பத்து நிமிடத்திற்கு முன்னமே போயாக வேண்டும் கொஞ்சம் பிந்தினாலும் கங்காணிப் பயலுகளின் வாய் நீளும். எழுந்ததில் இருந்தே ஓடியோடி இயங்கினாலும் கடைசியில் பிந்தித்ததான் போவாள் சகாயம் சில நேரங்களில் ஜென்சி பாயோடு வெளிய தெருவுக்கு போய் விடுவாளானாள் அவற்றை எல்லாம் எடுத்து சுத்தப்படுத்தியாக வேண்டும் இவ்வாறான நாட்களில் பத்தேக்கருக்கு போக வேண்டி வந்தால் கங்காணியிடம் வசமாய் சிக்கிக் கொள்வாள் நடு வீட்டில் கால்களை அகல விரித்து தூங்கிக் கிடக்கும் ஜென்சியை ஒவ்வொரு முறையும் தாண்டித் தாண்டி போகும் போதெல்லாம் உள்ளுக்குள் நெளியும் அசௌகரியங்கள்

கொஞ்சநஞ்சமல்ல எல்லா புழுக்கங்களையும் ஞாயிற்றுக் கிழமைகளில் கர்த்தரின் பாதங்களில் இறக்கி வைத்து ஆசுவாசப்பட்டுக் கொள்வாள் சகாயம் ஆனால் ஜென்சியின் எதிர்காலம் குறித்த பயம் நாளுக்கு நாள் அவளுள் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

இது இவ்வாறிருக்கவே சகாயத்துக்கான அடுத்த இடி விழுந்தது ஆமாம் ஜென்சி அன்று பெரிய மனுசியாகியிருந்தாள் முகத்தில் பரவியிருந்த அருவருப்பைத் தவிர ஜென்சியிடம் வேறு எவ்விதமான மாற்றங்களையும் கண்டிராத சகாயம் அவளைக் கட்டித் தழுவி அழுது தீர்த்தாள் அப்போது அப்பாயி

"இந்த கூறு கெட்ட முண்டைக்கு அப்பவே சொன்னேன் இத எல்லாம் வச்சி சொமக்க முடியாது மண்ணுக்கு பாரமுனு கேட்டாளா" எனக் கூறிக் கொண்டே உரலில் சிக்கிய வெற்றிலை பாக்கை இடித்துக் கொண்டு சகாயத்தின் வாயை கிண்டினாள். ஆனால் சகாயம் எதுவும் பேசவில்லை.

"இனிமேல பின்னுக்கே மல்லுக்கு நின்னு காவ பாக்க வேண்டியதுதான்"

"ஊரு ஒலகத்துல நல்லா நிக்கிறதுகளே நாலு நக்கு நக்குதுக இத எல்லாம் வெச்சி எத்தன நாளைக்கு மாரடிக்கிறது"

"இந்த சனியன கட்டிக்கிட்டு அழுகலளனு யாரு அடிச்சா"?

"புத்திக் கெட்ட சிறுக்கிக்கு நான் சொல்லுறது எங்க ஏறுது" என்று அப்பாயி கொட்டிய வார்த்தைகளால் சகாயம் இடிந்துப் போனாள்.

அன்றொரு ஞாயிற்றுக்கிழமை மனச்சுமைகளை எல்லாம்

கர்த்தரிடம் இறக்கி வைத்த திருப்தியில் திளைத்திருந்த சகாயத்திடம் "சகாயம் ஒன்னோட கஸ்டங்களுக்கெல்லாம் விடிவுக்காலம் வந்தாச்சி"

"நம்மோட பழையப் பாதர் மிஸ்டர் ஜோசப் கண்டியில இருக்கிற ஹோமுக்கு ஜென்சிய எடுத்துகிறதா கடிதம் அனுப்பிட்டாரு இனி ஆக வேண்டியதப் பாருங்க அடுத்தக் கெழம கொண்டு போய் விடுவம்" என்றதும் இத்தனை காலம் எதிர்பார்த்திருந்த தருணம் கைகூடி வந்த சந்தோசத்தை விடவும் ஜென்சியின் பிரிவுக்காக மனம் அழுதது.

நாட்கள் கரைந்தோடிக் கொண்டிருந்தன

ஜென்சி பெரியவளானதிலிருந்து சகாயம் இயல்பாய் இல்லை அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை இப்படித்தான் ஒரு நாள் குசினிப்பக்கம் ஜென்சியை குளிக்க வைப்பதற்கு உடுப்பு மாற்றிக் கொண்டிருந்ததை திருட்டு தனமாய் ஒழிந்திருந்து பார்த்த ஜேசுமணியைக் கண்டுவிட்டாள் உள்ளுக்குள் பொங்கிய கோபாசேஷம் அவள் நிதானத்தை காவு கொண்டுவிட்டதால் பக்கத்தில் கிடந்த விளக்குமாரை எடுத்து சரமாரியாக தாக்கியவள்

"ச்சீ நீயெல்லாம் ஒரு பொறப்புனு இன்னும் இந்த உசிர வச்சிக்கிட்ருக்க"

"போய் நாண்டுக்கடா ஆயிக்கும் புள்ளக்கியும் வித்தியாசம் தெரியாத முண்டம்"

"இப்பிடி நாக்கத் தொங்கப் போட்டுகிட்டு நாயி மாதிரி அலையிறியே ஒனக்கு வெக்கமா இல்ல"?
"ஊரு மேஞ்சது பத்தாதுனு இப்ப இங்க வந்துட்டியா"

என்று அவனை அடித்து கோபத்தை தீர்த்துக் கொண்ட சம்பவம் என்னவோ முடிந்திருந்தாலும் அடிமனசில் அது பயமாக கவிழ்ந்திருந்தது.

ஆனாலும் ஜென்சியை கண்டியில் உள்ள ஹோமுக்கு அனுப்பி விட்டால் நிம்மதி பெரு மூச்சு விடலாம் என்ற நம்பிக்கையோடு இருந்தாள் சகாயம். அன்று வானம் சகாயத்தின் மனசு போலவே அழுது வடிந்துக் கொண்டிருந்தது.

பூனை அங்குமிங்கும் இருப்புக் கொள்ளாமல் சுற்றித்திரிந்துக் கொண்டிருந்தது எப்படியும் விடிவதற்குள் குட்டிகளை ஈன்று விடும் என்று அம்மா வேறு உறுதியாகக் கூறிவிட்டார் உறுதியான கார்ட்போர்ட் பெட்டியினுள் கம்பளித் துணியையை போட்டுவைத்திருந்தார். சௌகரியமாய் அதற்குள் கிடக்கும் பூனை இப்போது வலி தாளாமல் "ம்மியாவ் ம்மியாவ்" என்று கத்தத் தொடங்கியிருந்தது.

சகாயம் சில நாட்களாய் தூக்கத்தை தொலைத்திருந்தாள்

வெறுமனே போதையோடு வந்து வீட்டை ரணகலப்படுத்திக் கொண்டிருந்தவன் இப்போது முழு போதையில் பொம்பள சகவாசத்திலும் மூழ்கிவிட்டதாகவும் ஊரில் பலவாறு கதை அடிப்பட்டது. அது சகாயத்தின் அடி வயிற்றில் புளியைக் கரைந்தது. போதையில் வந்து தள்ளாடும் ஜேசுமணியின் விரசப்பார்வைகள் ஜென்சியின் மீது அவப்போது விழும் போதெல்லாம் உள்ளுக்குள் ஆடிப் போனாலும் ஒரு போதும் நாகரிகம் கருதி அதனை வேறு யாரிடமும் வெளிப்படுத்தியதில்லை. பகல் முழுவதும் மலைகளில் சுற்றித் திரிந்தாலும் நினைவுகள் என்பது எப்போதும் ஜென்சியை சுற்றித்திதான் திரியும். இது இவ்வாறிருக்கவே ஜென்சியை கண்டி

ஹோமுக்கு அனுப்புவதை எண்ணி மனசளவில் நொந்தும் கிடந்தாள் சகாயம்.

ஜென்சியின் பிரிவை எதிர்கொள்ள முடியாத அவள் வெறுமனே புரண்டு புரண்டு தூக்கத்தை தொலைத்து இரவுகளைக் கடத்திக் கொண்டிருந்தாள்.

மழை இடை விடாது பெய்துக் கொண்டிருந்தது.

குப்பி லாம்போடு அப்பாயி கிழவி எழுந்து கானுக்கு செல்வதற்காக கதவைத் திறந்தப்போது கதவு கிரீச் என்ற சத்தத்துடன் ஆடிக்காற்றை உள் இழுத்துக் கொண்டது அப்போது அப்பாயி கெழவி போட்ட சத்தம் லயத்தை ஒரு உழுக்கு உழுக்கியது வாரி சுருட்டிக் கொண்டு வாசலுக்கு ஓடி வந்த சகாயம் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள் எதிர்பாராமல் கானில் வழுக்கி விழுந்த கிழவியின் மண்டையில் இருந்து ரத்தம் பீறிட்டுக் பாய்ந்துக் கொண்டிருந்தது. அடுத்த லயத்து அஜித் மல்லியின் ஆட்டோவில் கெழவியை அள்ளி போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு போய் சேர்ந்தாள் சகாயம்.

அப்போதும் முழு போதையில் விராந்தையில் குப்புறக் கிடந்தான் ஜேசுமணி ஆடிக் காற்றுடன் மழை சீறி சீறி அடித்துக் கொண்டிருந்தது.

பூனைக்கு நன்றாக வலி எடுத்திருக்க வேண்டும்

குரலைத் தாழ்த்தி கத்தத் தொடங்கியிருந்தது.

இன்னும் கொஞ்ச நேரத்தில் குட்டிப் போட்டு விடும் போய் பார்க்கலாம் என்று பேசாமல் இருந்து விட்டார் அம்மா.

அனத்தலோடு கலந்த பூனையின் முனகல் அடங்கியிருந்தது.

அடி வயிறு முட்டவே எழுந்து வந்து கானில் அமர்ந்து சாரத்தை விலத்தி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட ஜேசுமணி அரை போதையை மூத்திரமாய் கழித்திருந்தான்.

குப்பி விளக்கு எண்ணையை இழந்து மங்கலாய் ஒளிர்ந்துக் கொண்டிருந்தது.

ஜென்சி ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தாள்

விலகிக் கிடக்கும் பாவாடையில் இருந்து வெளிப்பட்டுக் இருக்கும் அவளின் பருத்த தொடைகளை கண்ட ஜேசுமணியினுள் ஒரு விதமான ஊர்தல் உயிர்த்துக் கொண்டது.

யாருமற்ற தனிமை ஜேசுமணியை சூடேற்றிக் கொண்டிருந்தது.

போதையோடு தள்ளாடி வந்தவன் ஜென்சிக்கு அருகில் படுத்துக் கொண்டான். அவனின் அனல் தெறிக்கும் உஸ்ண மூச்சு எண்ணைக்காகப் போராடிக் கொண்டிருந்த விளக்கின் உயிரைக்குடித்து ஏப்பமிட்டது.

எங்கும் இருள் வியாபித்திருந்தது.

விடியலில் பூனையும் குட்டிகளை தின்று தீர்த்திருந்தது.

****

---

வீரகேசரி

# காமன் பொட்டல்

காமன் பொட்டல், கலர் கடதாசிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சிவப்பு சீனியை வாரி இறைத்தாற் போல் மணலால் நிறைந்துக் கிடந்தது காமன் பொட்டல் புள்ளையார் பந்து விளையாடுவதற்கும் ஜில் போலை அடிப்பதற்கும் மட்டுமல்ல காமன் விழாவுக்கும் பொட்டல்தான் பொருத்தமான இடம் படிப்படியாய் அமைக்கப்பட்டிருந்த காமன் மேடு சாணத்தால் மெழுகி கோலமிடப்பட்டிருந்தது. காமனின் கலசம் சிந்தாக்கட்டிப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டு கம்பீரமாய் எழுந்து நின்றது.

பரந்துக் கிடக்கும் பொட்டல் வெளியில் மாசி மாதத்தில் காமனுக்கு விழா எடுப்பது வழக்கம். புழுதி படிந்த பொட்டல் வெளியில் சப்பளித்து, மண்டிப்போட்டு காமன் விழாவைக் காணுவதில் கிடைக்கும் சந்தோசத்துக்கு ஈடினைக் கிடையாது. அதிலும் முதல் வரிசைக்கு முண்டி அடித்துக் கொண்டும், முரன்பட்டும் இடம் பிடித்து கண்டு களிப்பதில் ஒரு திருப்தியிருக்கும்.

இருள் மெதுவாய் கவிழத் தொடங்கியிருந்தது. மாசி மாத ஊசிப் பனி மெது மெதுவாய் கீழிறங்கி பக்த அடியார்களின் தலையில் கொட்டிக் கொண்டிருந்தது.

பொட்டலின் ஒரு ஓரத்தில் கருப்பந்தேயிலை இலைகளால் வேயப்பட்டிருந்த பந்தல் கம்பீரமாய் இருந்ததோடு சிவனுக்குரிய மேடையும் ஒற்றை தூாணில் படிகளோடு நேர்த்தியாய் அமைக்கப்பட்டிருந்தது.

அப்போது லயன்கள் யாருமில்லாமல் வெறிச்சோடிக்கிடந்தன எல்லோரும் பொட்டலில் திரண்டிருந்தனர் ஆனால் பாண்டி மட்டும் லயத்தில் தனித்துப் போயிருந்தான். எப்போதும் மலைமேடுகளில் சுற்றித்திரியும் அவன் நல்ல உழைப்பாளி கவ்வாத்து வெட்டுவது தொடங்கி காண் வெட்டுவது வரைக்கும் பாண்டியை அடிச்சிக்க தோட்டத்தில் ஆளே இல்லை. தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருந்து விடுவான் அதனாலேயே எம் தோட்டபுரத்து ராசாத்திகளுக்கு அவன் மீது ஒரு கண்ணிருக்கும். வேலை முடிந்த கையோடு விறகு காடுகளில் சுற்றித் திரியும் அவன் பொறுக்கி கட்டும் ஒரு விறகுக் கட்டை அசைக்க கூட முடியாது ஆனால் சர்வசாதாரணமாய் அதை தூக்கி தலையில் வைத்துக் கொண்டு அவன் நடக்கும் போது புடைத்து வீங்கும் அவனது புயங்கள் ராஜராஜ சோழனின் கம்பீரத்தை ஞாபகப்படுத்தும்.

இப்படியாக முரட்டு சுபாவத்தோடு தோட்டத்தை சுற்றித்திரிந்தாலும் ஆயிப்புள்ளையிடம் மட்டும் குழைந்துப் போவான்.

ஆயிபுள்ளைக்கும் பாண்டிக்கும் இடையிலான காதல் குட்டை பாவாடையில் மூக்கு வடித்து திரிந்த காலத்தியிலிருந்து அரும்பியிருந்தது. கட்டை காற்சட்டையுடன் கொட்டு மானாக் காடுகளில் விறகுப் பொறுக்கித் திரிந்த காலங்களில் இறுக்கமாய் அவள் கைக்கோர்த்து திரிந்தது முதலாய் உள்ளுக்குள் அடர்ந்திருந்த காதல் இப்போது பருவத்தை அடைந்து சோலையாய் சடைத்திருக்கிறது.

ஆயிப்புள்ளைக்கு பாண்டியின் முரட்டு சுபாவம் ரொம்பவும் பிடிக்கும் முறுக்கேறிப் போயிருக்கும் அவனின் மீசையை அவனுக்குத் தெரியாமல் பெரிதும் ரசிப்பாள் அவனும் அவளின் வார்த்தைகளுக்கு மறுப்பு வார்த்தைகள் பேசுவதில்லை. மயிர்கள் அடர்ந்த அவனின் மார்பினில் தலைசாய்த்து நிம்மதிப் பெருமூச்சு விடும் போதெல்லாம் "இப்பிடியே செத்துப் போயிட்டாலும் எனக்கு சந்தோசம்தான்" என்று கூறுவாள். நறுக்குத் தெறித்தாற் போல வார்த்தைகளை அள்ளி வீசும் அவனின் தைரியம் அவளை அதிகமாய் தெம்பூட்டும்.

மின்னொலியை பொட்டல் ஒப்பனையாய் தீட்டியிருந்தது.

பெட்டினி வியாபாரம் அப்போது சூடுபிடிக்கத் தொடங்கியிருந்தது. மின்னொளியில் பளபளக்கும் கழுத்து மாலைகளும் வளையல்களும், காசிக்கயிறும் கண்ணில் பட்டதும் பாண்டிக்கு இருப்புக் கொள்ளவில்லை எத்தனையோ மாலைகள் இருக்கின்றப் போதும் கருகமணியளவு அவள் கழுத்துக்கு வேறொன்றும் அழகாய் இருப்பதில்லை என்று எண்ணுவான். ஏனெனில் நீண்ட நாட்களாய் அவள் கேட்டுக் நச்சரித்துக் கேட்டுக்கொண்டிருந்த கருகமணி அவன் கண்ணில் பட்டதும் ஆயிபுள்ளையின் சங்கு கழுத்து மனக்கண்ணில் படமாய் விரிந்தது அது மட்டுமல்ல கடந்த வருடம் வாங்கிக் கொடுத்த கருகமணி நிறம் வெளுத்துப் போயிருந்தாலும் இன்னும் அவள் கழுத்தே தஞ்சம் என்றுக் கிடப்பது அவனை இன்னும் ஆர்வமூட்டிக் கொண்டிருந்தது. ஆதலால் உடனே ஒரு மாலையை வாங்கிப் பத்திரப்படுத்தினான் பாண்டி.

ஏழு தோட்டத் தலைவர்களும் பொட்டலில் குழுமியிருந்தார்கள் அதுமட்டுமல்ல ஏழு தோட்டத்து மக்களும் காமனின் விழாவைக் காண வெள்ளமென திரண்டிருந்தனர். சடங்கு

சம்பிரதாயங்களோடு காமன் விழா தொடங்கப்பட்டது.
நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது.

சுற்று வட்டாரத்தில் உள்ள எல்லா தோட்டங்களும் ஒன்றுக் கூடி ரதி மன்மதனின் திருமணக் கோலத்தை வாழ்த்திக் கொண்டிருந்தனர் பொட்டல் சீர்வரிசைகளால் நிறைக்கப்பட்டிருந்தது. மாவிளக்கும் தோரணமும் பொட்டலில் கல்யாண வீட்டின் கலகலப்பை ஏற்படுத்தியிருந்தது. பொட்டலை சுற்றிலும் அமைக்கப்பட்டிருந்த அலங்காரங்களும் தாவணிப் பாவாடையில் திரியும் இளசுகளும் வாலிப வேட்கைகளுக்கு தீணியிட்டுக் கொண்டிருந்தனர்.

தோட்டம் காமன் விழாவில் மூழ்கியிருந்தது. ஆனால் பாண்டி மட்டும் ஆயிப்புள்ளையோடு கோயில் தோப்பில் அடைக்கலம் புகுந்திருந்தான்.

மடியில் பத்திரப்பட்டிருந்த காசிக்கயிறை கச்சிதமாய் எடுத்து பாண்டியின் முரட்டுக் கைகளில் கட்டியப்போது ஆயிப்புள்ளயின் முகத்தில் ஒரு சவரனில் கைசங்கிலி போட்டு பார்த்த திருப்தி மின்னலாய் வெட்டி மறைந்தது. அவனும் பதிலுக்கு அவளை இறுகக் கட்டி மார்போடு பொருத்தி கருகமணியை கழுத்தில் அணிவித்து அழகு பார்த்தான். வெட்கம் தாளாது அவனின் மார்போடு சாய்ந்துக் கொண்டவளின் நாணத்தை பாண்டியின் விரல்கள் சீண்டிக் கொண்டிருந்தன.

மலை மேடுகளில் ஒலித்துப் பறையும் தப்போசை அவர்களின் காதலுக்கான முரசொலியாய் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.

ஆக்ரோசமாய் ஒலித்துப் பறையும் தப்போசைக்கு இசையும்படி பொட்டலில் ரதி மன்மதனின் ஆட்டம் சூடுபிடிக்கத் கியிருந்தது.

தொடங்கியிருந்தது. ஆட்டத்தில் மூழ்கியிருந்த ரதி,மன்மதனுக்கு பூசப்பட்டிருந்த ஒப்பனை மெதுமெதுவாய் கலையத் தொடங்கியிருந்தது.

ஆனால் பனி இறங்கிய இரவும் ஆயிப்புள்ளையின் உடலில் வியர்வையைப் படர்த்திக் கொண்டிருந்தது. பாண்டியின் கட்டுக்குள் முழுமையாய் தொலைந்துப் போயிருந்தாள் ஆயிப்புள்ள.

மன்மதனோ விரகதாபத்தின் உச்சத்தில் நின்று ஆராக் காதலோடும், அருளின் உக்கிரத்தோடும் ஆடிக் கொண்டிருந்தான்.

அப்போதும் கண்களை இறுக மூடி கடுந் தவத்தில் உறைந்திருந்தான் சிவன்.

மயிலுத் தலைவருக்கு பொறி தட்டினாற் போல உள்ளுக்குள் வலுத்த சந்தேகம் கூட்டத்தில் ஆயிபுள்ளையைத் தேடி தொலைத்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தேடித்துலாவியும் ஆயிப்புள்ளையை மட்டும் காணவில்லை. கூடவே பாண்டியின் ஞாபகம் வேறு வந்து வந்து விழவே பதற்றத்தில் உறைந்துப் போனான்.

மேடையில் வழங்கப்பட்டிருந்த கௌரவத்தை கருதி புழுங்கியப்படி அங்கேயே இருந்து விட்டாலும் எண்ணங்கள் என்னவோ எல்லை தாண்டிப் பயணித்திருந்தன.

சடைத்து நிற்கும் மரங்களும் பூத்துக் கிடக்கும் நட்சத்திரங்களும் சாட்சியாய் நின்றதாலோ என்னவோ பாண்டியும் ஆயிப்புள்ளையும் உலகை மறந்து வெகுநேரமாகியிருந்தது. மேகத்தில் மறையும் நிலவும் மேகத்தை உரசி உரசி சல்லாபித்துக் கொண்டிருந்தது. அப்போது தனித்து விடப்பட்ட அவர்களின் உலகம்

புனிதமாக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அடித்துப் பறைந்து களைப்புற்றிருந்த தப்பு எரியூட்டப்பட்ட டயர் சுவாலையில் காய்ந்து தன் காயங்களை ஆற்றிக் கொண்டிருந்தது. குழுமி இருந்த கூட்டத்தை முழுமையாய் ஒரு முறை மேய்ந்து விட்டு திரும்பிய மயிலுத் தலைவரின் கண்கள் கூட்டத்திலிருந்து தப்பியிருந்த பாண்டியையும் ஆயிபுள்ளையையும் வெறியேறி சிவந்திருந்த கண்களோடு தேடித் துலாவின.

அரசல் புரசலாக மலைகளில் பேசிக்கொண்ட பாண்டி ஆயிப்புள்ள காதல் விவகாரம் மயிலுத் தலைவரின் காதுகளுக்கு எட்டியதும் அவர் அடைந்த உக்கிரம் சிவன் நெற்றிக் கண் திறந்தப்போது வெளியான உக்கிரத்தைக் காட்டிலும் கொடுமையானதாக இருந்தது. வாய்த்தர்க்கமாய் ஆரம்பித்து கைகலப்பு வரைக்குமாய் போயிருந்தப் போதும் ஆயிப்புள்ள தன் முடிவில் உறுதியாய் நின்றதுதான் அவரை தடுமாறச் செய்தது.

"எனத்தோட எனமா போயிருந்தாக் கூட பரவால்ல அறிவுக்கெட்ட முண்டம் இப்பிடி கேவலப்படுத்திட்டியே என்னோட தகுதிக்கும் கௌரவத்துக்கும் ஒரு சின்னசாதிப்பய வீட்டுல சம்பந்தம் வச்சிக்க சொல்லுறியா? இங்கப்பாருடி ஒன்ன வெட்டிப் போட்டாலும் போடுவேனே தவிர அவனோட வாழுவோனு மட்டும் கனவுக் காணாத"

என்று மயிலுத் தலைவர் மார் தட்டியதன் தீவிரம் அவளுக்கு அப்போது புரியவில்லை.

சின்னசாதிப் பய சின்னசாதிப் பயனு சொல்லுறியே அவனோடு சேந்து இந்த தோட்டமே மூக்கு மேல வெரல வக்கிற மாதிரி வாழ்ந்துக் காட்டுறேன் பாரு" என்று துல்லியமாய் பதிலிறுத்தாள்

ஆயிப்புள்ள.

"அடிச் செருப்பால இங்கப் பாருடி ஒழுங்கு மரியாதையா சொல்லிப்புட்டேன் கேக்கலயோ அப்பொறம் உயிருக்கு மோசமா போயிடும் சொல்லிப்புட்டேன்"

என்று மல்லுக்கு நிற்கும் மயிலுத் தலைவரின் உறுதியை விடவும் ஆயிப்புள்ளையின் காதல் உயர்ந்து நின்றது.

நேரம் நடுச்சாமத்தை அண்மித்திருந்தது.

விபரீதம் புரியாமல் சிவனின் தவத்தை குறி வைத்து ஆட்டத்தை தொடர்ந்துக் கொண்டிருந்தான் மன்மதன்.

பாவத்துக்கு விமோசனம் இல்லையென்றாலும் மன்மதன் காமத்தின் உச்சத்தில் திளைத்திருந்தான். சிவனின் ஆக்ரோஷத்துக்கு அஞ்சிய ரதியின் மனசு தணலாய் தகித்து கொண்டிருந்தது.

உக்ரமாக ஒலித்துக் கொண்டிருந்த தப்போசை மெதுமெதுவாய் சிவனின் காதுகளை எட்டத்தொடங்கியிருந்தது. உடலுள் பரவும் ஆக்ரோசம் உடலை உலுக்கிப் போகவே வெகுண்டு எழுந்தான் சிவன் ஆயிரம் யானைகளை தன்னுள் இறக்கிய தெம்புடன் பெருமூச்சொன்றை வெளித்தள்ளினான் அப்போது சிவனின் கண்கள் திறக்கப்பட்டன.

காமன் பொட்டலில் இருந்து ஒதுங்கியிருந்த பாண்டியையும் ஆயிப்புள்ளையையும் மயிலுத் தலைவரும் அவருடைய சகாக்களும் வேட்டை நாய் கணக்காய் கோயில் தோட்பில் தேடி நோட்டமிடத் தொடங்கியிருந்தனர்.

சிவனின் தவம் மன்மதனால் கலைக்கப்பட்டாயிற்று. எரிமலையாய் வெடித்துச்சிதறிய சிவனின் கோபக் கனல் மன்மதனை நொடிக்குள் பலிகொண்டது. மன்மதன் சிவனின் கோபச் சுவாலையில் எரிந்துக் கருகத் தொடங்கியிருந்தான். தோட்ட மக்களின் மனங்களோ உருகித் தகித்தன நெருப்பு மன்மதனை அழித்திருந்தது. அப்போது ரதியின் அவலக் குரல் காற்றை நிறைத்துக் கொண்டிருந்தது ஆனால் அது சிவனின் காதுகளை மட்டும் எட்டவே இல்லை.

எல்லோர் முகத்திலும் சோகம் படர்ந்திருந்தது தோட்டம் கூடி நின்று மன்மதனின் மறைவுக்காக அழுதது. அங்கே ரதி மூலியாக்கப்பட்டிருந்தாள். வெள்ளை வேட்டியில் முகத்தை மூடி முக்காடிடப்பட்ட ரதி அழுது புரண்டாள். உயிரைப் பிழியும் ரதியின் சோக வார்த்தைகளை கேட்ட தோட்ட மக்களின் கண்கள் குளமாகின.

விடியலில் கோயில் தோப்பை கொலைக்காற்று நிறைத்திருந்தது.

விதவைக் கோலத்தில் பொட்டலில் இறங்கி உயிர்பிச்சைக் கேட்டு வந்திருந்தாள் ரதி சோகத்தை படர்த்தும் தப்பொலி பொட்டலை இன்னும் வருத்தத்தில் ஆழ்த்தியிருந்தது.

பித்துப் பிடித்து வேர்க்கொண்டது போல அப்படியே இருந்து விட்டாள் ஆயிப்புள்ள மயிலுத் தலைவரின் முகத்தில் ஏக களிப்பு குடிகொண்டிருந்தது.

> ஓ சண்டாளா என் தகப்பா
> உலகில் உண்டோ இவ்வநியாயம்
> சொந்த மருமகன மாமன்
> கொன்ற பாவமுண்டோ?

எனும் ரதியின் உயிர்ப்பிழியும் உருக்கமான சோககீதம் எல்லோரின்

இதயங்களையும் உலுக்கியது. ஆனாலும் சிவன் மட்டும் இறங்கிவருவதாயில்லை. ஈரமற்ற கட்டாந்தரையாய் சிவனின் மனநிலம் வரண்டுக் கிடந்தது.

பொழுது நன்றாக புலர்ந்திருந்தது.

மன்மதனின் மறைவின் அதிர்ச்சியில் இருந்து மீளாத தோட்ட மக்களுக்கு கோயில் தோப்பு இன்னொரு அதிர்ச்சியை வைத்திருந்தது.

தோட்ட மக்கள் கோயில் தோப்பில் நிரம்பியிருந்தனர்.

மப்பும் மந்தாரமுமாய் கிடந்த தோப்பில் கொலை நெடி பரவியிருந்தது. வெறி நாய்களால் கடித்துக் குதறப்பட்ட பாண்டியின் உடல் இரத்த வெள்ளத்தோடு காட்டுப் பீலி ஏரியில் மிதந்துக் கொண்டிருந்தது.

அப்போது மூன்று நாட்களில் மன்மதன் உயிர்த்தெழுவான் என்பதை அறிந்தும் ஆற்றாது அழும் தோட்டம் பாண்டிக்காக எத்தனைக் காலம் அழும் என்பதை கேட்பாரின்றி ஒலிக்கும் தப்போசை புழுக்கமாக கொட்டிக்கொண்டிருந்தது.

****

---

'தகவம்' பரிசு பெற்ற கதை - ஞானம்

# கோகிலாவும் கோணல் வகிடும்

*01*

இருளின் கூர்மை அவளின் குமைச்சல்களை கீறி வடுவாக்கி ஆழம் பார்த்துக் கொண்டிருந்தது. கூடவே உழைப்பின் அசதியும் சேர்ந்துக் கொண்டதால் புரண்டுப் படுத்தாள் கோகிலா.

உலையும் இடுப்பை ஒரு கையால் வருடி விட்டப்படியே நினைவுகளை தொலை தூரத்தில் அலைய விட்டு வெறும் கூடாய் பாயில் கிடந்தாள்.

வழமை போலவே கிழவி "ஏண்டி இந்த மாசம் குளிச்ச இல்ல" என்று சட்டென கேட்டதும் தடுமாறிப் போனவள் தலையை மட்டும் ஆட்டி விட்டு திரும்பி படுத்தப் போது கண்களில் நிரம்பியிருந்த நீர் கன்னத்தின் வழியொழுகியது.

உள்ளங்கையில் கிடந்த குழுசைகளை கையை விரித்து பார்ப்பதும் பின்னர் எதையோ நினைத்து அழுவதுமாய் இருந்தாள்.
யாரிடமும் பகிர்ந்துக் கொள்ள முடியாமல் விழுந்திருக்கும் இடி அவளை நிலை குலையச் செய்திருந்தது.

ஆறு நாட்களும் ஓடியோடி உழைத்து வருந்தும் உடலுக்கு

சனிக்கிழமை மட்டும்தான் விடுமுறை அன்று மட்டும் அடித்துப் போட்டது போலத் தூங்குவாள். பத்து மணியென்றாலும் இன்னும் கொஞ்சம் நேரம் தூங்கலாமே என்றுத் தோன்றும். தூக்கம் அழுத்துப் போகும் வரை தூங்கி விட்டு எழுந்து காட்டுப் பீலிக்கு குளிக்கச் சென்றாள் அதிலேயே அரை நாள் ஓடி விடும்.

ஆனால் அன்று உடல் அசதியோடு மனமும் சோர்ந்துப் போனதால் நேரம் பத்து மணியை தாண்டியிருந்தப் போதும் எழுந்திருக்கத் தோன்றவில்லை. கால்களை விரித்து நீட்டி போர்வைக்குள் மல்லாந்துக் கிடந்தவள் சோம்பல் முறிப்பதற்கு கைகளை உதறித் தள்ளியப் போதுதான் தேநீர் கோப்பையில் ஆறிக்கிடந்த சாயம் கொட்டிக் கவிழ்ந்தது.

பள்ளத்தை நோக்கி ஓடிய சாயம் நெழிந்து வளைந்தோடி ஓரிடத்தில் தேங்கியது. குப்புறப்படுத்து தலையணையில் தலையை சாய்த்து கொட்டிக் கவிழ்ந்த தேயிலை சாயத்தை வெறித்துப் பார்க்கத் தொடங்கினாள் கோகிலா.

அழுதோய்ந்தாலும் மீண்டும் பெறமுடியாத காலம் அவள் மனக்கண்ணில் நிழலாடத் தொடங்கியது.

*02*

"படிப்புத்தான் மண்டையில ஏறல போற எடத்துல சரி புத்தியா பொழச்சிக்க"

"இந்த காலத்து புள்ளைங்க எள்ளுனா எண்ணெய்யா நிக்குதுங்க".

"போற எடத்துல பொசுக்கு பொசுக்குனு கோவப்படாத"

"பொழைக்க போனா வாய் கைய அடக்கிகிட்டுதான் போவனும்"

என்று இடுப்புக்கட்டிப் படங்கை கட்டிக்கொண்டே வாயோயாமல் பேசிக்கொண்டிருந்தாள் கிழவி.

இது எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் தலையின் முன்முடியை கொத்தாக எடுத்து ஒரு பக்கம் சரித்து வகிடு பிரிப்பதில் ஆர்வமாய் இருந்தாள் கோகிலா. அகலமான நெற்றிக்கு சைட் வாக்கு எடுத்து சீவினால் தான் நன்றாக இருக்மென்று யாரோ விதைத்த விதை அவள் மனதில் ஆழமாய் வேரூன்றி இருந்தது.

"கோண வாக்கு எடுத்து சீவாத சீவாதணு தலப்பாடா அடிச்சிக்கிறேன் நீ கேக்கிற மாறி இல்ல நீதான் நெஞ்சுல மயிரு மொளச்சவளாச்சே எக் கேடு கெட்டாவது போ கோண வாக்கு மாதிரி வாழ்க்கையும் கோணலா போகாம இருந்தா சரித்தான்" என்றவாறே கூடையை தலையில் மாட்டிக்கொண்டு மலைக்கு கிளம்பினாள் கிழவி.

வாரி பின்னியிருந்த கனத்த சடை இடுப்புவரை சரிந்து கிடந்தது. முதுகைத் திருப்பி கண்ணாடியில் ஒருமுறை பார்த்து விட்டு கண்களை சிமிட்டி உதட்டை குவித்து சேட்டை காட்டி உள்ளுக்குள் பூத்துக் கிடக்கும் சந்தோசங்களோடு பயணமானாள் கோகிலா.

இரண்டு மாதமாய் அட்டனில் உள்ள சந்து பொந்தெல்லாம் தேடியலைந்து கிடைத்த வேலை என்பதால் வேலை தேடிக்கொள்வது குதிரைக் கொம்பென்பது அவளுக்கு நன்றாக புரிந்திருந்தது. கணக்கு பாடம் மண்டையில் ஏறாமல் போனதால் படிப்பை இடையில் கைகழுவி விட்டு வேலை தேடத் தொடங்கியவளுக்கு இப்போதுதான் அது கைகூடியிருந்தது. அதனால் அரக்க பரக்க பயணப்பட்டு மந்தி தோட்டத்தில் இருந்து

நடந்து கன்னியப்புக்கு பஸ்சைப் பிடிப்பதற்கு வந்திருந்தப்போது நேரம் 7.30 ஆகியிருந்தது.

“அடடே இப்பத்தாம்மா பஸ் போச்சி கொஞ்சம் முன்னுக்கு வந்திருக்கக் கூடாதா?” என்று வழியில் ஒருவர் கூறக்கேட்டு மனஞ்சோர்ந்து நின்றவளுக்கு கடவுளே நேரில் வந்தது போல தன் காலடியில் வந்து நின்றது அந்த ஆட்டோ ”ஹட்டனுக்குத்தான் போறேன் வாரீங்களா?” என்றதும் ஒரு நிமிடம் தாமதியாமல் ஆட்டோவில் ஏறி அமர்ந்தவள் நீண்ட பெருமூச்சொன்றை விட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். காற்றை கிழித்துப் பயணிக்கும் ஆட்டோ முழுவதும் கன்னியப்பு காற்று நிரம்பியிருந்தது.

“இன்னைக்குத்தான் மொதமொதல்ல வேல கெடச்சி போறேன் நல்ல நேரத்துல வந்து சேந்தீங்க ரொம்ப தேங்ஸ் அண்ணே” என்றதும் பதிலுக்கு அவரும் எங்கம்மா வேல கெடச்சிருக்கு? என்கிறார். டவுன்ல உள்ள மங்கை பென்சி கடையிலத்தான் வேல கெடச்சிருக்கு” “அடடே நல்ல எடம்மாச்சே மொதலாளியும் தங்கமான மனுசன்” “அந்த மாதிரி எடத்துல வேல செய்ய குடுத்து வச்சிருக்கணும்.” என்று அவர் கூறிய வார்த்தைகள் அவளை இன்னும் உட்சாகமூட்டியது.

ஆட்டோவின் சைட் கண்ணாடியில் பட்டுத்தெறிக்கும் அவளின் விம்பம் வழமைக்கு மாறாக பொலிவுற்றிருந்ததை ரசித்தவாறே பயணித்தாள்.

ஆட்டோ ஹட்டனை நெருங்க நெருங்க மனசு கிடந்து அடித்தது உள்ளுக்குள் புதுமையான ஒரு பரபரப்பு படர்ந்திருந்தது.

ஹட்டன் பஸ்டேன்டின் நுழைவாயில் போல சடைத்து நிற்கும்

அரசமரத்தடியில் வந்து நின்ற ஆட்டோவில் இருந்து குதித்திறங்கி மீண்டுமொருமுறை அவருக்கு நன்றி கூறி மெயின் வீதியில் நடக்கத் தொடங்கினாள் கோகிலா.

ஏத்தனையோ தடவை வந்துப் போன இடமானாலும் அன்று மட்டும் எல்லோரும் தன்னையே வெறித்துப் பார்ப்பது போல அவளுக்கு தோன்றியது. ஆனால் அது கூட சந்தோசமாகத்தான் இருந்தது.

நேரம் காலை 8.10

மிக பிரமாண்டமாய் உயர்ந்து நிற்கும் கடைவாசலில் கால் வைத்தப் போது கால்கள் கூசின. மெதுவாய் நாக்கு வரள கடையினுள் வந்தவளை "நீதான் புதுசா வேலைக்கு வந்தியா?" வா அந்த ரூம்ல கொண்டு போய் பேக்க வச்சிட்டு வந்து வாசலுக்கு நாலு வாளி தண்ணி ஊத்திக் கழுவு. என்று கொஞ்சம் கண்டிப்பாய் கூறினார் நாற்பது வயது மதிக்கத்தக்க மனேஜர்.

தண்ணீரில் மஞ்சலை கரைத்து வாசலை கழுவி கால் கையை அலம்பி மாலையை கடவுளுக்கு சாத்தி சிரட்டையை சிறிது சிறிதாக உடைத்து எரித்து கணகணத்த நெருப்பினுள் சாம்பிராணியைக் கொட்டிய மாத்திரத்தில் கடையெங்கும் புகை மண்டி வாசனை நிரம்பியது.

எல்லா பக்கங்களிலும் ஒளிரும் மின்குமிழ்களை வட்டமடிக்கும் சாம்பிராணி புகை கடைக்கு இன்னும் அழகு சேர்த்திருந்தது.

நேரம் காலை 9.00 மணி

அத்தனை நேரம் வெறிச்சோடிக்கிடந்த வீதிகளில் மக்கள் கூட்டம்

வெள்ளமென திரளத்தொடங்கியிருந்தனர்.

எல்லா பக்கங்களிலும் ஒளியூட்டப்பட்டிருந்த விளக்குகள் தன்னை இன்னும் அழகாய் காட்டுவதாய் உணர்ந்தாள் கோகிலா. திரும்பும் பக்கமெல்லாம் பட்டுத்தெறிக்கும் தன் விம்பத்தை காதில் கிடக்கும் சில்வர் தோடும் கழுத்தில் கிடக்கும் காசிக்கயிறும் அவமானப்படுத்துவதாகத் தோன்றியது.

கண்ணாடி சோக்கேசுகளில் அடுக்கடுக்காய் கிடக்கும் தோடுகளும் கழுத்து மாலைகளும் அவள் கனவுகளுக்கு உயிரூட்டத் தொடங்கியிருந்தன. திரும்பும் பக்கமெல்லாம் மின்னும் பென்சி ஐட்டங்களைக் கண்டு மளைத்து போய் நின்று விட்டாள். வாடிக்கையாளருக்கு ஒவ்வொன்றாய் எடுத்துக் காட்டி எடுத்துக் காட்டி களைத்துப்போயிருந்ததால் முகத்தில் பூசியிருந்த பவுடர் கரைந்து ஒழுகியிருந்தது.

நேரம் 10.00 மணி

புதிதாய் வேலைக்கு வரும் ஆர்வத்தில் சாப்பிடாமல் வெறும் வயிற்றோடு வந்திருந்ததால் வயிறு கத்தி இரையத் தொடங்கியிருந்தது. காலையில் பார்த்து பார்த்து வகிடெடுத்திருந்த முடியும் கலைந்துப்போயிருந்தது. விரைவில் களைத்துப் போனவளுக்கு கடையில் கொடுத்த பிளேன்டீ புத்துணர்ச்சி பானமானது.

வளையல் என்றும் நெக்லஸ் என்றும் தேடுதல் வேட்டையில் இறங்கி விடும் பெண்களின் கூட்டம் கடையை எப்போதும் கலகலப்பாய் வைத்திருந்தனர். எத்தனை வடிவங்கள் எத்தனை நிறங்கள் எல்லாவற்றையும் கண்டு விக்கித்து நின்றபோதுதான் நெற்றியில் திருநீறும் சந்தனமும் மணக்க கோயில் காளாஞ்சியுடன்

சென்ட் வாசனை கமகமக்க கடையினுள் பிரசன்னமானார் முதலாளி.

வளையல் கவுண்டரில் நின்றிருந்த அவளை பார்த்து இலேசாய் ஒரு சிரிப்பை மட்டும் உதிர்த்துப்போன முதலாளியின் பார்வை கடவுளின் அனுகிரகம் கிட்டினாற் போல இருந்ததோ என்னவோ வெட்கத்தால் அவளின் முகம் விகட்சித்து விட்டது.

வேலையில் தீவிரமாய் இருந்தாலும் இடையிடையே முதலாளியை நோட்டமிடவும் தவறவில்லை. அவர் தன்னை நோட்டமிடுகிறார் என்றுணரும் போதெல்லாம் ஓடியோடி தன்னுழைப்பை காட்டும் கோகிலா அவரிடம் நல்ல பெயர் எடுத்துவிட வேண்டும் என்பதில் ஆர்வமாய் இருந்தாள்.

"கடை முதலாளிமார்களை கடவுளின் பிரதிநிதிகள்" என்று அம்மா சொல்வது உண்மையாகத்தான் இருக்குமோ என்று எண்ணத் தோன்றியது. "நம்ம தோட்டம் முழுவதும் தேடினாலும் தங்கத் தகடு போல ஜொலிக்கும் இவரப் போல ஒரு ஆம்பிள்ளையை பார்க்க முடியுமா?" "அப்பிடி என்னாத்தான் சாப்பிடுறாங்களோ?" என்று தனக்கு தானே கேட்டுக் கொண்டாள் கோகிலா.

ஆறு மணி கொரங்கு மல பஸ்ச புடிச்சாலும் வீட்டுக்கு ஏழரை மணிக்கு போய் சேர்ந்திடலாம் பஸ்ச புடிச்சிடுவமா? என்றெல்லாம் அசை போட்டுக் கொண்டே நேரத்தை பார்ப்பதும் தலையை சொறிவதுமாய் இருந்தாள் கோகிலா.

நேரம் கரைய கரைய மனசு தகிக்கத் தொடங்கியது.

நேரம் 5.50 ஆகியப்போது பஸ் காசை வாங்கிய மாத்திரத்தில் பேக்கை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டு ஓட்டம்

பிடித்தவளுக்கு பஸ்சை காணும் வரை உடலில் உயிர் இருக்கவில்லை.

*03*

கொஞ்சம் இருட்டுப் பட்டால் போதும் மந்தி தோட்ட பாதையில் பன்றிகளின் நடமாட்டம் தொடங்கி விடும். உயிரை கையில் பிடித்துக் கொண்டு நடக்க வேண்டிவரும். என்பதெல்லாம் நாளடைவில் அவளுக்கு பழகி போயிருந்தது.
மந்தி தோட்டமே உலகம் என்றிருந்தவளுக்கு சில மாதங்களிலே ஹட்டன் புதியதொரு உலகத்தை காட்டியது. கடைத் தெருக்களில் கோணவாக்கு கோகிலாவை தெரியாதவர்கள் யாருமில்லை என்றாகியிருந்தது.

நாளடைவில் இருட்டும் பஸ்சைப்பிடிக்கும் பதற்றமும் பழகிப்போயிருந்தது. ஏழு எட்டு மணியானாலும் சாவகாசமாய் கடையை சாத்திவிட்டு வீதியில் இறங்கினாள் போதும் ஆட்டோகாரர்களுக்கு மூக்கு வியர்த்துவிடும். அவளின் சவாரியை பிடிப்பதற்கு அவர்களுக்கிடையில் பெரிய பிரளயமே நடந்து விடும். எவ்வளவு கேட்டாலும் படியளக்க முதலாளி தயாராய் இருப்பதால் அவர்களுக்கு பிரச்சினை இருக்காது.

ஏமம் சாமம் பாராமல் வீட்டுக்கு வந்து போனவளின் நடத்தை மாற்றம் கிழவியின் வயிற்றில் புளியை கரைத்தது. அன்று நேரம் பதினொரு மணியை தாண்டியிருந்தது. குப்பிவிளக்கின் மினுக்கு வெளிச்சத்தில் குறுகுறுவென விளித்துக்கிடந்தாள் கிழவி. ஊரடங்கி கிடந்தாலும் நரிகளின் ஊளையும் ஊமை கொட்டான்களின் அனத்தலும் அடங்கியிருக்கவில்லை.

அப்போதுதான் லயக்கோடியில் கிறீச்சென வந்து நின்ற

ஆட்டோவை விட்டு பூனையென இறங்கினாள் கோகிலா. கிழவிக்கு எங்கிருந்துதான் அவ்வளவு தெம்பு வந்ததோ தெரியாது படாரென கதவை திறந்துக் கொண்டு புலி போல பாய்ந்து கோகிலாவின் தலை மயிரை கொத்தாக பிடித்திழுத்து அடிக்கத்தொடங்கியதும் ஆட்டோகாரனோ திகைத்தோடி மறைந்தான்.

“ஏன்டி கேக்க பாக்க ஆளில்லனு தானே இப்பிடி மேஞ்சிட்டு வாற”
”என்னா சம்பாதிக்கிற திமிறா?”

“கூழ குடிச்சாலும் மானம் முக்கியன்டி மானத்த வித்துட்டு வாழுவியா?”

“நீ நாளையில இருந்து எப்பிடி வேலக்கி போறனு நானும் பாக்கிறேன்”

“இங்கப்பாருடி வாயமூடிக்கிட்டு அடங்கிப் போறேனு மட்டும் நெனைக்காத எனக்கு திரும்பிச்சினா நீ தாங்க மாட்ட அவ்வளத்தான்.”

“நானும் சரித்தான் சரித்தானு பாக்கிறேன் நீ என்னாவோ ரொம்மபத்தான் எகிர்ற” என்று மனம் ஆறும் வரை அவளை அடித்து அலங்கோலப்படுத்தி விட்டு சமாதானம் அடைந்தாள்.

இருந்தாலும் சில நாட்களில் வீட்டுக்கே போகாமல் இருந்து விட்டு மறுநாள் கிழவியிடம் மழுப்பி சமாளிப்பதும் கிழவி லயத்தையே கூட்டி நியாயம் கேட்பதும் வழமையாகி போயிருந்தது.

முதலாளி அடிக்கடி இந்தியாவுக்கு சென்று விடுவதால் கடை அவள் பொறுப்பில் இருப்பதாகச் சொல்லி மறுபடியும் நள்ளிரவில் வருவதும் சில நாட்களில் ஸ்டொக் எடுக்கிறோம் என்று சொல்லி

இரவு வராமல் இருந்து விட்டு தப்புவதும் தொடர்ந்து நடந்துக் கொண்டிருந்தது.

அப்படியே வீட்டுக்கு வந்தாலும் மணிக்கணக்கில் தொலைபேசியில் பேசிப் பேசியே காலத்தை கரைத்துக் கொண்டிருந்தாள்.

இரவெல்லாம் சிணுங்கும் தொலைபேசியில் அப்படி என்னதான் போசுவாளோ தெரியாது ஆனால் பேசிக்கொண்டேயிருப்பாள்.

*04*

அடித்து போட்டது போல ஆடைகள் விலகியிருப்பது கூட தெரியாமல் துாங்கி கிடந்தவளை "நடக்கையிலே தெரியும் நரியண்ணே செய்தினு சும்மாவா சொன்னாங்க"

"வரவர ஒன்னோட நடவடிக்கையே சரியில்லடி"

"வீட்டுக்கு அடங்காதவள ஊருள அடக்க ஒருத்தன் இல்லாமலா போயிருவான்"

"இங்கப் பாருடி மலையில, லயித்துல ஒன்னப் பத்தி மறவா பேசுனவங்க இப்பயெல்லாம் நேராவே பேச தொடங்கிட்டாங்க"

"மத்தவங்க கேவலப் படுத்துற மாதிரி வயித்துல வாயில வாங்கிறாத"

"ஆம்பள இங்க கால வச்சா அங்கப் போயி கழுவிகிட்டுப் போயிருவான் பொம்பள நாங்கத்தான் நெதானமா இருக்கணும்" என்று போஞ்சி காய்களில் நார் உரித்துக் கொண்டே வாயோயாமல் மீண்டும்

"விடிஞ்சிம் விடியாமலும் சிலுக்கு சிலுக்குனு கௌம்பி போனியே இப்ப ஏன்டி எதயோ பறி கொடுத்தவ மாதிரி வீட்டுக்குள்ள அடஞ்சி கெடக்குற இங்கப் பாருடி எதுனாலும் சொல்லிப்புடு கடசியில பெரிய கல்லா தூக்கி போட்டு என்னக் கொல்லாத" என்று கூறினார்.

"கடயே கெதினு கெடந்துட்டு இப்ப திடீருனு போவ மாட்டாளாமே போவ இந்த மூனு மாசந்தான் நிம்மதியா தண்ணிக் குடிச்சம் அதுல மண்ணள்ளி போட்டுறாத"

"ஓ வயசுல நான் ஒன்ன விட நெஞ்சழுத்தக்காரி ஆனா அதுனால ஒன்னும் புரோசனம் இல்ல வீண் ரப்பு வேலக்கி ஆகாது சொல்லிப்புட்டேன்."

"அதுக்குத்தான் தோட்டத்துல பேரு பதிஞ்சிக்கனு தலபாடா அடிச்சிகிட்டேன் கேட்டியா?"

"ஒழுங்கு மருவாதயா நான் சொல்லுறத கேளு வேலக்கி போனமா நாலு காசு பணம் தேடுனமா வந்தமானு இரு கைய கால உழுக்கி எழும்புடி இப்பிடியே எத்தன நாளைக்குத்தான் கெடப்ப" என்று புலம்பியவாறே மலைக்கு கிளம்பி விட்டாள் கிழவி.

ஆளற்று கிடந்த லயமும் தனிமையும் புழுவென உள்ளத்தை குடைய தனிமையை துணைகொண்டு அழுதோய்ந்தாள் கோகிலா.

காற்றில் பறக்க விட்ட பஞ்சென கலைந்துப் போன கனவுகளை யாரிடம் சொல்லி நோவதென்று புரியாத குழப்பத்தை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. ஆனால் கை கால் முளைத்து பறக்கத் தொடங்கிய ஆசைகளை காட்டிலும் வேகமாக வளரும் வயிற்றை தடுத்து நிறுத்தக் கூடிய சக்தியை அவள் இழந்துவிட்டிருந்தாள்.

ஏதோ பிரமை பிடித்தாற் போல தன் கைப்பையை தேடிதுலாவி தலைகீழாய் கவிழ்த்த போது கொட்டிக் குவிந்துக்கிடக்கும் சொக்கலட் பேப்பர்களுக்கு கிடையில் தொப்பென விழுந்தது குழுசைகள் அடங்கிய அவ் அட்டை.

உடல் வியர்த்து கொட்டி படபடத்தது.

தாயின் கண்ணைக்கட்டி விட்டு இரவு நேரங்களில் உல்லாசமாய் முதலாளியோடு சல்லாபித்துக் கிடந்ததன் விளைவு வயிற்றில் உயிராய் உருவெடுக்கும் வரை உணரப்படவில்லை. அதுவரை சிந்திராத பக்கங்களையெல்லாம் சிந்தித்து, பயந்து அவனுடன் போராடி போராடி திராணியற்றுப் போனவளுக்கு முதலாளிக்கு இந்தியாவில் ஒரு குடும்பம் இருப்பது அதுவரை தெரியாது.

இடியென இதயத்தை தாக்கிய முதலாளியின் வார்த்தை அம்புகள் தைத்த காயங்களில் இருந்து அவளால் மீளவே முடியவில்லை. அடி வயிறு கலங்கி நின்றது. வாழ்வே நரமாகிவிட்டதாய் உணர்ந்தாள். பல முறை முயற்சித்தும் அவனை போனில் பிடிக்க முடியவில்லை. தன் கனவுகளை கலைத்து விட்டவன் கடல் தாண்டி பயணித்து விட்டான் என்பதை அறிந்த மாத்திரத்தில் அழுகையும் கண்ணீருமாய் ஆட்டோ ஒன்றில் வந்து வீட்டில் படுத்தவள் தான் இதுவரை அவளால் எழந்திருக்க முடியவில்லை.

அழுதாள் புரண்டாள் ஆனால் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியவில்லை. அழுக்காடைகளை எல்லாம் அள்ளிக் கொண்டு காட்டுப்பீலிக்கு வந்ததும் வராததுமாய் ஆடைகளைக் கூட கலையாமல் தொப்பென வீழும் கனத்த நீரில் அப்படியே இறங்கி நின்று விட்டாள். தகித்த உள்ளத்திற்கும் உடலுக்கும் காட்டுப் பீலியில் கொட்டிய நீர் கொஞ்சம் ஆறுதலாய் இருந்தது. எவ்வளவு நேரம் அப்படியே நின்றாலோ தெரியாது ஆனால் மனசு கொஞ்சம்

இலேசாகியிருந்தது.

சோவென வீழும் பீலித்தண்ணீரில் மனச்சுமைகளை எல்லாம் கரைத்து விட்ட நிம்மதியில் நின்றிருந்தப் போது தலையில் வீழும் நீர் மெதுமெதுவாய் அவளின் கோணல் வகிடை நேர்வகிடாய் மாற்றி விட்டிருந்தது. அப்போது வழமைக்கு மாறாய் அவள் முகத்தில் ஒரு தெளிவு பிறந்திருந்தது.

பீலியில் இருந்து வழிந்தோடி தேங்கி கிடக்கும் அழுக்கு நீரில் குழுசைகளை தொலைத்து விட்ட கருத்தடை அட்டை மட்டும் சுற்றி சுற்றி வட்டமடித்துக் கொண்டிருந்தது.

****

வீரகேசரி

# பொட்டு

வாசலில் நிற்கும் மாமரம் வசந்த காலத்தில் துளிர்ப்பதும் இலையுதிர் காலத்தில் இலைகளை வெளிநடப்புச் செய்து மொட்டையாய் நிற்பதும் கண்டால் மரம் காலத்தை அனுசரித்து வாழப்பழகியிருக்கும் முதிர்ச்சியை புரிந்துக் கொள்ளலாம்.

விடியலில் மரங்கள் உதிர்க்கும் இலைகளை கூட்டிப் பெருக்கி தண்ணீர் தெளித்து முற்றத்தை சுத்தப்படுத்தி விட்டுத்தான் வீட்டு வேலைகளை தொடங்குவாள் பொட்டு. அதுவும் வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் என்றால் சொல்லவே வேண்டாம் வாசல் வளவுகளை கூட்டிப் பெருக்கி, குளித்து மெழுகி, பக்திப் பெருக்கோடு காளிக் கோயிலில் விளக்கேற்றி ஊதுவர்த்தியும் சாம்பிராணியும் மணக்கும் வரை அவள் ஓய மாட்டாள்.

கன்னியப்பிலி பொட்டுவின் சுத்தபத்தம் பற்றி பேசாதவர்கள் யாரும் இல்லை. அதிலும் அவள் அடுப்பு மெழுகி கோலமிடும் அழகிருக்கிறதே அதைக் கண்டு வாயூறி பேசாதவர்கள் எவரும் இல்லை. வாசலை அலங்கரிக்கும் மரத்தடியில் கச்சிதமாய் நிற்கும் காளி சக்தியின் சொரூபமென்பதால் காளியை மனதார நினைத்துக் கொண்டு முத்துக்கல் போட்டு குறி சொன்னால் 'சொன்னச் சொல் தப்பாது. நூல் மந்திரித்து கட்டுவதானாலும் மைப்போட்டு

பார்ப்பதானாலும் சுற்றுவட்டாரத்தில் அவளை விட்டால் ஆளில்லை. தோட்டத்தில் யாராவது நோயில் விழுந்தால் டொக்டரைப் பார்க்கிறார்களோ இல்லையோ கட்டாயம் அவளிடம் விபூதி வாங்கிப் போடுவார்கள்.

பொட்டக்காப் பற்றி "அவ தெய்வப் பொறப்பாச்சே" "ஆம்பளைங்க வாடையே அவளுக்கு ஒத்துக்காது" "குளிச்சி மொழுதி சுத்த பத்தமா நின்னா அந்த காளியே அவ கண்ணுல தெரிவாளே" என்று அம்மா சொல்லக் கேட்கும் போதெல்லாம் அவர் மீதான பக்தியும் மரியாதையும் இன்னும் கூடும்.

அந்தி நிறுவைக்குப் பின், நெற்றி நிறைய திருநீறைப் பூசிக் கொண்டு உட்கார்ந்து விட்டால் எட்டொன்பது மணிவரைக்கூட எழுந்திருக்க முடியாது. அதுவும் சூனியம் வெட்டுவதென்றால் ஒரு மணியானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்போதெல்லாம் பொட்டுக்கு எடுபிடி வேலைகளைச் செய்பவன் கைத்தம்பித்தான்.

கைத்தம்பி கன்னியப்புக்கு எப்படி வந்தான் என்பது பெரியக்கதை முன்பெல்லாம் பாப்பாத்திதான் தோட்டந்தோட்டமாய் சாமி பார்ப்பதற்கும், மைப் போடுவதற்கும் போவாள் அப்படியொரு நாள் புதுக்காட்டுக்கு போயிருந்தப் போதுதான் கைத்தம்பியைக் கண்டாள்.

வெற்றுடம்பு வரிவரியாய் ஓடியிருக்கும் நெஞ்செலும்புகளைக் காட்ட, காற்சட்டையின் ஒரு பக்க இடுப்பு ஓரத்தை கையில் பிடித்துக் கொண்டு ஊழை ஒழுகும் வாயோடு நின்றிருந்தவனை கண்ட மாத்திரத்தில் அவளின் நெஞ்சில் இரக்கம் சுரந்து விட்டது. விசாரித்துப் பார்த்ததில் தாய் யாரோ வெளிநாட்டுகாரனோடு சோடைப் போனதால் வயிற்றில் வாங்கிக் கொண்டாள் என்றும் பிள்ளையைப் பெற்று போட்டுவிட்டு வெளிநாட்டுக்கு

ஓடியவள்தான் கைத்தம்பியும் வளர்ந்து நிற்கிறான் ஆனால் இன்னும் அவள் பற்றி தகவலில்லை. என்பது தெரிய வந்தது.

நீலம் பூத்த கண்களும் செம்பட்டை தலையும் குங்குமப்பூ நிறமும் தான் அவனை ஏனையோரில் இருந்து வெட்டி விலக்கி காட்டும் தனித்துவங்கள். ரொபட் கென்னடியாகவோ ஜோன் டெய்லராகவோ பிறக்க வேண்டியவன் பாவம் பார்வதி வயிற்றில் வந்து விழுந்ததால் பரமசிவனானான் ஆனால் தோட்டத்துக்கு அவன் வெள்ளையன்தான் சோறு கண்ட இடம் சுகமென்று இருந்து விடுவான். தோட்டத்தில் எல்லா வீட்டு கைவேலைகளுக்கும் கைப்பிள்ளையானதால் பின்னர் கன்னியப்பு கைத்தம்பியானான்.

தனியனாய் சுற்றித்திரிந்த கைத்தம்பிக்கு பாப்பாத்தியின் அரவணைப்பு இதமாய் இருந்தது. காடே வனமென சுற்றித்திரிந்து விட்டு வந்தாலும் பொட்டுவின் கண்ணை கட்டிவிட்டு அவனை உபசரித்து விடுவாள். அதனால் இருவருக்கும் இடையில் சண்டை மூளும். அப்போதும் கைத்தம்பியை விட்டுக் கொடுக்க மாட்டாள் கிழவி. தனக்கு பின் பொட்டுக்கு கைத்தம்பிதான் துணை நிற்பான் என்று நம்பியிருந்தாள்.

பொட்டு தன்னை ஓடவிட்டு விரட்டுவதை பாப்பாத்தியிடம் முறையிட்டுக் கொண்டேயிருப்பான் அவன். தொட்டதற்கெல்லாம் கையோங்கி விடும் பொட்டு அவனை சாதாரணமாய் அலட்சியப்படுத்தி விடுவாள். அப்போதெல்லாம் உள்ளுக்குள் குமுறும் அவன் அவளை கெட்ட வார்த்தைகளில் திட்டித் தீர்ப்பான். கைத்தம்பி தோட்டத்தில் பத்து நாள் பேர் போடுவதே குதிரைக் கொம்பாகத்தான் இருக்கும். அப்படியே பேர் போட்டாலும் சம்பளத்தை கண்ணில் காட்டமாட்டான். சம்பள நாட்களில் கிழவியின் வாயடைப்பதற்கு கால் போத்தல் சாராயத்தை வாங்கி ஊத்தினால் போதும் மட்டாகி விடுவாள். ஆனாலும் பொட்டுவின்

வாயை அவனால் அடைக்க முடியாது.

"ஒன்ன வச்சி சொமக்கிறதே இங்க பெரும்பாடா இருக்கு இதுல ஊரு நாய்க்கெல்லாம் வடிச்சி கொட்ட வேண்டியிருக்கு" என்று சொல்லிக் கொண்டே அருகில் கிடந்த கிழவியின் எச்சில் பணிக்கத்தை எடுத்துச் சென்று காணில் கொட்டிக் கொண்டே "மானங் கெட்டதுக பொம்பள ஒழப்புல திங்குறதுக்கு போயி எவனயாவது நக்க வேண்டியதுதானே? என்று சொல்லிக் கொண்டே இரவு சாப்பிட்டு, காய்ந்துக்கிடக்கும் தட்டுகளை அருகில் கிடக்கும் பேசனில் எடுத்து கோபமாய் எறிய அவை ஒவ்வொன்றும் நங் நங்கென விழுந்து ஒலியெழுப்பிக் கொண்டிருந்தன.

இது எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் தலையோடு போர்வையை போர்த்திக் கொண்டு மல்லாந்துக் கிடந்தான் அவன். டவுனில் எடுபிடி வேலைகளுக்கு சென்றான் என்றால் உலகத்தையே மறந்து விடுவான் கிடைக்கின்ற வேலைகளை செய்து விட்டு செல்லமுத்து பார் வாசலே தஞ்சமென்றுக் கிடப்பான். அப்போதெல்லாம் பொம்பிளைகளையே இதுவரை பார்த்திராத மாதிரி போற வாற பெண்களை வெறித்துப் பார்த்துக் கிடப்பான். அப்போது உள்ளுக்குள் முட்டி மோதும் மோகம் அவனை அணுவணுவாய் சிதைக்கும்.

யாரும் தன்னை ஏறெடுத்துப் பார்ப்பதில்லை அப்படியே பார்த்தாலும் முகம் உமிழும் அருவருப்பின் அடையாளங்கள் தன்னை அதிகமாய் காயப்படுத்தும் போதெல்லாம் செல்லமுத்து பாரில் நுழைந்து விடுவான். அவமானச்சின்னமாய் தன்னை பெற்றவள் மீது தூசண வார்த்தைகளை அள்ளி இறைப்பதோடு சமாதானமடைவான் தைத்தம்பி.

பொட்டு தனிமரமாய் நிற்பதைக் கண்டு பாப்பாத்தி உள்ளுக்குள்

புழுங்கி கிடந்தாள்.

"காலம் இப்பிடியே ஓடாதுடி தனிமரமா நிக்கிறது நெருப்புல நிக்கிற மாதிரி இப்பையே சுதாகரிச்சிக்க இல்லனா நாலு நக்கு நக்கித்தான் சீபடனும் சொல்லிப்புட்டேன்." என்று சொல்லிக் கொண்டே சிக்காய் கிடக்கும் தலை மயிரில் சீப்பை விட்டு இழுத்து போராடிக் கொண்டிருந்தாள் கிழவி.

"ஊரு ஒலகத்துல எவன்தான் குடிக்கல பொம்பளனா கொஞ்சம் பொறுமை வேணும்"அரும பெருமையாத்தான் தேடி வச்சேன் மவராசன் சத்தமாக் கொட நாலு வார்த்த பேச மாட்டது" "என்னா தண்ணிய போட்டுட்டு சாஞ்சிருவான் அது ஒன்னுத்தான்" "ஒனக்குத்தான் வாழ குடுத்து வைக்கல" பிச்சலும் புடுங்களுமா எத்தன காலத்துக்குத்தான் வாழுறது அதுத்தான் மவராசன் சாதி சனத்தோட போயி சேர்ந்துட்டது"

"அள்ளி எறச்சிட்ட இப்ப அள்ள முடியுதா? எதயும் ஒரு தடவைக்கு நாலு மொற யோசிக்கனும்" என்று சொல்லிக் கொண்டே தலைவாரி கொட்டிய பேன்களை தேடித் தேடி குத்திக் கொண்டிருந்தாள் கிழவி. "கொஞ்சம் பொத்துவியா? விடிஞ்சோன லொட லொடனு தொடங்கிற வேண்டியதுதான்" "ச்சீ இந்த வீட்டுல மனுசென் நிம்மதியா தூங்கக் கொட முடியாது" என்று போர்வையை விருட்டென விலக்கி எழுந்தப் போது போர்வை கிழவின் முகத்தில் பட்டென அறைந்து சுருண்டது.

"ஆம்பள ஆயிரஞ் செய்வாண்டி நீதான் பொறுத்துப் போகணும்" என்று தன் மீதுள்ள அக்கறையை கோபமாயும் ஏசிப்பேசியும் கிடந்த வாய் ஓய்ந்து இரண்டு மாதங்களாயிருந்தது.

கிழவியின் மறைவுக்கு பின்தான் பொட்டு தனிமையின் கூர்மையை

உணர்ந்து தவித்தாள். தனிமையை விரட்டுவதற்கும் உள்ளுக்குள் புகைந்துக் கிடக்கும் வலிகளை ஆற்றுவதற்கும் காளிக் கோயிலே தஞ்சமெனக் கிடந்தாள். அதன் பின்தான் பொட்டு பொட்டம்மா ஆனாள்.

பாப்பாத்தி கிழவியின் மறைவு கைத்தம்பிக்கு பெரும் அதிர்ச்சியாய் இருந்தது. தலை மகனாய் நின்று எல்லா காரியங்களையும் அவனே செய்தான். கிழவியின் மறைவுக்கு பின் சில நாட்களாய் பார் பக்கமே போகாமல் இருந்த வரைக்கும் பொட்டு நிம்மதி பெருமூச்சு விட்டாள் ஆனால் அந்நிம்மதி நீடிக்கவில்லை.

அன்றொரு சம்பள நாள் தன் தவத்தை கலைத்து விட்ட கைத்தம்பி வயிறு முட்ட கள்ளைக் குடித்து நிதானத்தைத் தொலைத்திருந்ததோடு முழு போதையில் வந்து வாயிற் கதவினில் வீழ்ந்து அப்படியே தூங்கிப் போயிருந்தான்.

விடியல் காற்று குளிர்ந்திருந்தது.

இன்னும் தெளியாத போதை கைத்தம்பியின் கண்களை விடியல் வானமாக்கியிருந்தது.

அசந்து தூங்கிக் கிடந்தவனின் கால்கள் வீட்டு வாசல் கதவை மறித்துக்கிடக்க விடியலில் சாணித் தண்ணியோடு வந்து கதவை திறந்தவளுக்கு கோபம் தலைக்கேறியது.

"ஏன்டா சனியனே ஒனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தா இங்க வந்துப் படுப்ப"

"ராத்திரி முழுக்க லாம்ப எரிச்சிகிட்டு பாத்துக்கிட்டு இருந்தா இங்க வந்து படுப்பியோ? நாயே"

"ஒன்ன சொல்லிக் குத்தமில்ல இந்த வீட்டுல கெடந்த கெழவிய சொல்லனும் நாய கழுவி நடு வீட்டுல வச்சாலும் நக்குமினு சும்மாவா சொன்னாங்க"
என்று கையில் இருந்த ஈர்க்குமாரினால் சரமாரியாகத் அவனைத் தாக்கத் தொடங்கியதும் நிலைக் குலைந்த கைத்தம்பிக்கு அப்போதும் போதை தெளிந்திருக்கவில்லை கையில் இருந்த சாணி வாளியை தலையிற் கொட்டியதோடு சமாதானமடைந்தாள் அவள்.
"அட என்னா? இப்பிடி பண்ணிப்புட்ட ஆயிரந்தான் இருந்தாலும் அவென் ஆம்பளடி""நாலு பேரு பாக்க இப்பிடி அடிக்கிறது நல்லது இல்ல""வயசுல சின்னவேன்கிறனால பொறுத்துக்கிட்டுப் போறான் ஒருநாள் இல்லாம ஒருநாள் எதுத்துட்டா அப்பொறம் நம்ம மூஞ்சில நாங்களே துப்பிக்கிற மாதிரி ஆயிரும் என்று அம்மாளக்கா வந்து அவளை உழுக்கும் வரை அவளின் கோபம் தணிந்திருக்கவில்லை.

எகிறிக் கொண்டு எழுந்தவன் அவிழ்ந்துக் கிடந்த சாரத்தை சுருட்டிப் பிடித்துக் கொண்டு ஓடத் தொடங்கினான். அன்று ஓடியவன்தான் அதற்கு பின் தோட்டப்பக்கமே தலை வைத்துப் படுக்கவில்லை.

அன்றுடன் விட்டது பீடை என்று அவளும் முழுமையாய் ஆன்மீகத்தில் கலந்தாள். பல தடவைகள் இப்படி வீட்டைவிட்டு ஓடியிருக்கிறான் அப்போதெல்லாம் வயிறு பசித்தால் இரண்டு நாட்கள் கூட நிற்க மாட்டான். ஆனால் இம்முறை ஐந்து நாட்களாகியும் வராமல் இருந்தது அவளுக்கு வியப்பாக இருப்பது அப்போதெல்லாம் அவனுக்காய் ஆக்கப்பட்ட சோறு விடியலில் நாய்களுக்குத்தான் கொட்டப்பட்டது.

தோட்டத்தில் பலரும் கைத்தம்பியை அங்கு கண்டதாகவும் இங்கு கண்டதாவும் வந்துச் சொல்வர். ஆனால் அவன் பேச்சை எடுத்தாலே எரிந்து விழுவாள் அவள். அந்த நாட்களில்தான் கிழவியின் மறைவு அதிகமாய் அவள் நெஞ்சை உருக்கியது. விடிய

விடிய சிமிலி லாம்புக்கு எண்ணெய் வார்த்து எரித்துக் கொண்டே கைத்தம்பிக்காய் காத்துக் கிடந்தவளுக்கு அவன் வராமலே போனது இன்னும் பெருத்த வேதனையைத் தந்திருந்தது.

ஆடி மாதத்தில் பொட்டுக்கு ஓய்வென்பதே கிடையாது. சாமம் வரைக்கும் அண்டை அயல் தோட்டங்களில் உள்ளவர்கள் எல்லாம் வரிசை கட்டி நின்று விடுவதால் விபூதி மந்திரித்துக் கொடுப்பதும் முத்துக்கல் போட்டுப்பார்ப்பதும் என்று இயங்கிக் கொண்டேயிருப்பாள். சில நேரங்களில் தோட்டத்து வேலைக்கும் போகாமல் இருந்து விடுவாள். ஆனால் இப்போதெல்லாம் சூனியம் வெட்டுவதற்கு மட்டும் ஒப்புக் கொள்வதில்லை.

மழை ஆடிக்காற்றுடன் சோவெனப் பெய்துக் கொண்டிருந்தது.

குரலை தாழ்த்தி ரோசி லயத்தைச் சுற்றிச் சுற்றி குரைத்துக் கொண்டிருந்தது. பொட்டுவுக்கோ இருப்புக் கொள்ளவில்லை. வழமையாகவே கைத்தம்பியை கண்டு விட்டால் குரலை தாழ்த்தி குரைக்கும் அதே தொனியில் ரோசி குரைத்துக்கொண்டிருந்தது அவளுக்கு பெரும் ஆறுதலாய் இருந்தது. உள்ளுக்குள் அவனை எதிர்பார்த்துக் கிடக்கும் பொட்டு தாழிட்டுக்கிடக்கும் கதவை விடிந்தது கூட தெரியாமல் வெறித்துக்கிடந்தாள்.

இப்படி பல இரவுகளை அவள் அழுதே கரைத்திருந்தாலும் யாராவது அவன் பற்றி பேச்செடுத்து விட்டால் போதும் அவன் வீடு வந்து சேராத துயரினை தூசண வார்த்தைகளை அள்ளித் தெளித்து சமாதானம் அடைந்துப்போவாள்.

ஆடிக்காற்றும் தொடர்ச்சியான மழையும் பாட்டியை இருமலில் போட்டுத் தாக்க, இடைவிடாது இருமி இருமி எச்சில் பணிக்கத்தை நிறைத்துக் கொண்டிருந்தாள். பொதுவாகவே பாட்டி நோயில் ்று

விழுந்து விட்டாள் பொட்டக்காவிடம்தான் விபூதி வாங்கிப் போடுவோம். அன்று மிகவும் முடியாதவளாகி மூச்சு விடுவதற்கே கஸ்டப்பட்டுக் கிடந்ததாள் பாட்டி. அம்மா நொய் நொய்யென குடையத் தொடங்கி விட்டாள் என்னை.

"எத்தன மொற சொன்னாலும் காதுல வாங்கிக்கவே மாட்டியே இருட்ட முன்னுக்கு போயி கொஞ்சம் விவுதி வாங்கிட்டு வாடினா கேக்க மாட்ட இப்ப பாத்தியா?" என்று என்னைத் திட்டிக் கொண்டே ஐடெக்ஸ் தைலத்தை பாட்டியின் தொண்டையில் இருந்து நெஞ்சு வரை பூசி தேய்விட்டுக் கொண்டே

"ஏன்டி இப்பிடி கத்திக்கிட்டு இருக்கேன் காதுலயே போட்டுக்க மாட்டேன்கிற ஒரு எட்டு எழும்பி போயி பொட்டு வூட்டுல லயிட் எரியுதானு பாரு"என்றதும் எழுந்து வந்து கதவை திறக்கிறேன் முகத்தில் அறைந்த காற்றும் சாரலும் உச்சி முதல் உள்ளங்கால் வரை நடுக்கியது.

வாசலில் நின்றவாறே "அம்மா' பொட்டக்காவூட்டுல லைட்டு எரியுது" என்றதும் "அடச்சீ ஏன் இப்பிடி காட்டு கத்து கத்துற அப்பிடியே ஒரு எட்டு போயி நான் சொன்னேனு கொஞ்சம் விவுதி வாங்கிட்டு "என்றதும் அரைக்கதவை விருட்டென திறந்துக் கொண்டு மழையையும் பொருட்படுத்தாமல் பிடித்த ஓட்டத்தை என்னாலேயே வா" கட்டுப்படுத்த முடியவில்லை. ஓடி வந்த வேகத்தில் தொப்பென பொட்டுவின் வாசல் கதவில் விழுந்த வேகத்தில் தாழ்பாள் தெறித்துவிழ படாரெனத் திறந்த கதவு சுவரில் மோதியடங்கியது. அங்கே பொட்டு ஆவேசக் காளியென கயிற்றில் தொங்கிக் கிடந்தாள். அது என்னை மீள முடியா அதிர்ச்சியில் தள்ள குப்பென வியர்த்து கொட்டி உடல் நடுங்கத் தொடங்கியது. விருட்டென எழுந்து கத்திக் கொண்டே வீட்டை நோக்கி ஓடுகிறேன்.

ஊதுவர்த்தியும் சாம்பிராணியும் கமகமக்கும் பணிய லயத்தை கோர மரணத்தின் நெடி ஆக்ரமித்திருந்தது. தோட்டம் கூடிக் கூடி வாயோயாமல் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தது. அது அவளின் கோர மரணத்தைப் பற்றி அல்ல அவள் வயிற்றில் ஜீவித்திருந்த கருவைப் பற்றி

****

# கொழும்புத்தம்பி

தோட்டம் திருவிழா சந்தோசத்தில் மூழ்கியிருந்தது.

நேரக் காலத்தை அனுசரிக்காமல் ஒலிக்கும் பக்தி பாடல்கள் லயத்தை கதிகலங்கச் செய்துக் கொண்டிருந்தது.

தோட்ட வீதிகளெல்லாம் வழமைக்கு மாறாக ஒளியூட்டப்பட்டிருந்தன. அம்மனின் வீதியுலாவைக் காண்பதற்கு பக்த அடியார்கள் தயாராகிக் கொண்டிருந்தனர். கண்டி, கொழும்பு பகுதிகளில் பிழைப்புக்காக சென்றிருந்தவர்களில் கணிமானோர் திருவிழாவைக் காண்பதற்கு வந்திருந்தனர்.

லயத்தில் வயசுப் பையன்கள் ஒருவரையும் காணமுடியவில்லை. லயமோ வெறிச்சோடிக்கிடந்தது. வாசலில் கட்டப்பட்டிருந்த வாழை மரங்களில் செருகியிருந்த மின்குமிழ்கள் ஒளிர்ந்துக் கிடந்தன. லயத்தில் மிஞ்சியிருந்த பெரிசுகள் முன்னைநாள் திருவிழா புராணங்களை வாயோயாமல் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது லயத்தில் கொழும்புத் தம்பியையும் காணவில்லை.

வழமையாகவே தோட்டத்தில் திருவிழா தொடங்கி விட்டால் லயத்து பையன்கள் கொழும்புத்தம்பியை சூழ்ந்து விடுவார்கள்.

கொழும்பு ஹோட்டல்களில் பராட்டா சுட்டும், கொத்தடித்தும் சம்பாதித்த பணத்தையெல்லாம் சாராயப் போத்தல்களாகவும் பியர்போத்தல்களாகவும் கரைப்பதற்கு கொழும்புத்தம்பியை மிஞ்சுவதற்கு தோட்டத்தில் ஆளில்லை. அன்றும் போத்தல்களை கண்ட பக்தப் பதறுகள் அம்மன் பிரசாதத்தைக் கண்ட திருப்தியுடன் ஆரவாரித்தனர்.

அன்றைய இரவும் மதுவுடன் கரைந்துக் கொண்டிருந்தது.

நேரம் இரவு பதினொரு மணியைக் கடந்திருந்தது. கொழும்புத் தம்பியின் வீட்டுக்கு முன்னால் போட்ட பைலா கூச்சல் சூடுபிடிக்கத்தொடங்கியிருந்தது. காதைக்கிழிக்கும் கானா பாடல்களுக்கு ஏற்றாற்போல உடலசைவுகளைக் காட்டி எல்லோரும் கூடிக் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களின் ஆட்டம், பாட்டத்தைக் கண்டு தீர்ந்துப்போன போத்தல்களும் பியர்டின்களும் நகைத்துக் கிடந்தன.

பனி நன்றாக இறங்கியிருந்தது. பனியின் தீவிரத்தில் ஏற்றப்பட்டிருந்த போதை கரையத்தொடங்கியிருந்தது. அப்போதுதான் ஞானம் வந்தாற்போல் வீதியுலா வரும் அம்மனை நினைத்துப்பார்த்த பக்தர்கள் கோயில் வாசலை அடைந்திருந்தனர். எல்லோரும் முழு போதையில் திளைத்திருந்தனர். பேண்டு வாத்தியங்கள் புது உற்சாகத்துடன் இசைக்கப்பட்டன. கொழும்புத் தம்பிக்கோ இருப்புக் கொள்ளமுடியவில்லை. பொட்டலில் இறங்கி ஆட்டத்தை தொடங்கி விட்டான். ஜெல் வைத்து மழித்து சீவப்பட்டிருந்த தலைமயிரும் உடலை ஒட்டிக்கிடக்கும் டீ சேர்ட்டும் டெனிமும் அணிந்திருந்த அவனை ஒளிவெள்ளம் சினிமா கதாநாயகன் கணக்காய் காட்டிக்கொண்டிருந்தது. கறுப்புக் கண்ணாடியை தலையில் பொருத்திய வண்ணமே

ஆடிக்கொண்டிருந்தான்.

தோட்டத்து இளசுகளின் பார்வைகள் தன்னையே மொய்த்துக் கொண்டிருப்பதாக எண்ணி பெருமிதத்தில் ஆழ்ந்திருந்தான் அவன் ஆனால் அவனின் கோமாளிதனத்தை கண்டு பலர் நகைத்துக்கிடந்தது அவனுக்கு தெரியாது. இசைக்கு ஏற்றாற்போல இடுப்பை வளைத்து வளைத்து அவன்காட்டிய நளினங்களில் அங்கிருந்த குமருகளில் அநேகர் வீழ்ந்திருந்தனர்.

விடிய விடிய ஆடி பலரையும் பரவசத்தில் ஆழ்த்தியிருந்தாலும் அவனின் பார்வை மட்டும் மல்லிகாவை சுற்றித்தான் வட்டமடித்துக் கொண்டிருந்தது. விழுங்குமாற் தன்னையே அவன் வெறித்துப்பார்க்கும் போதெல்லாம் வெட்கத்தால் நாணி குறுகி காலால் மண்ணில் கோலம் போடுவாள் அவள். பருவத்துக்கு வராத போதும் அவளின் ஆசை பருவத்துக்கு வந்திருந்தது. வயசுக்கு மீறிய பொலிவுடன் நிற்பதால் அவள் மீது தோட்டத்து பையன்களுக்கு ஒரு கண்ணிருந்தது. எத்தனையோ பையன்கள் முயற்சி களத்தில் குதித்திருந்தப்போதும் விழுந்ததென்னவோ கொழும்புத் தம்பிக்குத்தான்.

கொழும்புத்தம்பி வீட்டுக்கு வந்துவிட்டானென்றால் மல்லிகா ஸ்கூலுக்கு போவதேயில்லை. அவனின் ஒவ்வொரு அசைவுகளையும் பெரிதும் ரசிக்கப் பழகியிருந்தாள். அவன் என்னக் கேட்டாலும் சிரிப்பை மட்டும் பரிசளிக்கும் மல்லிகாவை வெகு சாமர்த்தியமாய் தன் வலையில் வீழ்த்தியிருந்தான்.

வயத்தில் மல்லிகாவுக்கு தனி மௌசு உண்டு. மல்லிகாவைப் எல்லோருக்கும் பிடிக்கும். எப்போதும் முகத்தில் சிரிப்புக்கு பஞ்சமிருக்காது. சக மனிதர்களோடு பழகுவதில் மட்டுமல்ல படிப்பிலும் கூட கெட்டிக்காரிதான் தன் தாயின் வெளிநாட்டு

பயணத்துக்கு பின்னர் குடும்ப பொறுப்பே அவள் தலையில் விழுந்தப்போதும் முகத்தில் சலனத்தைக் காணமுடியவில்லை. தாய்க்கு தாயாய் நின்று தன் குடும்பத்தை இழுத்துசெல்லுமளவுக்கு அவளுக்கு பக்குவம் இருந்தது. தான் உண்டு தன் வேலையுண்டு என்றோடிய வாழ்க்கை நதியில் கொழும்புத்தம்பின் வருகை சலனத்தை ஏற்படுத்தியிருந்தது.

ஒவ்வொரு நாளும் ஏதாவது சாக்கு போக்கு காட்டி ஸ்கூலுக்கு போகாமலிருந்து விடுவாள்.

எல்லோரும் வேலைக்கு சென்றவுடன் வெறிச்சோடிக்கிடக்கும் லயத்தில் தன் எண்ணங்களை எல்லாம் பாடல்களாய் ஒலிபரப்பிக் கொண்டிருப்பான் கொழும்புத்தம்பி அப்போதெல்லாம் அவளுக்கு உள்ளுக்குள் ஆயிரம் ஆசைகள் பூக்கும்.

ஆளைத் தூக்கும் சென்ட்வாசனையோடு அவன் அவளை அணுகும் போதெல்லாம் கிரங்கிப்போவாள். பளபளப்பாய் இருக்கும் அவனின் தோற்றத்தில் முழுமையாய் மயங்கி போயிருந்தாள். பேசிப் பேசி அவளை தன்வசப்படுத்தி விட்டிருந்தான். மல்லிகாவுக்கு படிப்பு முழுமையாய் தூரமாகியிருந்தது. பொறுப்புகள் எல்லாம் மறைந்து தொலைந்து புள்ளியாய் மாறிப்போக யாருமில்லா தனிமையில் அவனை சந்தித்து பேசுவதற்கும் பழகியிருந்ததாள். இப்போதெல்லாம் கொழும்புத்தம்பி தன்னை நெருங்கும் போது முன்பிருந்த பதற்றமோ அச்சமோ அவளிடம் இருக்கவில்லை. தனிமையில் ஆளில்லா இடங்களில் எல்லாம் அவனை சந்தித்துப் பழகத் தொடங்கியிருந்தாள்.

கொழும்புத் தம்பிக்கு பத்து வயசு இருக்கும் போது ஸ்கூலுக்கு போக மாட்டேன் என்று அடம்பிடிப்பான். லயத்தை சுற்றிச் சுற்றி ஓடி ஒளிந்து வேடிக்கை காட்டுவான். அநேகமான நாட்கள் பன்னீருக்கு

பயந்து விறகு கொட்டகையான அட்டாலில் ஒலிந்துக் கொண்ட நாட்கள் அதிகம். அதனால் பன்னீரிடம் வாங்கிய அடியுதைகளுக்கு அளவேயில்லை. ஆனாலும் அடியுதைகளுக்கு மசியாத அவன் ஒருநாள் யாருக்கும் தெரியாமல் பஸ்சேறி கொழும்புக்கு ஓடியதுதான் பத்து வருஷமாக தோட்டப்பக்கமே தலை வைத்துப் படுக்கவில்லை.

பன்னீரும் பார்க்காத சாமி கிடையாது அடிக்காத கோடாங்கி கிடையாது. எல்லோருமே பிள்ளையின் உயிருக்கு மோசம் இல்லை என்று சொன்ன வார்த்தையை தவிர ஆறுதலாய் வேறொன்றையும் சொல்லவில்லை.

ஒவ்வொரு தீபாவளிக்கும் பொங்கலுக்கும் கொழும்பே திரண்டு வந்து ஹட்டனில் இறங்கும் போது டவுன் முழுவதும் அவனை தேடித்திரிந்து ஓய்ந்து உலையும் பன்னீரின் கால்களில் பரவியிருக்கும் வலியில் மகன் மீதான பரிவிருக்கும். எதிர்பார்த்திருந்து எதிர்பார்த்திருந்தே பார்வதி நோயாளி ஆகி படுக்கையோடு படுக்கையாகி பரலோகமும் சென்று விட்டாள். ஒரே பிள்ளை என்று உருவி உருவி உறியில் சோறு கொடுத்து வளர்த்த மகனுக்கு தன் தாயிற்கு கொல்லி வைப்பதற்கும் கொடுத்து வைக்கவில்லை. பார்வதியின் மறைவுக்கு பின்னர் பன்னீரும் நோயாளியாகி விட்டிருந்தான்.

கவனிப்பாரற்று பன்னீரு புழுங்கிக் கிடந்த போதுதான் செல்லத் தொப்பையோடும் உப்பிய கன்னத்தோடும் கொழும்பு ஹோட்டல்களில் தின்று வளர்த்திருந்த மாமிசபிண்டமாய் வந்து கண்ணீரை துடைத்தான் கொழும்புத்தம்பி.

பத்து வயசில் தோட்டத்தை விட்டு ஓடும் போது கிழிந்த காற்சட்டையோடு மூக்கு வடித்து திரிவான். வயிறும் சட்டிமாதிரி

முட்டிக்கொண்டிருப்பதால் பாண்டி எனும் பெயருக்கு அடையாக சட்டி என்பது வந்து சேர்ந்து விட்டிருந்தது. அன்று முதல் "சட்டி பாண்டி" என்பது தோட்டம் அவனுக்கு சூட்டிய பெயராயிற்று. சட்டி பாண்டிதான் கொழும்பு விஜயத்தின் பின்னர் கௌரவமாக கொழும்புத்தம்பி என்றழைக்கப்பட்டான்.

விடிந்தும் விடியாமலும் கிடந்த காலைப் பொழுதை பனி ஆக்கிரமித்திருந்தது. கொழும்புத் தம்பி ஒலிபரப்பிக் கொண்டிருந்த குத்துப்பாடல்கள் லயத்தை உழுக்கிக் கொண்டிருந்தன.

"கொழும்புத் தம்பி" வந்து விட்டால் லயத்தில் ஏனைய வீடுகளில் ரேடியோவோ,எம்.பி பிளேயரோ போடத் தேவையில்லை எல்லா வீடுகளுக்கும் சேர்த்து அவனே ஒலிபரப்பி விடுவான். லயத்துக்கு வந்து விட்டானென்றால் லயத்தில் உள்ள பெரிய கட்டைகள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டுதான் இருப்பார்கள். காது கிழியும் கானா பாடல்களை கேட்டு சகிக்கமுடியாமல் கரித்துக் கொட்டுவார்கள். அவையெல்லாவற்றையும் விழுங்கி ஏப்பமிடும் பாடல்கள் திருவிழாவுக்கு மைக்செட் போட்டது மாதிரி எப்போதும் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

நேரங்காலம் இல்லாமல் பாடல்களைப் போட்டு தொல்லைபடுத்தும் போதெல்லாம் யாராவது வந்து முறையிட்டு விட்டால் வயசுக்கும் மரியாதையில்லாமல் எடுத்தெறிந்துப் பேசிவிடுவான். இப்படித்தான் ஒருநாள் பக்கத்து வீட்டு முனுசாமி

"தம்பி சின்னப்புள்ளைங்க தூங்க முடியாம கத்தி கதறுதுங்க பாட்ட கொஞ்சம் கொறச்சி வையி"

"ஊரு ஒலகமே ஒன்னோட பாட்டக் கேட்குதுனு நெனப்பா? மனுசன நிம்மதியா தூங்க கொட விட மாட்டேங்குற" என்று

சொல்லி வாயோயும் முன்னமே

"ஒனக்கு கஸ்டமுனா காதுல பஞ்ச வச்சி அடச்சிக்க இத்தன பேரு சும்மா இருக்கும் போது ஒனக்கு மட்டும் என்னாய்யா புதுசா காது சவ்வு கிழியிது"? வந்துட்ட பெரிய பஞ்சாயித்து தலவரு மாதிரி பொத்திக்கிட்டு போவியா?" என்று வானொலி பெட்டியின் சத்தத்தை இன்னும் கூட்டினான். அன்றிலிருந்து அவனிடம் யாரும் வாயைக் கொடுப்பதில்லை.

கொழும்பில் இருந்து வரும்போது கொண்டுவரும் காசு பையில் இருக்கும் வரை அவனின் ஆட்டத்தை யாராலும் அடக்க முடியாது. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருமுறைதான் கொழும்பில் இருந்து வருவான் வந்தாலும் இரண்டு வாரங்களுக்கு கிடந்து லயத்தையே ஒரு உழுக்கு உழுக்கி விடுவான். அதுவும் பாடசாலை விடுமுறை நாட்களில் வந்து விட்டான் என்றால் சொல்லவே வேண்டாம் லயத்தில் உள்ள குஞ்சு கொலவான்கள் எல்லாம் அவனையே சுற்றித் திரிவர்.

விடியற் காலையிலேயே பாடல்களை உச்சத்தாயில் ஒலிபரப்பி விட்டு பிரஸ்சை வாயில் பொருத்திவிட்டான் என்றால் அவனோடு பேசுவதற்கும் புதினம் விசாரிப்பதற்கும் ஒரு கூட்டம் கூடிவிடும். கொழும்பு புதினங்களை எல்லாம் பேசி பேசி வாயோய்ந்துப் போகும் வேளை சிக்னல் வாயோரமாய் காய்ந்து படிந்து பூத்துவிடும் அதுவரை அலறித்துடிக்கும் வானொலி பெட்டியின் கழுத்தை யாரும் முறிக்க முடியாது. அது கேட்பாரின்றி ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

முதல் நாள் சிக்னலோடு தொடங்கும் காலை நேரம் கடைசி நாளில் கரித்துண்டில் வந்து நிற்கும். வரை தொழிலுக்கு செல்ல வேண்டும் என்ற உணர்வு அவனுக்கு சுத்தமாய் இருக்காது.

உள்ளங்கையளவில் வைத்திருக்கும் கைபேசியில் அப்படி என்னதான் காட்டுவானோ தெரியாது அதனால் அவனை சுற்றி எப்போதும் ஒரு கூட்டமிருக்கும். பருவ வயசுப் பையன்களிடம் ஆசையை தூண்டி விடுவதில் கொழும்புத் தம்பி சமர்த்தன். ஆசை வார்த்தைகளை காட்டியே பலரின் படிப்பை கெடுத்து கொழும்புக்கு இழுத்து விட்டிருந்தான்.

ஊருக்கு வந்துப் போனான் என்றால் லயத்தில் உள்ள பையன்களின் நடையுடை பாவணை எல்லாமே மாறிவிடும். காப்பிரி கோழிகளின் மயிர் போல எல்லோரது தலைமயிரும் சிலிர்த்து நிற்கும். காற்சட்டை இடுப்பிலேயே நிற்காது குனிந்து நிமிரும் போதெல்லாம் அரைநிர்வாணக் கோலமாய் அருவறுப்பை ஏற்படுத்துவர். மண்டை ஓடுகளாலும் சிப்பிகளாலும் ஆன கழுத்து மாலைகளையும் கைப்பட்டிகளையும் அணிந்து திரியும் போதுதான் எம் பரம்பரை உணர்வுகளை சரியாக அறியக்கூடியதாக இருக்கும். இவற்றையெல்லாம் கேட்டால் அதுதான் ஸ்டைல் என்று ஒரு பதிலையும் வைத்திருப்பார்கள்.

ஒழுங்காக ஸ்கூலுக்கு சென்றுக் கொண்டிருக்கும் பையன்களும் இவன் வந்து போகும் போது அவனுடனே கொழுப்புக்கு ஓடி விடுவார்கள்.அதனால் லயத்தில் சண்டைகள் மூளும். லயம் ஒரு கொழும்புத் தம்பிக்கே இப்படி அல்லாடிப் போகும் போது அவனால் உருவாக்கப்படும் கொழும்புத் தம்பிகளால் என்னப்பாடு படப்போகின்றதோ என்று நினைத்தாலே ஈரக்கொலை நடுங்கிப் போகும்.

இது இப்படி இருக்கும் போதுதான் மல்லிகா கொழும்புத்தம்பியின் வலையில் வீழ்ந்திருந்தாள். தீவிரமாய் காதலில் வீழ்ந்திருந்த அவளுக்கு அவனே உலகமாகியிருந்தான். தன் தாயின் வெளிநாட்டுப் பயணத்துக்கு பின்னர் தனக்கிருக்கும் ஒரே ஆறுதல்

கொழும்புத்தம்பிதான் என்று எண்ணியிருந்தாள்.

இடுப்புவரை நீண்டு வளர்ந்திருக்கும் கூந்தலை வாரி சுருட்டியிருந்தவளின் பின்னழகை ரசிப்பதற்கு ஆயிரங்கண்கள் வேண்டும். வேட்டை நாய் கணக்காய் அவளின் மதாளிப்பு குறையாத அங்கங்களை கண்களால் அளப்பதில் கொழும்புத்தம்பி கைதேர்ந்தவன்.

மிளாறுகாடு அவளும் அவனும் தனிமையில் சந்திப்பதற்கான களமாகியிருந்தது. சரிந்துக் கிடக்கும் பள்ளங்களில் யாருக்கும் தெரியாமல் சந்தோஷித்திருந்தனர். கொழும்புத்தம்பிக்கு மல்லிகா கிறுக்கு தலைக்கடித்திருந்தது. மெதுமெதுவாய் தன் கபட நாடகத்தை தொடங்கியிருந்தான்.

கொழும்புத்தம்பியால் தீட்டப்பட்டிருந்த சூழ்ச்சியின் தீவிரம் புரியாமல் அப்பாவியாய் பலியாகிப்போனாள் மல்லிகா. மறுநாளில் இருந்து கொழும்புத்தம்பியை லயத்தில் காணவில்லை.

மல்லிகாவுக்கு உலகமே மருண்டநிலை அவனின் கைபேசிக்கு அழைப்பெடுத்து அழைப்பெடுத்து அவனின் இலக்கங்கள் மனப்பாடமாகியிருந்தது. ஆனால் அன்றைய நாளுக்கு பின்னர் தொலைபேசி நிறுத்தியே வைக்கப்பட்டிருந்தது. பேசி பேசி புதிய அனுபவங்களை தந்து விட்டு படிப்பை தூரமாக்கி கண்ணைக்கட்டி காட்டில் விட்டாற் போல் திடுமென மறைந்து விட்ட அவனை அவ்வளவு சுலபமாய் அவளால் மறக்கமுடியவில்லை. தனிமையில் கிடந்து உழன்றாள்.

வழமைக்கு திரும்புவதற்கு முயன்று முயன்று தோற்றுபோனவளுக்கு கொழும்புத்தம்பியின் ஞாபகம் வந்து வந்துப் போனது.
வீட்டில் யாருமில்லா தருணங்களில் அழுது தீர்த்தாள். மேசையில்

கிடக்கும் புத்தகங்களையும் கொப்பிகளையும் கண்ட மாத்திரத்தில் பொங்கி வெடிக்கும் அழுகையை அவளால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. குற்றமிழைத்த மனசு குறுகுறுத்து கிடந்தது.

நாட்கள் வெகுவிரைவாக கடந்திருந்தன ஸ்கூலில் இருந்து அவளுக்கான அழைப்பு வந்த வண்ணமே இருந்தது. நடந்தவற்றை எல்லாம் மறந்து விட்டு ஸ்கூலுக்கு செல்வதற்கு மனசு ஒப்பவில்லை. லயப்பகுதியை தவிர எங்கும் இருள் வியாபித்திருந்தது. வீட்டில் இருந்து சற்றுத்தள்ளியிருக்கும் கக்கூசுக்குள் இருந்து திடுமென எழுந்த தீச்சுவாலை லயத்தில் எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. உள்ளுக்குள் தாழிடப்பட்டிருந்த கதவை உடைப்பதற்கு போதும் போதுமென்றாகி விட்டநிலையில் உடைத்து பார்த்தப் போதுதான் வெந்து தணிந்திருந்தது மல்லிகாவின் உடல் என்பது ஊர்ஜிதமானது.

தோட்டம் மல்லிகாவின் மரணத்தின் பின்னணியில் இருக்கும் மர்மம் புரியாமல் பலதையும் பேசிக்கொண்டிருந்தது. பேசிப் பேசி வாயோய்ந்துப் போன தோட்டம் பின்னர் வழமைக்கும் திரும்பியது. ஆறு மாதங்கள் ஓடி மறைந்து விட்ட நிலையில் தோட்டம் தீபாவளி விஷேசத்தில் மூழ்கியிருந்தது.

விடிந்தால் தீபாவளி

லயத்தில் சனம் வருவதும் போவதுமாய் இருந்தனர். இரவில் இருந்து ஓயாமல் பட்டாசுகள் வெடித்து தீர்க்கப்பட்டன.

நேரம் அதிகாலை 5.00 மணியை நெருங்கிக் கொண்டிருந்தது.

இருளோடு கிடந்த பொழுதை உழுக்கினாற் போல கொழும்புத்தம்பி வீட்டில் இருந்து மீண்டும் பாடல்கள்

ஒலிக்கத்தொடங்கியிருந்தன.

லயம் கதிகலங்கி போனது.

கதவைத் திறந்துக் கொண்டு பலரும் வந்து, பார்வையை கொழும்புத்தம்பியின் வீட்டுப்பக்கம் வீசினர். பாடல்கள் அங்கிருந்து ஒலிக்கவில்லை. ஒட்டுலயத்தின் தொங்கல் வீட்டில் இருந்து ஒலித்துக் கொண்டிருந்தது. தோட்டப்பக்கமாய் வந்து பலர் லயத்தை எட்டிப் பார்த்தனர். பொழுது பளபளப்பாய் விடிந்திருந்தது. போனவருஷம் வீட்டுக்கு தெரியாமல் கொழும்புக்கு ஓடிய சுகுமாருத்தான் வந்திருந்தான்.

"பள்ளிக்கூடம் போகலாமா? அதுக்கு புத்தகத்த வாங்கலாமா? என்று எஸ்.பி.பீ பாடிக்கொண்டிருக்கிறார். பீலியில் வைத்திருந்த குடம் நிரம்பி வழிந்ததும் தெரியாமல் நாணி கோணி காலால் கோலமிடும் அடுத்த லயத்து சின்னப் பொண்ணு ஒலித்துக் கொண்டிருக்கும் காதல் பாடலில் கிரங்கியபடி நின்றுக் கொண்டிருந்தாள்.

****

# வகுப்பறைக் காவியங்கள்

*01*

அன்றும் வழமைப்போலவே வகுப்பறையினுள் நுழைந்தப்போது ஆகாஸ், தலையில் ரத்தம் ஒழுக நின்றிருந்ததைப் பார்த்த மாத்திரத்தில் ரவி சேருக்கு கோபம் தலைக்கேறியது. பதட்டத்தில் ஓடி வந்து விசாரித்தப்போது "மொட்டபாஸ் பென்சிலில் குத்திட்டு ஓடிட்டான் சேர்" என்று மாணவர்கள் கோரஸ் இசைத்தனர். காயம் என்னவோ சிறிதாக இருந்தாலும் காலை நேரம் என்பதால் ரத்தம் பீறிட்டுப்பாய்ந்தது. பஞ்சிக் கொண்டு ரத்தத்தை நன்றாக துடைத்து, மருந்திட்டு அவனை சமாதானப்படுத்தும் போதே முதலாம் பாடம் நிறைவடைந்திருந்தது. அந்த பதட்டத்தோடே மாணவர் வரவு டாப்பை கையில் எடுத்து விரித்தப்போது அதன் முகப்பு பக்கம் நாரென கிழித்து ஊசலாடிக்கொண்டிருப்பதைக் கண்ட ரவி சேருக்கு கோபம் இன்னும் அதிகமானது. பல்லைக்கடித்துக் கொண்டு ஆகாசை அழைத்தார். "என்னடா இதெல்லாம் இப்பிடி கிழிஞ்சி கெடக்கு" என்று கத்திய மாத்திரத்தில் அவன் மீண்டும் அழத்தொடங்கினான். அப்போது மேல்மூச்சும் கீழ்மூச்சும் வாங்கியப்படி டயானா எழுந்து "சேர் சேர் காலையில நம்ம மொட்டபாஸ் ஒப்பீஸ்ல இருந்து ரெஜிஸ்டர நல்லாத்தான் எடுத்துக்கிட்டு வந்தான். ஆகாஸ்தான் அடிச்சிப்புடுங்கினான்.

அதுனாலத்தான் ரெஜிஸ்டர் கிழிஞ்சி சண்ட வந்துச்சு" என்று ஒரே மூச்சில் கூறி அமர்ந்து விட்டாள். அப்போது கண்களில் நெருப்பை கொட்டி அவள் மீது பார்வையை வீசினான் ஆகாஸ். அது ஸ்கூல் விடட்டும் ஒனக்கு இருக்கு என்பது போலவே இருந்தது.

அதுவரைக்கும் மொட்டபாஸ் என்கிற பிரதீபன் பற்றி சிந்திப்பதற்கு ரவிசேருக்கு நேரம் இருக்கவில்லை. பொறிதட்டினாற் போல் சுருக்கென்று அவன் ஞாபகம் விழுந்து உள்ளத்தை உழுக்க, மெதுவாக எழுந்து வந்து பாடசாலையின் மைதானத்தில் விஸ்வரூபமாய் நிழல் பரப்பி நிற்கும் மூத்திரக்கா மரத்துக்கு பின்னால் பார்த்தப்போது வாய் மூடி அழுதுக் கொண்டு, மரத்தோடு மரமாய் சாய்ந்து, தேம்பி அழுதுக் கொண்டிருந்தான். பிரதீபன். ரவிசேரைக் கண்ட மாத்திரத்தில் ஓவென அழத்தொடங்கிய அவன் கைகள் இரண்டையும் மடித்து முகத்தை மூடிக்கொண்டு தேம்பினான். அத்தேம்பலோடு "நான் வேணுமுனு கிழிக்கல சேர் கடவுள் சத்தியமா சேர் நான் வேணுமுனு கிழிக்கல ஆகாஸ்தான் அழிச்சாட்டம் பண்ணி பொய் சொன்னான் சேர் அதான் குத்திட்டேன் சேர்" என்றுத் தேம்பினான். அவனை சமாதானப்படுத்துவதற்கு போதுமென்றாகி விட்டப்போதும் இடையிடையே தலைகாட்டும் தேம்பல் அவன் கழுத்து நரம்புகளை புடைக்கச்செய்தது.

ரவி சேருக்கு நெஞ்சு கலங்கி விட்டது. அவனின் முகத்தை உயர்த்திப்பிடித்து "இங்க பாரு பிரதீப் ஏய் இங்க பாருடா" என்று ஆறுதல் சொல்ல முயன்றார் ஆனால் குற்ற உணர்ச்சியில் தலையை தொங்கவிட்டுக் கொண்டு அப்போதும் அழுதுக்கிடந்தான் அவன்.
யாருக்கும் அடங்காமல் கட்டாக்காலிப் போல திரிந்து கிடக்கும் மொட்டபாஸ்க்கு எல்லா மாணவர்களும் பயந்துக்கிடப்பர். கையை ஓங்கி ஒரு குத்து குத்தினால் போதும் உயிர் போய்விடும் அவ்வளவு ஸ்ரோங்காய் அடித்து எல்லோரையும் துன்புறுத்தி விடுவான். முழு

மொட்டையாய் கிடக்கும் அவனது தலையில் பிறப்பில் இருந்தே மயிர் துளிர்க்கவில்லை என்தை மாணவர்கள் அவப்போது பேசிச்சிரிப்பர். அதுவே ஏனைய மாணவர்களில் இருந்து அவனை வேறுபடுத்திக் காட்டுவதால் பிரதீபன் என்றால் யாருக்கும் புரியாது மொட்டபாஸ் பிரதீப் என்றால்தான் எல்லோருக்கும் புரியும். ஆசிரியர்களும் கூட அவனை பாராமுகமாய் கண்டும் காணாமல் இருந்து விடுவதால் சில நேரங்களில் அவன் தன்னை சீண்டும் மாணவர்களை அடித்து காயப்படுத்தி விடுவதும் உண்டு. காலத்தின் மாற்றத்தோடு ரவி சேர் அவனை எவ்வளவோ மாற்றியிருந்தப்போதும் ஆரம்ப நாட்களில் அவன் செய்த சேட்டைகளை மறக்கமாட்டார்.

02

இப்படித்தான் இடமாற்றம் பெற்று முதல்நாள் பாடசாலை வளாகத்தினுள் நுழைந்த ரவி சேரினுள் இனம் புரியாத ஒரு நெருடல் நெஞ்சை நிறைத்தது. அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை பள்ளி பருவத்தில் ஓடியாடி சுற்றித் திரிந்த மண்ணில் இருபது வருடங்களுக்குப்பின் ஆசிரியராய் கால்பதித்தப்போது இலேசாய் கால்கள் நடுங்கின. ஒரு மாணவனாய் இருந்தப்போது கிடைத்த சந்தோசங்களை விடவும் இன்று இன்னும் மனசு நெகிழ்ந்துக் கிடந்தது.

ஒரு பாடசாலையில் இருந்து இன்னொரு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் போது என்னதான் அனுபவங்களையும், சாதனைகளையும் பெற்றிருந்தப் போதும் ஒரிரு வாரங்களுக்கு ரேகிங் கொடுக்கத்தான் செய்கிறார்கள். ரிலீப் டைம்டேபிளை கையில் கொடுத்து வகுப்புகளுக்கு அனுப்புவதே பெரிய ரேகிங் போலாகிவிடுகிறது.

அப்படித்தான் ரிலீப் டைம்டேபிளோடு முதல் நாள் எட்டாம் வகுப்புக்கு அனுப்பப்பட்ட போது மாணவர்கள் காட்டாறு போல அங்குமிங்கும் ஓடித்திரிந்துக் கொண்டிருந்தனர். அந்த மண்டபத்தில் ஆசிரியர்கள் யாரும் இருக்கவில்லை. ரவிசேரைக் கண்டதும் சில மாணவர்கள் பம்மி பயந்து வகுப்புகளில் வந்து அடங்கினாலும் மண்டபத்துள் சத்தம் குறைந்திருக்கவில்லை.

ஒரு மாணவன் மட்டும் மேசையில் இருந்து இறங்காமல் அப்படியே உறைந்து நின்றான். மரியாதை தெரியாத மாணவனாய் இருப்பான் போலும் என்று எண்ணிக் கொண்டு ஆசிரியர் எட்டாம் வகுப்பு எது என்று கேட்டப்போது வாய்திறக்காமல் ஆட்காட்டி விரலை உயர்த்தி வகுப்பை காட்டிவிட்டு அமர்ந்தான். மற்றொரு மாணவன். அப்போதும் மேசையில் இருந்து இறங்காமல் நிற்கும் அந்த மாணவன் ஆசிரியர் பார்க்காத போது அவரை வெறித்துப் பார்ப்பதும் அவர் பார்க்கும் போதெல்லாம் தலையை தொங்கவிட்டுக் கொண்டு ஒன்றும் அறியாதவன் போல் நிற்பதையும் கவனிக்கத் தவறவில்லை. பொறுமையாய் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த ரவிசேரின் தலை கொஞ்சம் மறைந்ததும் மேசையில் குதித்து நடனமாடத்தொடங்கிய மாணவனை சுற்றி நின்ற ஏனைய மாணவர்கள் "மொ-ட்-ட-பா-ஸ் மொ-ட்-ட-பா-ஸ்" என்று கூச்சலிடுவதும் அவர்களின் தாளகட்டுக்கு தன் இடுப்பை வளைத்து அவன் ஆடுவதையும் கண்ட ரவி சேரின் தலை கோபத்தால் நிறைந்தது. வாசற்கதவை உதைத்துத் தள்ளிவிட்டு பாய்ந்து உள்ளே வந்த வேகத்தில் மேசையில் ஆடிக்கிடந்த அவனை பிடித்திழுத்து அறையத் தொடங்கினார். மொட்டபாஸ் தடுமாறிப்போனான். ஆனால் அப்போதும் அவன் முகத்தில் சலனமில்லை. அழாமல் ஆசிரியரை வெறித்துக்கிடந்தான்.

நொடிக்குள் எல்லாம் நடந்து முடிந்த நிலையில் சக ஆசிரியர்கள் அங்கு குழுமி, தந்த ஆறுதலும் எச்சரிக்கையும் அவரை கொஞ்சம்

நிலைகுலையச் செய்தது. "என்னா சேர் நீங்க அவசரப் பட்டுடீங்க" "அவென் கோயில் மாடு சேர் அடிச்செல்லாம் அவன திருத்த முடியாது" வந்தமா வேலய பாத்தமானு போயிக்கிட்டே இருக்க வேண்டியதுதான்" "இதுகள எல்லாம் திருத்துற வேல நமக்கெதுக்கு?" என்று அள்ளி இறைத்த அட்வைஸ்களோடு அனைவரும் வகுப்புகளுக்கு சென்று விட்டனர்.

இடைவேளையின் போது சிற்றுண்டிச்சாலையில் அதிபர் என் தலையை கண்ட மாத்திரத்தில் "என்னா ரவி கோபப்பட்டுடீங்கப் போல" நாங்க எப்பவும் அவன கண்டுக்கிறது இல்ல கொஞ்சம் நிதானமா கென்டில் பண்ணவேணும்" "வெரி டேஞ்ஜரஸ் பெலே" நல்லவொரு சந்தர்ப்பம் பாத்துக்கிட்டு இருக்கிறேன். ஸ்கூல விட்டு நிப்பாட்டுறதுக்கு பொறுமையாப் போங்க" என்றதும் அதே குழப்பங்களோடு வகுப்பறைக்கு திரும்பினார் ரவிசேர். இவ்வளவு நேரமும் கத்தி இரைந்துக் கொண்டிருந்த வயிறு தேநீரை வாங்கிக் கொண்ட திருப்தியோடு அமைதியாகிப் போயிருந்தது. அப்போதும் அவன் மேசைக்கு மேலேறி நின்றிருந்தான்.

வரவு இடாப்பை பதிந்துவிட்டு, பிரதீபனை கீழே இறக்கி விசாரித்தப்போதுதான் ரவி சேருக்கு உண்மை புரிந்தது. தாரைத் தாரையாக கண்ணீரைக் கொட்டிக் கொண்டே "நானா மேசையில ஏறல சேர் பின்ஸ்பல்தான் வகுப்புல டீச்சர் இல்லாட்டி நீ மட்டும் மேசையில ஏறி நிக்கணுமுனு சொல்லியிருக்கார்" "அப்படி நிக்கலனா குண்டியில அடிப்பாரு சேர்" என்று வெளிப்படையாக வார்த்தையை இரைத்தப்போது கொல்லென்று வெடித்த சிரிப்பொலி வகுப்பறையை சலனப்படுத்தியது. அப்போது தன்னை காட்சிபொருளாக்கி மாணவர்கள் ஏளனப்படுத்துவதை பொறுக்கமுடியாத சந்தர்பங்களில்தான் பிரதீபன் வெகுண்டெழுகிறான் என்பதை புரிந்துக் கொள்வதற்கு ரவி சேருக்கு நீண்ட நேரம் தேவையாகப்படவில்லை.

முடியுமான பலம் கொண்டு அவனை அறைந்த கைகள் இப்போதும் வலித்துக்கொண்டிருந்தன. அப்போது உள்ளத்தில் சுரந்த கருணை அவன் தலையை தடவ, ஏதோ தீண்டவொன்னாதவன் போல் அவன் நெளிந்தது இன்னும் மனசை ரணமாக்கியது.

அன்றைய நாள் முழுவதும் மனசு அவனுக்காக அல்லாடியது. அச்சம்பவத்துக்கு பிறகு சில பல நாட்களாய் பிரதீபனை வகுப்பறையில் காணவில்லை. மாணவர்களிடம் விசாரித்தப்போது "அவென் ஒழுங்கா ஸ்கூலுக்கு வரமாட்டான் சேர்" "அவுங்க சித்தப்பாவோட கள்ளுக்கடைக்கெல்லாம் போவான் சேர்" கொலனி கடையில பொகயெல சுத்தவும் போவான் சேர்" என்று மாணவர்கள் போட்டி போட்டுக் கொண்டு பிராதுகளை அடுக்கினர். அப்போது அவன் பற்றி தனக்கு இருக்கும் மதிப்பீடு தவறானதோ என்று ரவி சேருக்கு மனசு குழம்பியது. பாடசாலை வளாகத்தில் தேடியறிந்ததில் பிரதீபனின் குடும்பம் ஒரு காலத்தில் வசதியாக வாழ்ந்ததென்றும் நண்பர்களோடு கடலுக்கு குளிக்கச் சென்ற அவனது தந்தை கடலுக்கு இரையாகிப் போனதால் தாய் சிற்றப்பனிடம் இவனை அடைகலப்படுத்தி விட்டு குடும்ப வருமானத்துக்காக வெளிநாட்டுக்கு ஓடியது தெரிய வந்தது. அன்று முதல்தான் ரவிசேரின் பார்வையில் முழுமையாய் விழுந்தான் பிரதீபன்.

03

ஓரிரு மாதங்களாய் பாடசாலை பக்கமே தலை வைத்துப்படுக்காமல் திடுமென மீண்டும் பிரதீபன் பாடசாலையில் பிரசன்னமானது பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.

அன்றும் வழமைப்போலவே இயங்கிக் கொண்டிருந்த பாடசாலையின் மெயின் ஹோலில் ஏதோ துர்மணம் வீசுவதாக

ஆசிரியர்களும் மாணவர்களும் விசனப்பட்டது பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. எல்லா மாணவர்களும் பிரதீபனிடம் இருந்துதான் துர்மணம் வீசுவதாக புகார் கொடுத்ததும் அவன் கண்களில் பயம் கவிழ்ந்துக் கிடந்தது.

ஆசிரியர்கள் மாணவர்களின் பைகளை தீவிரமாக சோதனையிட்டுக் கொண்டிருந்தனர். அப்போதுதான் பிரதீபனின் பையில் கிடந்த போத்தல் வெளியில் எடுக்கப்பட்டது மூக்கை அறுக்கும் துர்நாற்றம் அதிலிருந்துதான் கிளம்பிக் கொண்டிருந்தது. மாணவர்களை வகுப்பறைகளில் ஒழுங்குப்படுத்திவிட்டு பாடசாலை விசாரணை கொமிஷன் பிரதீபனையும் அவனிடம் இருந்த கசிப்பு போத்தலையும் கைப்பற்றிக் கொண்டனர்.

காரியாலயத்தில் பல மணி நேரங்களை வீணடித்து விசாரனை நடத்தியவர்கள் இறுதியாகத் தந்த அறிக்கை "கல்லுளி மங்கென் வாய தொறந்து எந்த உண்மையையும் சொல்லல" என்பதாகும். அடித்தும், மண்டியில் இருத்தியும், பயமுறுத்தியும் உண்மையை கறக்க முயன்றவர்கள் அவனின் அழுத்தம் கண்டு வாயடைத்து நின்றனர்.

பாடசாலை நிர்வாகம் அவனை இடைநிறுத்தி இருந்தது. மீண்டும் பாடசாலை இயல்புக்கு திரும்பிய நிலையில் வெளியாகியிருந்த புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு அதிபருக்கு பெருத்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. காலைக்கூட்டத்தில் பாடசாலையின் வரலாறுகளையும், அதன் வெற்றிகளையும் அடுக்கிக் கொண்டே போனார் அதிபர். வெற்றிக்களிப்பில் சில மாணவர்கள் தங்கள் முகங்களை இறுக்கமாய் வைத்துக் கொண்டு முன்வரிசையில் நின்றிருந்தனர்.

ரவி சேர் மட்டும் தன் கையில் கிடக்கும் பிரதீபனின் மடலில் கரைந்து மூழ்கியிருந்தார்.

மதிப்புக்குரிய ஆசிரியருக்கு பிரதீபன் எழுதிக்கிறது நான் நல்ல சொகம் நீங்க சொகமா வாழ கடவுள்கிட்ட வேண்டிக்கிறேன். சேர், ஓங்கக்கிட்ட தனியாகப் பேசுறதுக்கு பலமுறை முயச்சி செஞ்சேன் ஆனா முடியல. இந்த கடுதாசி ஓங்க கையில கெடைக்கிறப்ப நான் எங்க இருப்பேனு எனக்கே தெரியல ஸ்கூல்ல எல்லோரும் என்ன தப்பாத்தான் பாக்குறாங்க அது ஏன்னுதான் எனக்கு புரிய மாட்டிக்கிது. அன்னக்கி என்னோட பேக்குல கசிப்பு போத்த இருந்தது உண்மதான் சேர் எங்க சித்தப்பா கசிப்பு விக்கிறனால கொண்டு வந்து வெச்சிருக்கிறாறு எனக்கு சத்தியமா தெரியாது இத நான் சொன்னாலும் யாரும் நம்பமாட்டீங்க. காலையில வார அவசரத்துல இது தெரியாம பேக்க எடுத்துக்கிட்டு வந்துட்டேன். இந்த விசியம் சித்தப்பாவுக்கு தெரிஞ்ச நால கம்பிய பழுக்க வச்சி சூடு வச்சி, என்ன வீட்டவிட்டு வெரட்டிட்டாறு எனக்கு வாழவே புடிக்கல சேர் அதுக்கு சுட்டி நான் கொழும்புக்கு வேலக்கி போறேன். இனி ஓங்கள சந்திக்க கெடைக்குமானு தெரியல அதுனால ஓங்கக்கிட்ட ஒன்னு மட்டும் சொல்லனுமுனு தோனிச்சி "தெறமையான புள்ளைகளுக்கு மட்டுந்தான் பள்ளிக்கொடத்துல எடம் கொடுக்கிறாங்க எனக்கெல்லாம் அது ரெம்பத் தூரம் இல்லயா சேர்?"

*என்று நீளும் கடிதத்தின் ஒவ்வொரு வார்த்தையும் சம்மட்டிக் கொண்டு தலையில் அடித்தது போல் அவரினுள் விழ பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்காய் காலைக்கூட்டம் எழுப்பிய*

கரகோஷம் வானைப் பிளந்து ஒலித்துக்கொண்டிருந்தது. ஆனால் ரவி சேர் மட்டும் வகுப்பறைகளில் புதைந்துக்கிடக்கும் துயரக் காவியங்களுக்காய் அழுதுக் கிடந்தார்.

****

குறிப்பு

சிவனு மனோஹரனின் எழுத்துலகம் விசாலமானது. சமூகம் பற்றிய பிரக்ஞையும் மானுடம் மேன்மையுற வேண்டும் என்ற உணர்வும் கொண்ட படைப்புக்களாக இவரது எழுத்துக்கள் மிளிர்கின்றன. இவை சமுதாய மாற்றத்துக்கு வேண்டிய வலிமையான இயக்க உணர்வை வாசகர் மனதில் ஏற்படுத்துகின்றன.

**தி. ஞானசேகரன்**



## நம்பிக்கை தரும் எழுத்து

சிவனு மனோஹரனின் சிறுகதைகளை தொடர்ச்சியாக எதிர் கொண்ட வாசகனாய், அவரது முன்னைய இரு தொகுப்புகள் பற்றிய அவருடனான பகிர்வில், அச்சிறுகதைகளின் பலம், பலவீனங்களின் என் விமர்சன குரலை அவரது செவிமடுப்பும், உள்வாங்களும் பின் அவை பற்றிய உரையாடல்களில் அவர் காட்டும் ஆர்வமும் என்னை மிகுந்த ஆச்சரியத்தில் ஆழ்த்தும்.

ஒரு படைப்பாளன் தன் படைப்பு சார்ந்த நேர்மையான எதிர் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வதற்கான பக்குவம் கைகூடும்போது அவனது எதிர்கால படைப்புகளின் வீரியத்தின் விதை அப்போதே விதைக்கப்பட்டு விடுகிறது. அந்த வகையில எழுத்தாளர் சிவனு மனோஹரன் தன் முன்னைய இரு தொகுப்புகள் பற்றிய நேர்மையான எதிர் விமர்சனங்களினூடாக கற்றுக் கொண்டவையினை வைத்து தன் மூன்றாவது தொகுப்பை நின்று நிதானமாக தந்திருக்கிறார்.

இத்தொகுப்பில் சிவனு மனோஹரனின் படைப்புருவாக்கத்தில் இரண்டு விதமான மாற்றங்களைக் காண்கிறேன். முன்னைய தொகுப்புகளில் தன் சமூகத்தின் பொதுப்பிரச்சினைகளை பாடு பொருளாக்கியவர், முதன் முதலாக இத்தொகுப்பினூடாக அதே சமூகத்தின் தனி மனித அவலங்களையும் அதன் உளவியலையும் பேசியிருக்கிறார். அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறார்.

இரண்டாவது, இச்சிறுகதைகளின் செய் நேர்த்தியின்பால் அவரது அவதானம், மிகுந்த அக்கறை கொண்டதாக இருக்கின்றது. ஒரு சிறுகதையாளனுக்கு இருக்க வேண்டிய பிரதான பண்புகளில் ஒன்றிது. இப்பண்பு சிவனு மனோஹரனிடம் வளர்ந்து வருவதையிட்டு ஒரு நண்பனாய் பெருமிதமடைகிறேன்.

அண்மை காலமாக மலையக சிறுகதை போக்கில் காணப்படும் வரட்சிக்கு செழுமை சேர்க்கும் விதமாக இத்தொகுப்பின் வருகை மிகுந்த நம்பிக்கையைத் தருகிறது. ஒரு வட்டத்தில் சுழன்று திரியும் மலையக இலக்கியத்தின் எல்லை தாண்டும் கட்டுடைப்புக்கும், அதன் செழுமைக்கும் சிவனு மனோஹரனின் இப்பயணம் தொடர வாழ்த்துவதோடு; ஒரு வாசகனாய் மிகுந்த நம்பிக்கையோடு இன்னும் எதிர்பார்த்து காத்திருக்கிறேன்.

சுதர் மமகாராஜன்

400.00 LKR

9 78954 33902 9